# வணிகவியல் அகராதி




மணிவாசகர் பதிப்பகம்

அ.கி.மூர்த்தி


மணிவாசகர் பதிப்பகம்

5714

# வணிகவியல் அகராதி

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு வெளியீடு

அ.கி.மூர்த்தி

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு: 31, டிசம்பர், 1994.
திருவள்ளுவர் ஆண்டு: 2025
உரிமை: ஆசிரியர்க்கு
விலை: ரூ.20.00

மணிவாசகர் வெளியீட்டு எண்: 532

கிடைக்குமிடம்:

**மணிவாசகர் நூலகம்**

12–B, மேல சன்னதி, சிதம்பரம் – 608 001.

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை – 600 108.

28–A, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625 001.

15, ராஜ வீதி, கோயமுத்தூர் – 641 001.

28, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி – 620 002.

தொலைபேசி : சிதம்பரம் 23069 – சென்னை 561039
கோவை 37155 – மதுரை 36853

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 013.
போன்: 5950958

# பதிப்பாசிரியர்

## டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி யாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழு உறுப்பினர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல் களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ்நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித் துள்ளது. **பதிப்புச் செம்மல்** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

## மணிவாசகர் பதிப்பகத்தின் அகராதி வரிசை நூல்கள்

தமிழ் அகராதி

அறிவியல் அகராதி

வணிகவியல் அகராதி

மானிடவியல் கலைச்சொல் அகராதி

மொழியியல் கலைச்சொல் அகராதி

மூலிகை அகராதி

ஆங்கிலம் தமிழ் அகராதி

இலக்கிய வகை அகராதி

எதிர்ப்பத அகராதி

உரைச் சொற்களஞ்சியம்

# துறைதோறும் தமிழ்

**பதிப்பாசிரியர் தமிழவேள் ச. மெய்யப்பன்**

தமிழ் மொழி சொல் வளம் மிகுந்த மொழி. மானுடவியல் சார்ந்த கருத்துக்கள் எவற்றையும் தமிழில் எழுத முடியும். இலக்கியச் சொற்கள் நூறாயிரத்திற்கும் மேல் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் உள்ளன.

புதிய புதிய துறைகளில் புதிய கருத்துக்கள் நாளும் பெருகி வருகின்றன. சொல் புதிது, பொருள் புதிது எனப் பாரதியாரின் மொழிக் கேற்பத் தமிழில் துறைதோறும் சொற்கள் பெருகி வருகின்றன. புதிய துறைகளைக் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் புதிய அகராதிகள் காலத்தின் கட்டாயமாகின்றன. இந்த வகையில் வணிகவியல் அகராதி முன்னோடியாகத் திகழ்கிறது.

விடுதலைக்குப் பின் இந்திய மொழிகள் வீறு பெற்றன. தாய் மொழி மூலம் உயர்கல்வி கற்பிக்கும் நிலை மேலோங்கி வருகிறது. தமிழ் நாட்டில் தமிழ் வழிக் கல்வி வேண்டும் என்னும் கருத்து வேர் ஊன்றிவிட்டது. ஒவ்வொரு மொழியிலும் கலைச் சொல்லாக்கம் அரிய கலையாகவே உள்ளது. அறுபது எழுபது ஆண்டுகளாகத் தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சி நடந்து வருகிறது.

தமிழ்நாளிதழ்கள், தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் கலைக் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியம், கலைக் கதிர் வெளியீடான சொற்களஞ்சியத்தின் 3 தொகுதிகள், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மானிடவியலில் 10–க்கு மேற்பட்ட துறைகளில் வெளியிட்ட நூற்றுக்கு மேற்பட்ட பாடநூல்கள் முதலியவற்றில் கலைச் சொற்கள் பல்கிக் கிடக்கின்றன. அவற்றில் விரவிக் கிடக்கும் பொருளியல், நிதியியல், வணிகவியல் சொற்கள் அனைத்தும் இங்கே முறையாக அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற சரியான தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொருள் துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட சொல்லாக்கங்களே பெரிதும் பயன்படுத்தப் பட்டுள்ளன. பொருள் விளக்கத்திற்கு விளக்கங்களும் வரையறை

களும் சரியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழியில் உள்ளது போல ஒவ்வொரு துறைக்கும் தனி அகராதி வெளியிடும் பெரும் திட்டத்தில் இது முதல் நூலாகும். தமிழ் நாட்டில் அண்மைக் காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளிலும் வணிகவியல் கற்பிக்கப் படுகிறது. மேல் நிலைப் பள்ளிகளில் வணிகவியல் ஒரு பாடமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்லூரிகளில் பி.காம்., எம்.காம்., ஆங்கில மொழிவழிப் பயிலும் மாணவர்களில் 60 விழுக்காட்டினர் தமிழ் வழியிலேயே தேர்வு எழுதுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு வருக்கும் இந்த அகராதி மிகுந்த பயன் தரும்.

இவ்வகராதியை உருவாக்கியவர் தஞ்சையின் புகழ்பெற்ற பள்ளியில் பெருமைமிகு தலைமை ஆசிரியராகத் திகழ்ந்தவர்; பல்துறை அறிவினர்; ஆசிரியர்; பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல் சொற்களைத் தொகுத்து வகைப்படுத்திச் சரியான பொருள் எழுதி மிகச் சிறந்த அறிவியல் அகராதியை உருவாக்கியவர். சிறந்த மொழி பெயர்ப்பாளர்; ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழியாக்கம் செய்பவர். செய்வன திருந்தச் செய்யும் செம்மல். பரிசுகள் பல பெற்ற நல்லாசிரியர். இவரின் கடுமையான உழைப்பின் விளைச்சல் இந்நூல்.

10க்கும் மேற்பட்ட அகராதிகளை வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகம் இந்த அகராதியை பெருமகிழ்வுடன் வெளியிடுகிறது. எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டிற்கு வெளியிடும் சிறப்பு வெளியீடு 10இல் இது 10ஆவது. தமிழ் நாட்டு மாணவர்கள் இதனைப் பயன்படுத்தி வணிகவியல் அறிவு பெறுவதோடு வளர்தொழில் வளர்க்கும் தொழில் முனைவராக வருதல் வேண்டும் என்பது பதிப்பகத்தின் வேணவா துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்து நாளும் உயர்வோம்.

# முன்னுரை

**வணிகவியல் அகராதி** என்னும் இவ்வகர முதலி, இத்துறையில் முதன் முதலில் வெளிவரும் அகராதி.

பதிப்பு ஆசிரியரும் தமிழ் வேருமாகிய முனைவர் **ச.மெய்யப்பன்** அவர்கள் தமிழ்ப் பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின், முழு நேரமும் தமிழுக்கு முழுதும் பயனுள்ள நூல்களை வெளியிட்டு வருவது அனைவரும் பாராட்டி வரவேற்கத்தக்க முயற்சியாகும். அதன் விளைவுகள் இரண்டாக மலர்ந்தவையே **அறிவியல் அகராதியும், வணிகவியல் அகராதியும்** ஆகும்.

வணிகவியல், கணக்குப் பதிவியல் ஆகிய இரு துறைகளின் சொற்கள் 1500 திரட்டப்பட்டு, அவற்றிற்கு வாசகர்களை மையமாகக் கொண்டு எளிய விளக்கம் தரப்பட்டுள்ளது. இவ்விரு துறைகளோடு தொடர்புடைய பொருளியல், வங்கி இயல், காப்புறுதி முதலிய துறைகள் சார்ந்த சொற்கள் உரிய இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

கணக்கெழுதுங்கலை தமிழில், தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வரும் கலையே.

கணிப்பொறித் தாக்கம் பெறாத எத்துறையும் இக்காலத்தில் இல்லை. ஆகவே, அத்துறைச் சொற்களும் சில, வேண்டிய இடத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் இத்துறையில் அறிவியல் தாக்கம் பெற்ற உலர் நகலி, உருநகலி, தொலையதிர்வச்சு, உருக்காட்சி முதலிய பல சொற்களும் பதிவு பெற்றுள்ளன.

கலைச் சொற்களை **அளவை செய்யும் நெறிமுறைகள்,** இவ்வாசிரியர் நிலைபேறுள்ளதாக உருவாக்கியுள்ள அறிவியல் அகராதியில், அறிஞர்கள் ஏற்புடன் பின்பற்றிய சீரிய நெறி முறைகளே ஆகும். அவற்றை அவ்வகர முதலியில் கண்டு கொள்க.

அறிமுறைமட்டும் விளக்கப்பட்டுள்ள வணிகவியல், கணக்குப் பதிவியல் ஆகிய இவ்விருதுறைகள் பற்றி அனைவரும் குறிப்புதவி பெற, இவ்வகரமுதலி பெரிதும் பயன்படும். தமிழ்

மட்டும் கற்றவர் நலங்கருதித் தமிழ்ப் பொருளடைவும் கொடுக்கப் பட்டுள்ளது.

இவ்வகர முதலியை, அறிவியல் அகராதியை அடுத்து, மிகக் குறுகிய காலத்தில் வெளியிட்டுள்ள பதிப்பாசிரியர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களுக்குத் தோன்றாத் துணையாகவுள்ள மேலாளர் திரு. இரா. குருமூர்த்தி அவர்களுக்கும் இவ்வாசிரியனின் நன்றியும் வணக்கமும் உரியவாகுக. வாசகர் களை மையமாகக் கொண்ட இவ்வகர முதலிபற்றி அவர்கள்தம் கருத்தேற்றங்கள் பெரிதும் இனிது வரவேற்கப்படுகின்றன.

"மெய்ப்பொருள் காண்ப தறிவு"

அ.கி. மூர்த்தி

தொ.பே. 20139
தொல்காப்பியரகம்
திருவள்ளுவர் அச்சகம்
தஞ்சாவூர் 613 009.

# வணிகவியல் அகராதி

## A

**abandonment – கைவிடல்:** காப்புறுதி முறிக்குட்பட்ட உரிமையை வேண்டாமென்று விட்டுவிடல். இது கடல் துறைக் காப்புறுதியில் அடிக்கடி நடைபெறுவது. சரக்குக்கப்பல் நீரில் மூழ்கும்பொழுது இச்செயல் மேற்கொள்ளப்படும். இதனால் இதற்குரிய இழப்புத் தொகை காப்புறுதி செய்தவருக்குக் கிடைக்கும்.

✓**abatement – தள்ளுபடி:** வணிகப் பேரத்தில் பட்டியல் தொகையில் செய்யும் தள்ளுபடி.

**abbreviation – சுருக்கம்:** ஒரு சொல்லைச் சுருக்கி எழுதுதல். எ-டு. ந.க. நடப்புக் கணக்கு.

**abnormal gain – அளவுக்கு மேற்பட்ட ஆதாயம்:** வாணிபத்தில் ஏற்படும் மிதமிஞ்சிய இலாபம்.

**abnormal loss – அளவுக்கு மேற்பட்ட இழப்பு:** வாணிபத்தில் ஏற்படும் அளவுக்கு மீறிய இழப்பு.

**above the line – கோட்டுக்கு மேல்:** 1) ஒரு நிறுவனத்தின் ஆதாய இழப்புக் கணக்கினைக் கிடைமட்டக் கோட்டுக்கு மேலுள்ள பதிவுகளாகக் காட்டுவது. 2) விளம்பரச் செலவினைக் காட்டுவது. 3) ஒரு நாட்டு வருவாய்த் தொடர்பான நடவடிக்கைகளைக் குறிப்பது. ஒ. below the line.

**absorption – ஈர்ப்பு அமைப்பு:** நிறுமங்கள் ஒருங்கிணைந்து செயல்படும் மூன்று தன்மைகளுள் ஒன்று. ஏனைய இரண்டு இணைப்பு அமைப்பு, புறமறு அமைப்பு.

**absorption costing – அடக்கச் செலவு:** ஆகுஞ் செலவு. ஒரு விளைபொருளை உண்டாக்குவதிலுள்ள மொத்தச் செலவு. இச்செலவை உறுதி செய்த பின்னரே, விற்கும் விலையை உறுதி செய்ய வேண்டும். ஒ. marginal cost.

**acceptance by post – அஞ்சல் வழி ஏற்பு:** அஞ்சல் மூலம் ஒப்புகை பெறுதல்

✓**acceptance of bill – உண்டியல் ஏற்பு:** அளிக்கப்படும் மாற்றுச் சீட்டை வாங்கி ஏற்றுக் கொள்ளுதல்.

**acceptance – ஏற்பு:** மாற்றுச் சீட்டிலுள்ள ஒப்பம். இதன் நிபந்தனைகளை இதனைப் பெறுபவர் ஏற்றுக் கொள்கிறார் என்பது பொருள். "ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இன்ன ஊரில் கொடுக்கப்பட வேண்டியது" என்று எழுதப்படுவது. 2) ஏற்றுக்கொள்ளப்

பட்ட மாற்று உண்டியல் 3) ஒரு கோரிக்கையின் நிபந்தனைக ளுக்கு உடன் படல் பா. non – acceptance.

**acceptance credit** – ஏற்பு வரவு: அனைத்துலக வணிகத் தில் பொருள்களை விற்பதற் குப் பணம் வழங்கும் முறை. வணிக வங்கியின் மூலம் இறக் குமதியாளருக்கும் ஏற்றுமதி யாளருக்குமிடையே இது நடை பெறுவது.

**acceptance supra protest, acceptance for honour** – மறுப்பின் பேரில் ஏற்பு: ஒரு மாற்றுண்டியல் மறுக்கப்பட்ட பின், அதை அளிப்பவர், ஏற் பவர் ஆகிய இருவரின் நன் மதிப்பைக் காப்பாற்ற ஏற்கப் பட்டுப் பணம் வழங்கப்படுதல். நாணய ஏற்பு என்றும் கூற லாம்.

**accepting house** – ஏற்பில்லம்: மாற்று உண்டியல்களை ஏற்று உறுதியளிக்கும் நிறுவனம். ஏற்பகம் எனச் சுருக்கலாம்.

**acceptor** – ஏற்பாளர்: மாற்று உண்டியலை ஏற்றுப் பணம் பெறுபவர்.

**accommodation bill** – பண வசதி உண்டியல்: காப்புறுதி யாளராகச் செயல்படும் ஒருவர் கையெழுத்திடும் மாற்றுச்சீட்டு.

✓**account** – கணக்கு: 1) விலைப் பட்டி. 2) வணிக நடவடிக்கை களைப் பதிதல் 3) வங்கிவைக் கும் பற்று வரவுக் கணக்கு 4) ஒரு முகமையகத்திலிருந்து அதன் வாடிக்கையாளர் பெறும் கழிவு 5) ஆண்டுக் கணக்கு

**accountancy** – கணக்குப் பதிவியல்: கணக்கு வைப்புக் கலை.

**accounting, benefits of** – கணக்குப் பதிவியலின் நன் மைகள்: 1) இது நம்பகமான பதிவு. 2) இலாப நட்டத்தைக் கணக்கிட முடிகிறது 3) நிலு வைகளைக் கணக்கிட இயலு கிறது 4) சொத்துகளைக் கண் காணிக்க முடிகிறது. 5) நிதி நிலையை அறிய முடிகிறது.

✓**accountant** – கணக்கர், கணக்குப் பிள்ளை: ஒரு வணிக நிறுவனத்தின் வரவு செலவுகளை நாட்குறிப் பேட்டில் எழுதுபவர். அவை தொடர்பான அனைத்தையும் செய்பவர். பட்டயக் கணக்கர், சான்றிடப்பட்ட கணக்கர், நிதி நிலைக் கணக்கர், மேலாண் கணக்கர் என இவர்கள் பல வகைப்படுவர்.

**account book** – கணக்கேடு: கணக்கு வைக்கும் புத்தகம்.

**account day, settlement day** – கணக்குப் பார்க்கும் நாள்: முந்தைய கணக்கு நடவடிக்கை களை எல்லாம் முடிவு செய்யும் நாள்.

**account, executive** – கணக்கு நிறைவேற்றுநர்: ஒரு வாடிக்கையாளரின் தொழில் சரியாக நடக்க ஒரு முகமை யகத்தில் காரணமாக இருப் பவர்.

**account keeping** – கணக்கு வைப்பு: கணக்கைச் சரிவர வைத்துக் கொள்ளுதல்.

**account management group** – கணக்கு மேலாண் குழு: ஒரு முகமையகத்தில் தன் வாடிக் கையாளருக்காக எல்லா வேலைகளையும் செய்யும் பணிக்குழு. இக்குழுவிலுள்ள வர்கள் இயக்குநர், கணக்கு மேலாளர். கணக்குத் திட்டமிடு பவர், கணக்கு நிறைவேற்றுநர்

✓ **account payee** – கணக்குப் பெறுநர்: காசோலைக் கீறலில் எழுதப்படும் சொற்கள். பெறு பவர் தம் காசோலையை வரவு வைத்தே பணத்தைப் பெற இயலும். இது மோசடியைத் தவிர்ப்பது.

**account rendered** – கொடுக்கப் பட்ட கணக்கு: கணக்கு அறிக் கையில் காணப்படும் செலுத் தப்படாத தொகை. இதன் விபரங்கள் முந்திய அறிக்கை யில் அளிக்கப் பட்டிருக்கும்.

**accounts** – கணக்குகள்: ஒரு நிறுமத்தின் உயர் தொகையும் வரவும் செலவும். பா. account, book of accounts.

**accounts, kinds of** – கணக்கு வகைகள்: முதன்மையாக மூன்று: 1) ஆள்சார் கணக்கு கள்: தனிக்கணக்குகள் 2) சொத்துக் கணக்குகள் 3) பெயரளவுக் கணக்குகள்.

**accounts payable** – கொடுக்கப் பட வேண்டியவை: சரக்குகள் வழங்கியவருக்குக் கொடுக் கப்பட வேண்டியவை.

✓**account sale** – விற்பனைக் கணக்கு: ஒருவர் அல்லது ஒரு நிறுமத்தின் சார்பாக நடை பெறும் விற்பனை விவரங்கள் பற்றிய அறிக்கை. ஒப்புக் கொள்ளப்பட்ட செலவு, கழிவு முதலியவை போக எஞ்சி யுள்ள ஆதாயத்தைக் காண்பிப் பது.

**accounting** – கணக்கு வைப்பு: கணக்குப் பதிவு.

**accounting concepts** – கணக்குவைப்புக் கருத்துகள்: கணக்குவைப்புத் தொடர்பாக வுள்ள அடிப்படைக் கொள்கை நிலைக்கருத்துகள். இவை நான்கு வகைப்படும்:

1) **நிலைப்பு நிறுவனக் கருத்து:** நிறுவனம் என்பது நிலைத்துப் பயனளிப்பது.

2) **ஆக்கக் கருத்து:** பெருகிச் செல்லும் வரவு செலவுகளைப் பதிதல்.

3) **மாறாக் கருத்து:** ஒரு பருவத் திலிருந்து மற்றொரு பருவத்

திற்கு மாற்ற அடிப்படையில் கணக்குகள் தயாரித்தல்.

4) **அறிவாண்மைக் கருத்து:** ஆதாயத்தையும் இழப்பையும் கருத்தில் கொண்டு பாதுகாப்பு அடிப்படையில் தயார் செய்யப் படுங் கணக்கு.

**accounting convention** – **கணக்குப் பதிவியல் மரபு:** நடப்பு ஆண்டில் செய்யப்படும் கடன் விற்பனைத் தொடர்பான செலவுகள், இழப்புகள் ஆகிய வை அடுத்த ஆண்டுக் குரியன என்றாலும் அவை நடப்பு ஆண்டிலேயே எழுதப்பட வேண்டும்.

**accounting cost** – **கணக்கிடும் செலவு:** பா. cost.

**accounting cycle** – **கணக்கு வைப்புச்சுழல்:** பா. business cycle.

**accounting period** – **கணக்கு வைக்கும் காலம்:** இது ஆண்டுக்கு ஒரு தடவையாகும். பொதுவாக, ஏப்ரலிலிருந்து மார்ச் முடிய 12 மாதங்களுக் குரிய காலம்.

**accounting rate of return, ARR** – **புள்ளிவிவரக் கணக்கிடு வீதம்:** முதலீடு செய்யப்பட்ட இருப்புகளின் கணக்கீட்டு மதிப் பை விழுக்காடாகத் தெரிவித் தல். அதாவது, ஒரு முதலீட்டி லிருந்து எதிர்பார்க்கப்படும் நிகர ஆதாயம். ஒ. net present value,

**accrual, accrued charge** – **ஆகும் கட்டணம்:** குறிப்பிட்ட காலத்தில் கட்டணமாக உண் டாகும் தொகை. ஆனால், அக் காலத்திற்குள் செலுத்தப்ப டாதது. எ-டு. கடந்த இருமாத மின் கட்டணம்

**accrued concept** – **ஆக்கக் கருத்து:** முதன்மையாகக் கணக்கு வைக்கும் கருத்துகள் நான்கில் ஒன்று. நல்ல கணக்கு வைக்கும் பயிற்சி இதனை மையமாகக் கொண்டது.

**accrued benefits** – **ஆக்க நன்மைகள்:** ஓய்வூதியம் காரணமாக ஒருவர் பெறும் நலங்கள்.

✓**accrued interest** – **ஆகும் வட்டி:** கூடும் வட்டி. பொதுவாகச் சேமிப்புத் தொகைக்கு ஏறும் வட்டி.

**accumulated depreciation** – **தொகு தேய்மானம்:** ஓர் இருப் பின் மதிப்பிலிருந்து நீக்கப் படும் முழுத்தொகை. இவ் விருப்பு ஈட்டப்பட்ட நாளிலி ருந்து ஒவ்வோராண்டும் செய்யப்படுவது.

**a.dividend** – **தொகுபங்கு ஈவு:** ஒரு நிறுமத்தின் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்குக் கொடுக்கப் படாத ஈவுத் தொகை. ஆகவே,

ஐந்தொகையில் பொறுப்பாகக் காட்டப் பெறும்.

**a. profits** – **தொகுஆதாயங்கள்:** ஆதாயக் கணக்கு ஒதுக்கீட்டில் காட்டப்படும் தொகை. வரி, பங்கு ஈவு, காப்பு நிதி முதலிய வற்றிற்கு வழிவகை செய்த பின், அடுத்த ஆண்டுக் கணக் கிற்குக் கொண்டு செல்லப்படு பவை.

**accumulating shares** – **தொகுபங்குகள்:** ஒரு நிறு மத்தின் சாதாரண பங்குதாரர் களுக்கு வழங்கப்படும் பொதுப் பங்குகள். இவை பங்கு வீத மல்ல. இவற்றிற்கு வருமான வரி இல்லை.

**acknowledgement** – **ஒப்புகை:** ஒப்புக் கொண்டு அளிக்கும் சீட்டு. எ–டு. பணவிடை ஒப் புகை

**acquisition** – **கையகமாக்கம்:** வணிகத்தைக் கையகப்படுத் தல். ஒரு நிறுமம் முன்னரே நடந்து கொண்டிருக்கும் கூட்டு நிறுவனத்தையோ நிறுமத்தை யோ வாங்குதல் வணிகக் கைய கமாக்கம் எனப்படும்.

**a. accounting** – **கையகமாக்கும் கணக்கு வைப்பு:** ஒரு நிறுமத் தை மற்றொரு நிறுமம் எடுத்துக் கொள்ளும்பொழுது மேற் கொள்ளப்படும் கணக்கு வைப்பு முறைகள்.

**actuals** – **மெய்யீடுகள்:** இயற் புகள். வாங்கக் கூடியதும் பயன் படுத்தக் கூடியதுமான பொருள் கள். பா. spot goods.

**address** – **முகவரி:** ஒருவர் இருப் பிட விவரம்.

**adjudication** – **தீர்ப்பு:** நொடிப்பு நடவடிக்கைகளில் நீதிமன்றம் வழங்கும் முடிவு.

**adjustment** – **சரிக்கட்டல்:** கணக் குப் பதிவு நடவடிக்கை.

**adjustment entries** – **சரிக்கட்டுப்பதிவுகள்:** இலாப நட்டத்தைத் துல்லியமாக உணர, ஆண்டிறுதியில் இவை சில கணக்குகளில் செய்யப்படு பவை. எந்திரமாக இருப்பின், வாங்கிய விலையைக் காட் டாது, அதிலிருந்து தேய்மானத் தைக் கழித்துப் பதிவைச் சரி செய்ய வேண்டும்.

**advance** – **முன்பணம்:** சில்ல ரைச் செலவுக்காகக் கொடுக்கப் படும் முன்தொகை.

**advertising** – **விளம்பரஞ் செய்தல்:** அறிவிக்கவும் கவ ரவும் செய்யப்படும் தொடர்பு. எ–டு. செய்தித்தாள், தொலைக் காட்சி விளம்பரங்கள் வணிக வளர்ச்சிக்கு இன்றியமை யாதவை.

**advertising media** – **விளம்பர ஊடகங்கள்:** விளம்பரம் செய்யும் கருவிகள் – செய்தித் தாள், தொலைக்காட்சி.

**advice note** – **அறிவிப்புக் குறிப்பு:** தகவல் குறிப்பு. ஒரு நிறுமத்தார் தாம் வழங்கிய சரக்குகள் பற்றிய விளக்கக் குறிப்பைத்தம் வாடிக்கையாள ருக்கு அனுப்புதல். இது விலைப்பட்டி, வழங்குகுறிப்பு ஆகியவற்றிற்கு முன்னதாகச் செல்லும்.

**advise fate** – **அறிவுரைக் கேட்பு:** ஒரு வங்கியில் வழங்கப்பட்ட காசோலைக்குப் பணம் கொடுக் கலாமா என வசூல் செய்யும் வங்கி நேரிடையாக வழங்கிய வங்கிக்கு வேண்டுகோள் விடுத்தல்.

**advisory committee** – **அறிவுரைக்குழு:** ஒரு நிறுவன மேம்பாட்டிற்கு அறிவுரை வழங்கும் குழு.

**after date** – **பின்னாள்:** மாற்றுண்டியலில் குறிக்கப் படும் சொற்கள். உண்டியலில் குறிக்கப்பட்ட நாளிலிருந்து அதன் காலம் தொடங்கும். எ–டு. 30 நாட்கள்.

**after sales service** – **விற் பனைப் பின்பணி:** ஒரு பொருளை விற்பனை செய்த பின், அதனை உற்பத்தியாளர் பேணும் முறை. உறுதியளிப்பு இதில் அடங்குவது. எ–டு. வாங் கப்பட்ட கடிகாரம் ஓராண்டிற் குள் பழுதானால் இலவசமாக அதைப் பழுது பார்த்துத் தருதல். இது பிற பொருள் களுக்கும் பொருந்தும். விற் பனை உயர்வுக்கும் வணிக வளர்ச்சிக்கும் இது ஒரு சிறந்த வழி.

**after sight** – **பார்த்தபின்:** மாற்றுண்டியலில் குறிக்கப் படும் சொற்கள். அதைப் பெறு பவர் ஏற்புக்காக அதையளிக் கும் நாளிலிருந்து அவ்வுண்டி யலின் காலம் தொடங்க வேண்டும் என்பது பொருள்.

**agency** – **முகமையகம்:** வாடிக் கையாளர்களுக்காக வாணிபப் பணி செய்யும் அமைப்பு.

**agenda** – **நிகழ்ச்சி நிரல்:** கூட்ட நடவடிக்கைகளுக்குரிய வரை யறை. கூட்டம் பல நோக்கங் களுக்காக இருக்கலாம். எ–டு. நிறுமக் கூட்டம்.

**agent** – **முகவர்:** மற்றொருவருக் காகச் செயல் படுபவர். எ–டு. செய்தி முகவர்.

**agreement** – **உடன்பாடு:** இருவருக்கிடையே வாணிபம் குறித்து ஏற்படும் உடன் படிக்கை.

**agriculture bank** – **வேளாண் வங்கி:** வேளாண் வளர்ச்சிக் காக உள்ள வணிக நிறுவனம்.

**aids to trade** – **வணிகக் கருவி கள்:** முறையான வணிகவியல் ஆராய்வு, வணிகத்திற்காக ஏற்கும் நான்கு கருவிகள்: விளம்பரம் செய்தல், வங்கித்

தொழில், காப்புறுதி, போக்கு வரத்து.

**air consignment note** – வானப் போக்குவரவு அனுப்பீட்டுக் குறிப்பு: பா. airway bill.

**air freight** – வானூர்திக் கட்டணம்: வானக்கலத்தின் மூலம் சரக்குகளை அனுப்புவதற்குரிய கட்டணம்.

**air time** – பரப்பு நேரம்: 1) தொலைக் காட்சி அல்லது வானொலியில் விளம்பரத் திற்காக ஒதுக்கப்படும் நேரம் 2) வானொலி அல்லது தொலைக்காட்சியில் விளம் பரத்தைப் பரப்புவதற்குரிய நேரம்.

**airway bill** – வான வழிப் பட்டியல்: கட்டணம் செலுத்தி வானவூர்திமூலம் ஒருவர் சரக் குகளை அனுப்பும் ஆவணம்.

**allocation** – ஒதுக்கீடு: பங்கு ஒதுக்கீடு. செலவு ஒதுக்கீடு.

**allonge** – உண்டியல் ஒட்டு: மாற்று உண்டியலில் இணைக்கப்படுவது. கூடுதல் மேலொப்பம் செய்ய இதில் இடம் இருக்கும்.

**allotment** – பங்கு ஒதுக்கீடு: முன்னரே வழங்கப்படாதிருக் கும் பங்குத் தொகைகளை முறையாக வழங்கும் ஏற்பாடு.

**allottee** – பங்கு ஒதுக்கப் பெற்றவர்: பங்குக்குரியவர்.

**allowance** – படி: வரி விதிவிலக்குத் தொகை. குறிப் பிட்ட வரியைக் கணக்கீடு முன் இதைக் கழிக்க வேண்டும் எ–டு. அகவிலைப்படி.

**all risks policy** – அனைத் திடர்முறிமம்: காப்பீட்டுமுறி, பல இடர்களுக்கு எதிராகத் தனி உடைமைகளைக் கணக்கில் கொள்வது. அதில் அணிகலன் கள், புகைப்படக்கருவி, மின் னணுக்கருவி முதலியவை அடங்கும்.

**alphabetical filing** – அகர வரிசைக் கோப்பு: உயிரெழுத்து மெய்யெழுத்து நிரல்படிக் கோப்புகளை அடுக்குதல்.

**alternation of share capital** – பங்கு மூலதன மாற்றம்: ஒரு நிறுமத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தில் கூட்டுதல் குறைத் தல் முதலிய மாற்றங்களை வரையறைகளுக்கு உட்பட்டுச் செய்தல்.

**amalgamation** – இணைப்பு: இரண்டிற்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களை ஒன்றாக்கல் பா. merger.

**amendment of act** – சட்டத்திருத்தம்: இன்றியமையா மாற்றம் வேண்டும் பொழுது இது செய்யப்படுவது.

**amortization** – கடன் தீர் நிதிச் சேர்ப்பு: ஒழுங்காகப் பணத்தை ஒதுக்கிக் கடனை அடைத்தல்.

**amount** – **தொகை:** பட்டியல் தொகை. ரூபாயும் காசும் கொண்டது.

**amounts differ** – **தொகை வேறுபடல்:** மாற்றுண்டியல் அல்லது காசோலையில் பின் எழுதப் படுவது அல்லது முத்திரையிடப் படுவது. எழுத்தால் எழுதப்பட்ட தொகையிலிருந்து எண்ணால் குறிப்பிடப்படும் தொகை வேறுபடும்பொழுது. பணத்தைக் கொடுக்காமல், வங்கியர் அதனைத் திருப்பி அனுப்புவர்.

**analytical petty cash book** – **பகுப்புச் சில்லரைக் கணக்குப் புத்தகம்:** சில்லரைச் செலவினங்களுக்காக உள்ளது.

**annual accounts** – **ஆண்டுக் கணக்குகள்:** சட்டதிட்டத் திற்குட்பட்டு ஆண்டுதோறும் ஒரு நிறுவனம் தன் நிதிநிலை அறிக்கைகளைச் செய்தித்தாளில் வெளியிடல். இவற்றில் ஐந்தொகை, வரவு செலவுக் கணக்கு, நிதி மூலங்கள் முதலியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

**annual general meeting** – **ஆண்டுப் பொதுக் கூட்டம்:** ஒரு நிறுமத்தின் பங்குதாரர்களின் ஆண்டுக் கூட்டம் ஒவ்வோராண்டும் நடைபெறுவது. இதில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் வழங்கப்படும். இயக்குநர்கள், தணிக்கையாளர்கள் நியமனம் செய்தலும் அவர்களுக்கு ஊதியம் வழங்கலை உறுதி செய்தலும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப் பெறும்.

**annual report** – **ஆண்டறிக்கை:** ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் கொண்டது. பங்குதாரர்களுக்கு வழங்கப் படுவது.

**annual return** – **ஆண்டு ஈவு:** ஆண்டு விவரத் தாக்கல். நிறுமங்கள் சட்டப்படி நிறுமங்களின் பதிவாளருக்கு ஆண்டுதோறும் நிறுமப் பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன் அனுப்பப்படுவது. இதில் நிறுமச் சட்டப்படி தேவைப்படும் எல்லா விவரங்களும் இருக்கும்.

**announcement** – **அறிவிப்பு:** நிறுமம் பற்றிய செய்தித் தெரிவிப்பு.

**annuitant** – **ஆண்டுத் தொகை பெறுபவர்:** குறிப்பிட்ட தொகையை ஓர் ஆண்டில் பெறுபவர்.

**annuity** – **ஆண்டுத் தொகை:** ஒப்பந்தப்படி ஆண்டுக்கொரு தடவை காப்புறு நிறுமத்திற்குச் செலுத்தப்படும் தொகை.

**annuity method** – **ஆண்டுத் தொகை முறை:** இம் முறையில் ஒரு சொத்தினை வாங்கியதில் ஈடுபடுத்தப்பட்ட முதலில் ஏற்படுகிற வட்டி நட்டம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அந்த வட்டி சொத்தின் ஏட்டு மதிப்பில் கணக்கிடப்படுகிறது. வட்டிக்கணக்கில் வரவு வைக் கப்படுகிறது. கழிக்கப்பட வேண்டிய தேய்மானமானது, ஆண்டுத் தொகை வாய்பாட்டி லிருந்து கணக்கிடப்படுகிறது.

**ante date** – **முன்னாள்:** ஒரு காசோலையை அது எடுக்கப் படும் நாளுக்கு முன் தேதி யிடல்.

**applicant** – **விண்ணப்பதாரர்:** விண்ணப்பம் செய்பவர்.

**application** – **விண்ணப்பம்:** விண்ணப்பப் படிவம்.

**application fees** – **விண் ணப்பக் கட்டணம்.**

**application form** – **விண் ணப்பப் படிவம்:** ஒரு புதிய நிறுவனம் பொது மக்களிட மிருந்து பணம் திரட்ட வெளி யிடும் படிவம். அதன் வாய்ப்பு கள் அல்லது தகவல்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**appreciation** – **உயர்வு:** 1) பண வீக்கத்தால் இருப்பின் மதிப்பு கூடுதல் 2) நாணயத்தின் மதிப்பு கூடுதல் ஒ. depreciation.

**appointment** – **அமர்வு:** ஒரு நிறுமத்தில் இயக்குநர், பணி யாளர் முதலியோரை நியமனம் செய்தல்

**apportionment** – **பங்கீடு:** ஆதாயத்தைப் பகுத்துக் கொடுத் தல்.

உ.உ.

**appraisement** – **மதிப்பீடு:** ஒரு பொருளின் மதிப்பை உறுதி செய்தல்

**appropriation** – **ஒதுக்கீடு:** 1) ஒரு நிறுமம் தன் நிகர ஆதாயத்தை ஒதுக்கி வைத்தல். இதில் வருமான வரி செலுத் தல், ஈவுத் தொகை அளித்தல் முதலியவை அடங்கும்.

2) கடனுக்காக ஒதுக்கி வைக்கப்படும் தொகை.

3) ஒப்பந்தப்படி வழங்கப்பட வேண்டிய குறிப்பிட்ட சரக்குக் குரிய ஆவணம்.

**appropriation of payments** – **செலுத்து தொகை ஒதுக்கீடு:** செலுத்தப்பட வேண்டிய தொகையை ஒதுக்கிவைத்தல்.

**arbitrage** – **விலை வேற்றுமை வாணிபம்:** பற்பல சந்தை களில் நிலவும் விலைகளி னால் ஆக்கம் பெறுவதற்காக உண்டியல்களில் அல்லது பங்கு களில் நடத்தும் வாணிபம்.

**arrangement** – **உளவடைப்பு:** கடன் கொடுத்தவருக்குக் கட னாளி கடன் தொகையைச் சிறுகச் சிறுகக் கொடுக்கச் செய்து கொள்ளும் ஏற்பாடு. திவால் நிலையில் நடை பெறுவது.

**arrears** – **நிலுவைகள்:** வர வேண்டிய தொகைகள்.

**arrears of dividend** – **பங்கு ஈவுப் பாக்கி:** வரவேண்டிய பங்குத் தொகை.

**articles of association** – **சங்க நடை முறை விதிகள்:** ஆட்சி மேலாண்மைபற்றிய நிறும விதிகளும் ஒழுங்காற்று ஆணை களும் இத்தொகுப்பில் அடங்கி இருக்கும். தோற்றுவிப்பாளர் கள் இவ்விரு ஆவணங்களிலும் ஒப்பமிடுவர்.

**artificial person** – **செயற்கை ஆள்:** சட்டத்தினால் மட்டும் அடையாளம் கண்டறியக்கூடிய ஆள். எ–டு. நிறுமம். இதன் மீது வழக்குத் தொடரலாம். அது பிறர் மீது வழக்குத் தொடர லாம். ஆகவே, ஓர் ஆள் என்று கருதப்படுவது. ஆனால், அது உண்மை ஆளோ தனி ஆளோ இல்லை.

**ascertained goods** – **அறுதி யிட்ட சரக்குகள்:** உறுதிசெய்யப் பட்ட சரக்குகள்.

**as per advice** – **அறிவிப்புப்படி:** மாற்றுண்டியலில் எழுதப்படும் சொற்கள். பெறுபவர்மீது உண்டியல் வரையப் பட்டுள்ளது என்று பொருள்.

**assembled stock** – **உடன்பாட்டு இருப்பு:** ஈடு. வழக்கமாக, இது பொதுப் பங்குத் தொகை யாகும்.

✓ **asset** – **இருப்பு, சொத்து:** தொட்டோ தொடாமலோ உணரக்கூடிய பொருள். நிலம், வீடு, எந்திரம் முதலியவை தொட்டு உணரக் கூடியவை. நற் பெயர், நூலுரிமை முதலியவை தொட்டு உணர இயலாதவை பா.deferred asset.

✓ **asset value** – **இருப்பு மதிப்பு:** சொத்து மதிப்பு, பொறுப்பு களை நீக்கி, ஒரு நிறுமத்தின் சொத்துகளின் மொத்த மதிப் பை, அதன் பொதுப் பங்குத் தொகைகளால் வகுக்கக் கிடைக்கும் ஈவு. அதாவது, ஒவ்வொரு பங்குத் தொகைத் குரிய மதிப்பும் இதில் அடங்கும்.

✓ **assignee** – **உரிமை மாற்றம் பெறுபவர்:** உரிமை மாற்றத் தை நுகர்பவர்.

✓ **assignment** – **உரிமை மாற்றம்:** ஒருவர் தம் சொத்தையோ ஓர் ஆவணத்தையோ இன்னொரு வருக்கு மாற்றுதல்.

✓ **associate** – **கூட்டாளி:** பங் காளார்.

✓ **assurance** – **காப்புறுதி:** சாவு முதலிய நிகழ்ச்சிகளுக்கு எதி ராகக் காப்பீடு செய்தல். பா. life assurance.

✓ **assured** – **காப்புறுதி பெற்றவர்:** ஆதாயத்தை அடையக் காப்புறுதியில் குறிக்கப் பட்டவர்.

**assured tenancy** – **காப்புறுதி பெற்ற குடிவாரம்.**

**at best** – **இயன்ற வரை:** முடிந்த வரை. கிடைக்கக்கூடிய விலை யில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

பங்குத் தொகை, இருப்பு முதலியவற்றை வாங்கவோ விற்கவோ தரகருக்கு அளிக்கப்படும் குறிப்பு.

✓ **attachement** – **பற்றுகை:** சொத்தைப் பறிமுதல் செய்தல்.

**attendance book** – **வருகை ஏடு:** பணிக் குழுவினர் அன்றாடம் வேலை நாட்களில் வருகைப் பதிவுசெய்யும் ஏடு.

✓ **at sight** – **பார்வையில்:** அளித்தவுடன் பணம் பெறுதல்.

**auction** – **ஏலம்:** ஒரு பொருளைப் பேரம் பேசி விலைக்கு விற்றல்.

**audit** – **தணிக்கை:** ஒரு நிறுமத்தின் ஆண்டுக் கணக்குகளை ஆய்வு செய்தல். இது புறத்தணிக்கை, அகத்தணிக்கை என இரு வகைப்படும். புறத்தணிக்கையே சிறந்தது. இது தகுதிபெற்ற தணிக்கையாளரால் செய்யப்படுவது, சட்ட உரிமை கொண்டது.

**auditor** – **தணிக்கையாளர்:** தணிக்கையை மேற்கொள்பவர். இவர்கள் புறத்தணிக்கையாளர்கள், அகத்தணிக்கையாளர்கள் என இரு வகைப்படுபவர். புறத்தணிக்கையாளர்கள் பெரிதும் விரும்பப்படுபவர்.

**auditor's remuneration** – **தணிக்கையாளர் ஊதியம்:** தணிக்கைக்காகத் தணிக்கையாளருக்குக் கொடுக்கப்படும் குறிப்பிட்ட தொகை.

**auditor's report** – **தணிக்கையாளர் அறிக்கை:** தணிக்கையாளர் தாம் செய்த தணிக்கை குறித்து அளிக்கும் அறிக்கை. இது எல்லா விவரங்களையும் கொண்டிருக்கும். ஒரு நிறுமத்தின் நிலையைக் காட்டும் ஆடி இது.

**authorized share capital** – **அனுமதிக்கப்பட்ட பங்கு முதல்:** பா. share capital.

**authority** – **அதிகாரம், அதிகாரத்தார்:** ஆணை உரிமை, ஆணை உரிமையாளர்.

**available earnings** – **கிடைக்கக் கூடிய சம்பாதிப்புகள்.**

✓ **average bond** – **சராசரிப் பத்திரம்:** தேவைப்படின், பொதுச் சராசரி அளிப்புகளைக் கொடுப்பதற்குரிய உறுதிமொழி.

**average clause** – **சராசரி உட்பிரிவு:** தீக்காப்புறுதி முறியில் பயன்படுவது. ஓர் உரிமை கோரலில் கொடுக்கப்படும் தொகை, காப்புறுதி செய்யப்பட்ட இன மதிப்பின் வீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பது அவ்விதி.

**average cost** – **சராசரி ஆக்கச் செலவு:** சராசரி அடக்கச் செலவு, ஓரலகு உற்பத்திக்கு ஆகும் சராசரிச் செலவு.

**average loss** – **சராசரி இழப்பு:** சராசரி நட்டம்.

**average stock** – **சராசரி இருப்பு** இருப்பு எடுப்புகளைக் கணக்கிடும் முறை. இதன்படி இருப்பிலுள்ள சரக்குகளின் சராசரி அடக்கத்திலிருந்து சரக்குகள் எடுக்கப்படும்.

**average variable cost** – **சராசரி மாறும் அடக்கச் செலவு:** உற்பத்தி அலகுகளின் மாறும் அடக்கச் செலவைக் குறிப்பிட்ட காலத்தில் சராசரி எடுத்தல்.

**aviation broker** – **வானப் போக்குவரவுத் தரகர்:** வானூர்திப் பயணம், வானூர்தியில் சரக்குகளைப் பதிவு செய்தல் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்பவர்.

**aviation insurance** – **வானப் போக்குவரவுக் காப்புறுதி:** வானூர்திச் சரக்குகள், உயிரிழப்பு, பொருள் இழப்பு ஆகியவற்றிற்குக் காப்பீடு செய்தல்.

**award** – 1. **தீர்ப்பு:** நடுவர் தீர்ப்பு முடிவு, 2) **விருது:** மாநில விருது, மையவிருது.

# B

**back date** – **பின்னாளிடல்:** பின் தேதி குறித்தல். 1) பயன் கருதி ஓர் ஆவணத்தில் அது எழுதப்பட்ட நாளுக்கு முன்னதாகத் தேதியிடல் 2) சம்பள உயர்வு, அக விலைப்படி முதலியவை பின் தேதியிலிருந்து கொடுக்கப்படுபவை.

**backing of a bill** – **உண்டியலை ஆதரித்தல்:** மாற்றுச் சீட்டை அரவணைத்தல்.

**bailor** – **ஒப்படைப்பவர்:** சரக்கைக் கொடுப்பவர்.

**bailee** – **ஒப்படைப்பைப் பெறுபவர்:** சரக்கைப் பெறுபவர்.

**bailment** – **ஒப்படைப்பு:** சரக்கு வைத்திருப்பவர் சரக்கு பெறுபவரிடம் சரக்குகளைக் கடனுக்காகவோ பாதுகாப்பிற்காகவோ ஒப்படைத்தல். ஒப்பந்த நிபந்தனைகள்படி இது நடைபெறும். சரக்குகள் திரும்பப் பெறக் கூடியவை.

**balance** – 1) இருப்பு 2) சம நிலை.

**balance of payments** – **அயல் நாட்டுக் கொடுப்பு நிலை:** ஒரு நாடு அயல் நாட்டுடன் கொண்டுள்ள கணக்கு நடவடிக்கைகள். அதாவது, கொடுக்கல் வாங்கல். இது நடப்புக் கணக்கு, மூலதனக் கணக்கு எனப் பலவகை. இவ்விரண்டில் நடப்புக் கணக்கு வணிகக் கணக்கே. இது இறக்குமதி ஏற்றுமதி இருப்பு நிலையைப் பதிவு செய்வது. மொத்தத்தில் கணக்குகள் எப்பொழுதும் சம நிலையில் இருக்க வேண்டும். கொடுப்பு நிலையில் உபரியோ

பற்றில் குறையோ துணைக் கணக்கில் சமநிலை யின்மையைக் காட்டும். அந்நியச் செலவாணிக் காப்பு கள் குறைகின்றன அல்லது கூடுகின்றன என்பது இதன் பொருள். கொடுப்பு நிலைப் புள்ளி விபரங்களை அளிப் பதற்குரிய மரபுகளை அனைத் துலகப் பண நிதியம் பரிந் துரை செய்துள்ளது.

**balance of trade — வணிக இருப்பு நிலைக் குறிப்பு:** ஒரு நாட்டின் வணிக நிலையின் முடிவுகளைக் காட்டும் கணக்குகள் நடப்புக் கணக் கைத் தோற்றுவிப்பவை. கொடுப்பு நிலைக் குறிப்பின் ஒரு பகுதி. புலனாகக் கூடி யவை புலனாகாதவை ஆகிய இரண்டையும் கொண்டவை. புலனாகுபவை: வணிகப் பொருள்களான ஏற்றுமதிகள், இறக்குமதிகள். புலனா காதவை: காப்புறுதி, நிதி, சுற்றுலா முதலியவை தொடர் பான செலவினங்கள்.

**balance sheet — ஐந்தொகை:** இருப்பு நிலைக் குறிப்பு. கணக்குத் தொகுதியிலுள்ள முதன்மையான அறிக்கை களில் ஒன்று. ஆண்டு இறுதி யில் கணக்கு முடிப்பின் பொழுது, ஒரு நிறுவனத்தின் நிதி நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுவது. இதி லுள்ள மூன்று முக்கிய தலைப்புகளாவன:

1) **இருப்புகள்:** இவை எப் பொழுதும் பொறுப்புகளுக்கும் முதலுக்கும் இணையாக இருக்க வேண்டும்.

2) **பொறுப்புகள்:** கொடுக்கப் பட வேண்டியவை.

3) **முதல்:** பல வடிவங்களில் இருப்பது. ஐந்தொகை என்னும் நிதிநிலை அறிக்கை யை இருநிலைகளில் நோக்க லாம்:

1) **நிறுவனச் சொத்தின் அறிக்கை:** இந்நிலையில் பொறுப்புகள் நீங்கிய சொத்து கள் முதலுக்குச் சமமாக இருக் கும். இது நிறுவன உரிமை யாளர்களுக்குரியவை.

2) **இருப்புகளின் ஈட்டு அறிக்கை:** இருப்புகளுக்கு எவ் வாறு நிதிவசதி கிடைத்தது என்பது. இது உரிமையாளர் களின் முதலாலும் கடன் வாங்க லாலும் கிடைப்பது. வரவு, செலவு என்னும் இரண்டு தன்மைகளும் சமமாக இருப்ப தால், இவ்வறிக்கை ஐந்தொகை எனப்பெயர் பெறுகிறது. தவிரப் பேரேட்டுக் கணக்கு இருப்பு நிலைக் குறிப்புகளைக் கொண்டிருப்பதாலும் இதற்கு அப்பெயர்.

**balancing method — இருப்புக் கட்டும் முறை:** கூடுதலாக உள்ள கூட்டல் தொகை, கணக்கின் பற்று, வரவு ஆகிய இருபக்கங்

களிலும் எழுதப்படும். குறைவாகக் கூட்டல் தொகையுள்ள பக்கத்தில் கூட்டல் தொகைக்கு மேல் இருப்புக்காட்டும் தொகை எழுதப்படும். இருப்புக் காட்டும் தொகை என்பது பற்றுக் கூட்டலுக்கும் வரவுக் கூட்டலுக்குமுள்ள வேறுபடும் தொகை ஆகும்.

**balancing of accounts** – **கணக்கை இருப்புக் கட்டல்:**

**balancing of ledgers** – **பேரேட்டுக் கணக்கை இருப்புக் கட்டல்:** இதை எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம். பொதுவாகத் திங்கள் இறுதியிலும் அல்லது காலாண்டுக்கு ஒரு முறையும் இதைச் செய்யலாம்.

**bank** – **வங்கி:** ஒரு வகை வணிக நிறுவனம்: பல வகைப்பட்ட நிதிச் செயல்களில் ஈடுபடுவது. பணம் கொடுப்பது, வாங்குவது. கொடுப்பது கடன். வாங்குவது வைப்புத் தொகை. கடன் தனியாருக்கும் நிறுவனத்திற்கும் கொடுக்கப்படுவது. இந்தியாவில் நாட்டு வங்கிகள் (பாரதவங்கிகள்) நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அட்டவணை வங்கிகள் என மூவகை வங்கிகள் உள்ளன. இவற்றை எல்லாம் கட்டுப்படுத்துவது காப்பு வங்கி.

**bank account** – **வங்கிக் கணக்கு:** தனியாள் அல்லது நிறுவனம் வங்கியில் வைக்கும் கணக்கு. இது முதன்மையாகச் சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு என இருவகை.

**bank advance** – **வங்கி முன் பணம்:** பா. bank loan.

**bank bill** – **வங்கி உண்டியல்:** வங்கியால் வழங்கப்படும் அல்லது உறுதியளிக்கப்படும் மாற்றுச் சீட்டு. எளிதாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது.

**bank certificate** – **வங்கிச் சான்றிதழ்:** குறிப்பிட்ட நாளில் ஒரு நிறும வரவில் எவ்வளவு இருப்புள்ளது என்று வங்கியின் மேலாளர் அளிக்கும் சான்றிதழ். நிறுமத்தணிக்கையாளர்களால் தணிக்கையின் பொழுது சரிபார்ப்புக்காக வேண்டப்படுவது.

**bank charges** – **வங்கிக் கட்டணங்கள்:** கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளரிடமிருந்து வங்கி வசூல் செய்யும் தொகை. குறிப்பிட்ட பணிகளுக்காக வாங்கப் படுவது. காசோலை மாற்றுதல், கடன் வட்டி, கையாளும் கட்டணங்கள் முதலியவை இதில் அடங்கும்.

**bank discount** – **வங்கி வட்டம்:** வங்கி தரும் கழிவு.

**bank draft** – **வங்கி வரைவோலை:** வங்கி உறுதிக் காசோலை. வங்கி தானே

வரைந்து கொடுக்கும் காசோலை. பணம் செலுத்திய பின் வழங்கப் படுவது. பணம் உறுதியாகக் கிடைப்பது.

**bank guarantee** – **வங்கி உறுதியளிப்பு:** கடனாளிக்காகக் கடனைத் தீர்க்க வங்கி வழங்கும் பொறுப்பேற்பு.

**bank holidays** – **வங்கி விடுமுறை நாட்கள்:** இவை பொது விடுமுறை நாட்கள். இவை யாவை என்பதை ஒவ்வோராண்டும் ஒவ்வொரு வங்கியும் விடுமுறைப்பட்டியல் என்னும் தலைப்பில் வழங்கும். விடுதலை நாள், சுதந்திர நாள், காந்தி பிறந்த நாள் முதலியவை பொது விடுமுறை நாட்கள்.

**bank loan** – **வங்கிக் கடன்:** வாடிக்கையாளர்களுக்குக் குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட வட்டியுடன் வங்கி வழங்கும் தொகை. வணிகக் கடன்கள் பிணையத்தின் பேரில் கொடுக்கப்படும்.

**bank note** – **வங்கித்தாள் பணம்:** இந்தியாவில் இதனைக் காப்பு வங்கி அச்சடித்து வழங்குவது.

**bank of issue** – **வெளியீட்டு வங்கி:** பணத்தாள் வெளியிடும் காப்பு வங்கி.

**bank pass book** – **வங்கி இருப்புக்கையேடு:** வாடிக்கையாளர் கணக்கில் பற்று வரவு வைக்கப்படும் ஏடு. இது சேமிப்புக் கணக்குக் கையேடு, நடப்புக் கணக்குக் கையேடு என இருவகை.

**bank rate** – **வங்கி வீதம்:** வங்கி வாங்கும் கொடுக்கும் வட்டி அளவு, கொடுப்பது வைப்புநிதிகளுக்கு. வாங்குவது கடன்களுக்கு, கடன் வட்டி அதிகமாயிருக்கும். ஆனால் வேளாண் கடன்களுக்குக் குறைந்த வட்டி.

**bank reconciliation statement** – **வங்கிச் சரிக் கட்டுப் பட்டி:** அவ்வப்பொழுது பண ஏடு காட்டும் வங்கி இருப்புச் செல்லேடு காட்டும் வங்கி இருப்பும் வேறுபடுகின்ற பொழுது, அவ்விருப்பைச் சமமாக்கச் செய்யப்படும் சரிப்பாடு. பொதுவாக, இவ்வேறுபாடு இருக்கவே செய்யும். பண ஏடு காட்டும் இருப்பை (பற்று, இருப்பு இரண்டும்) அடிப்படையாகக் கொண்டு தேவையான சரிக் கட்டுதல்களைக் கூட்டியும் கழித்தும் இருப்பைப் பெற இயலும். அல்லது செல்லேடு காட்டும் இருப்பைத் தொடக்கமாக வைத்து, அத்துடன் தேவையான சரிக்கட்டுதல்களைக் கூட்டியும் கழித்தும் பண ஏட்டு இருப்பைப் பெறலாம்.

**b. reserve** – **வங்கிக்காப்பிருப்பு:** வங்கியின் சேம ஒதுக்கீடு. வங்கி நலங்காக்க ஒதுக்கப் படுவது.

**banker's clearing house** – வங்கித் தீர்வகம்: வங்கிகளின் கொடுக்கல் வாங்கல் நடை பெறும் இடம்.

**banker's liability** – வங்கியர் பொறுப்பு: வங்கி கொடுக்க வேண்டியது.

**banker's reference** – வங்கியர் குறிப்பு: வாடிக்கையாளரின் நிதிநிலைமை பற்றி வங்கி வழங்கும் குறிப்பு. இதை வைத்து அவருக்குக்கடன் வசதி யளிக்கப்படும்.

**banking** – வங்கி இயல்: வங்கித் தொழிலை ஆராயுந் துறை.

**bank statement** – வங்கி அறிக்கை: வாடிக்கை யாளரின் பற்று வரவு இருப்பு குறித்து வங்கி வழங்கும் முறை யான பதிவுக் குறிப்பு.

**bargain** – பேரம்: வாணிபத்தில் ஒரு பொருளின் விலை குறித்து நடைபெறும் ஏற்ற இறக்கம். இது கேள்வி வடிவில் இருக்கும்.

**base rate** – அடிப்படைவீதம்: தங்கள் வாடிக்கையாளர் களுக்கு வங்கிகள் விதிக்கும் வட்டி வீதங்களுக்கு அடிப்படை யாக் கொள்ளும் வட்டிவீதம்.

**bear market** – கரடிச் சந்தை: விற்பனைச் சந்தை. இதில் பிணையங்கள், பணத்தாள் கள், பொருள்கள் முதலியவை விற்கப்படும்.

**bearer** – கொணர்நர்: மாற்றுண் டியல் அல்லது காசோலையை மாற்றுவதற்கு அளிப்பவர். இதில் "கொணர்நருக்கு அளிக்க" என்று எழுதப் பட்டிருக்கும்.

**bearer cheque** – கொணர்நர் காசோலை: காசோலையை மாற்றக் கொண்டுவருபவர்.

**bearer securities** – கொணர்நர் ஈடுகள்: கொண்டு வருபவரின் ஈடுகள் அல்லது பிணையங் கள். இவை மாற்றுவதற் குரியவை.

**below par** – முகப்பு விலைக்குக் கீழ்: பா. par value.

**below the line** – கோட்டுக்குக் கீழ்: ஒரு நிறுமத்தின் இலாப நட்டக் கணக்கிலுள்ள கிடை மட்டக் கோட்டுக்குக் கீழுள்ள பதிவுகளைக் குறிப்பது. 2) விளம்பரச் செலவிற்குக் கழிவு கொடுக்கப்படாததைக் குறிப்பது. 3) நாட்டுக் கணக்கு களில் முதலோடு தொடர் புடைய கொடுக்கல் வாங்கல் பற்றிக் குறிப்பது ஒ. above the line.

**beneficial interest** – நன்மை நலம்: சொத்தைப் பயன்படுத்து வதற்கும் நுகர்வதற்குமுரிய உரிமை.

**benefits in kind** – வகைசார் நன்மைகள்: சம்பளம் தவிர்த்த கைம்மாறு. இதில் வசதிகள்

அடங்கும். நிறும உந்துவண்டி, இலவச உண்டி. நலவாழ்வுக் காப்புறுதி, எளிய கடன்கள் முதலியவை இவ்வசதிகள்.

**bid** – **கேள்வி:** பேரம் வாங்குபவர் பேரத்தை முடிக்க விரும்பும் விலை. இது நிபந்தனைக் கேள்வி, நிபந்தனையற்ற கேள்வி என இருவகை.

**bid price** – **கேள்வி விலை:** பேரவிலை. ஒரு நிறுவனம் தன் பங்குகளைச் சந்தையில் விற்கும் பொழுது கூறும் இரு விலைகளில் குறைவானது.

**bill** – **உண்டியல், பட்டியல், சீட்டு.**

**bill book** – **1) உண்டியல் ஏடு 2) பட்டியல் புத்தகம்.**

**bill broker** – **உண்டியல் தரகர்:** கழிவுத் தொகைத்தரகர். வணிகர்களிடமிருந்து மாற்றுண்டியலை வாங்கி வங்கிகளுக்கு விற்கும் தரகர்.

**bill of entry** – **சுங்க அலுவலர் பட்டியல்:** கப்பல் உரிமையாளர் சுங்கத்துறைக்காகத் தயாரிக்கும் சரக்குகளின் அனுப்பீடு. இதன் மதிப்பும் இயல்பும் விரிவாகக் குறிக்கப்பட்டிருக்கும்.

**bill of exchange** – **மாற்றுண்டியல்:** மாற்றுச்சீட்டு. எழுத்து வடிவத்திலுள்ள நிபந்தனை இல்லாத கட்டளை. உண்டியல் வரைபவரால் உண்டியல் பெறுபவருக்கு அனுப்பப்படுவது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பட்ட பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று அதில் எழுதப் பட்டிருக்கும்.

**bill of lading** – **ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு:** கப்பல் வரவுச் சீட்டு. கடல் வழி கொண்டு செல்லப்படுவதற்காக அனுப்பவரின் சரக்குகளுக்குக் கொடுக்கப்படும் ஆவணம்.

**bill of sale** – **விற்பனைச்சீட்டு:** ஒருவர்தம் சரக்குகளின் உரிமையை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்கும் ஆவணம். இது நிபந்தனை விற்பனைச் சீட்டு, முழு விற்பனைச்சீட்டு என இருவகை.

**bills payable** – **செலுத்து உண்டியல்கள்:** முதிர்ச்சியடையும் பொழுது, செலுத்தப்பட வேண்டியவை. இவை நடப்புப் பொறுப்புகளில் இருக்கும்.

**bills payable book** – **செலுத்துவதற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு:** பிறர் நம் மீது மாற்று சீட்டு வரைய நாம் அதை ஏற்கும் பொழுதும் பிறருக்கு நாம் கடன் உறுதிச் சீட்டு, உண்டியல் ஆகியவற்றை எழுதித் தரும் பொழுதும் அவற்றை இப் புத்தகத்தில் பதிய வேண்டும்.

**bills receivable** – **வரவு உண்டியல்கள்:** இவை நடப்பு இருப்புகளில் இருக்கும்.

முதிர்ச்சி அடையும் பொழுது, பெறப்பட வேண்டியவை.

**bills receivable book** – **வரவு உண்டியல் சீட்டு ஏடு:** இச்சீட்டு நாம் பிறர் மீது வரையினும் அல்லது பிறர் நமக்கு மேலொப்பம் செய்து தந்தாலும் அவை இதில் பதியப்படும். கடன் உறுதிச்சீட்டு, உண்டியல் ஆகியவையும் இதில் பதியப்பெறும்.

**black economy** – **கறுப்புப் பொருளாதாரம்:** கள்ளப் பொருளியல். மறைவாக நடைபெறும் பொருளாதாரச் செயல்.

**black market** – **கறுப்புச் சந்தை:** கள்ளச்சந்தை. ஒரு பொருள் அல்லது பணிக்காக நடைபெறும் சட்டமுரண்சந்தை. குறிப்பிட்ட வாணிபத்திற்குச் சட்டதிட்டங்கள் வரும் பொழுது நடப்பது.

**black money** – **கறுப்புப்பணம்:** கள்ளப் பணம். கணக்கில் வராத பணம். பண வீக்கத்திற்கு இதுவே காரணம்.

**blank bill** – **வெறும் உண்டியல்:** பெறுபவரின் பெயர் குறிப்பிடப்படாத மாற்றுச்சீட்டு.

**b. cheque** – **வெறுங்காசோலை:** பெயர் குறிப்பிடப்படாத காசோலை.

**b. endorsement** – **வெறும் மேலொப்பம்:** வெற்றுப்புறக் குறிப்பு அல்லது மேலெழுத்து.

**b. transfer** – **வெறும் மாற்றுதல்:** பங்குத்தொகை மாற்றுகைப் படிவத்தில் மாற்றும் நாள், மாற்றப்படுபவர் பெயர் ஆகியவை குறிக்கப்படாமல் இருக்கும்.

**block capital** – **நிலைமுதல்:** அசையா முதல்.

**blocked account** – **முடக்கக் கணக்கு:** 1) திவால், நிறுமக் கலைப்பு முதலியவை காரணமாகப் பணம் எடுக்கப்பட முடியாத கணக்கு.

2) அந்நியச் செலாவணி காரணமாக ஏற்றுமதியாளர் தம் பணத்தை இறக்குமதியாளரிடமிருந்து பெற முடியாத நிலையுள்ள கணக்கு.

**blocked currency** – **முடக்கச் செலாவணி:** மாற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக, ஒரு நாட்டிலிருந்து எடுத்துச் செல்ல இயலாத தாள் பணம்.

**blue chip** – **நீலப்பங்கு:** உயர் பங்கு. நற்பெயரும் நல்ல வளர்ச்சியும் நிறைந்த இருப்புகள் கொண்டது.

**board of customs and excise** – **சுங்கத் தீர்வை வாரியம்:** சுங்க வரிகளையும் தீர்வை வரிகளையும் வசூல் செய்யும் அரசுத் துறை.

**board of directors** – **இயக்குநர் அவை:** ஒரு நிறுமத்தின் ஆட்சிக்குரிய குழு.

**board meeting** – **ஆட்சியவைக் கூட்டம்:** நிருவாக அவைக் கூட்டம்.

**boards of trade** – **வணிகத்துறை வாரியங்கள்.**

**bond** – **பத்திரம்:** முறிமம். எ–டு. கடன் பத்திரம், தங்கப் பத்திரம்.

**bonded goods** – **சுங்கச் சரக்குகள்:** வரிக்குரிய இறக்கு மதிகள். சுங்கக் கிடங்கில் வைக்கப்பட்டிருப்பவை.

**bonus** – 1) **ஊக்க ஊதியம்:** ஒருநிறுவனம் தன் பணியாளர் களுக்கு நல்லெண்ணத்தின் பேரிலும் நல்ல வேலை நடப் பதற்காகவும் கொடுக்கும் உதவி தொகை. எ–டு. தீபாவளி ஊக்க ஊதியம்.

2) **ஊக்கத் தொகை:** காப் புறுதிக்கழகம் தன் வாடிக்கை யாளர்களுக்கு ஆதாயத்திற்கு மேல் கூடுதலாக வழங்கும் தொகை.

3) **ஊக்கப் பொருள்:** ஒரு பொருளின் விற்பனையை ஊக்குவிக்க, ஒரு நிறுவனம் கூடுதலாகக் கொடுக்கும் பொருள்.

பொதுவாக, உரிமை கோரா ஊக்க ஊதியம், மீள் ஊக்க ஊதியம், முடிவுறு ஊக்க ஊதியம் என இது பல வகை.

**bonus shares** – **ஊக்கப் பங்கு கள்:** பங்குகள் வாயிலாகப் பங்காதாயம் வழங்கப்படலாம். அவ்வாறு வெளியிடப்படும் பங்குகள் ஊக்கப்பங்குகள் ஆகும்.

**bonus shares, benefits of** - **ஊக்கப் பங்குகளின் நன்மை கள்:** i) **நிறுமத்திற்கேற்படு பவை:** 1) நிறுமத்தின் முதல், இருப்பு நிலைக்குறிப்பில் ஒரு நல்ல நிலையைக் காட்டுதல் 2) காப்பு முதற்படுத்துகை செய்யப்படுவதால் நிறுமத்தின் கடன் தகுதி அதிகமாகும். ii) **பங்குதாரர்களுக்கு ஏற்படு பவை:** 1) அதிகரிக்கப்பட்ட பங்குகளால், பங்காதயம் கூடுதலாகப் பெற வாய்ப் புண்டு. 2) பங்குகளை அங்காடி யில் விற்று அதிக இலாபம் பெற இயலும்.

**bonus shares, sources of** – **ஊக்கப்பங்குகளின் மூலங்கள்:** 1) முதல்மீட்புக் காப்புக் கணக்கு 2) பங்கு முனைமக் கணக்கு 3) முதலின இலாபங் கள் 4) நடைமுறை இலாபங் கள் 5) மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்புக் கணக்கு.

**book debt** – **ஏட்டுக்கடன்:** பேரேட்டிலுள்ள கடன்.

**book-keeping** – **கணக்குப் பதிவியல்:** ஒரு தொழிலுக்குரிய கணக்கை முறையாகவைக்கும் முறை. இதனால் இலாப நட்டத் தையும் ஐந்தொகையையும் தொகுக்க இயலும்.

தற்பொழுது. பல நிறுவனங்கள் இதற்கு மென்னியங்கள் (சாப்ட்வேர்) வைத்துள்ளன.

**book of prime entry** – **முதன்மைப் பதிவேடு:** இரட்டை முறைப் பதிவில் ஏறுவதற்கு முன்னர் சில கொடுக்கல் வாங்கல்கள் எழுதப் பட்டுள்ள பதிவேடு. எ–டு. நாட் குறிப்பேடு, பணக்குறிப்பேடு, குறிப்பேடு.

**books of account** – **கணக்கேடுகள்:** ஒரு தொழிலுக்குரிய கொடுக்கல் வாங்கல் பதிவு செய்யப்படும் புத்தகங்கள். பா. book of entry, double entry book keeping system.

**book value** – **ஏட்டுமதிப்பு:** ஒரு நிறுவனத்தில் கணக்கேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இருப்பின் மதிப்பு. தேய்மானம் நீக்கிய மதிப்பு.

**boom** – **மலர்ச்சி:** மீட்புக்குப் பின்னுள்ள வணிகச் சுழற்சியின் பகுதி. பொருளாதாரம் முழுத்திறத்துடன் இயங்கும்.

**borrowed capital** – **கடன் முதல்:** தொழில் முன்னேற்றத்திற்காகக் கூடுதலாக வாங்கப்படுவது.

**bought deal** – **முதல் ஏற்றம்:** பொருள் ஈட்டுங் காரணத்திற்காக முதலை உயர்த்துதல்.

**bought ledger** – **கொள்முதல் பேரேடு:** கொள்முதல் சரக்குகள் பதிவு செய்யப்படும் புத்தகம்.

**bought note** – **கொள்முதல் குறிப்பு:** கொள்முதல் செய்தலைப் பதிவு செய்தல்.

**brand** – **குறி:** அடையாளம்.

**brand name** – **குறியீட்டுப் பெயர்:** குறிப்பிட்ட விளைப் பொருளுக்குரிய வாணிபப் பெயர். எ–டு. பையோ கேஸ்ட்ரான், அல்நிக்கோ.

**brand loyalty** – **வாணிபப் பெயர்ப் பற்று:** நுகர்வோர் குறிப்பிட்டட வாங்கு பொருள் மீது கவர்ச்சி கொள்ளுதல். பொருளின் விலை, பயன் முதலியவை இதற்குக் காரணங்கள் ஆகும். எ–டு. இதயம் நல்லெண்ணெய்.

**break-even point** – **சரிசம நிலை:** உற்பத்தியில் ஆதாயமோ இழப்போ இல்லாத நிலை. இந்நிலை கடக்கப்படின், ஆதாயம் வரும்.

**break-up figures** – **பிரிப்பு எண்கள்:** பிரித்துக்காட்டும் எண்கள்.

**break-up value** – **பிரிப்பு மதிப்பு:** 1) ஒரு தொழிலில் ஒரு நிறுவனம் தொடராது என்று கருதப்படும் சொத்தின் மதிப்பு. இதன் அடிப்படையில் அதன் சொத்துகள் அல்லது இருப்புகள் சில்லரையாக விற்கப்படும். 2) ஒரு நிறுமத்

தில் ஒரு பங்குக்குரிய இருப்பின் மதிப்பு.

**bridging loan** – இடைவெளிக் கடன்: குறுகிய காலக் கடன். ஓர் இருப்பை வாங்குவதற்கும் மற்றொன்றை விற்பதற்கும் இடையிலுள்ள வெளியைச் சரிக்கட்ட வாங்கப்படும் கடன்.

**broker** – தரகர்: இருவரை ஒன்று சேர்த்து ஓர் ஒப்பந்தத்தை முடிக்கும் முகவர். இவர் வாணிபத்தின் ஓர் இன்றியமையாப் பகுதி. இவர்கள் பல வகைப் படுவர்.

**brokerage** – தரகு: தரகர் தான் செய்யும் பணிக்குப் பெறும் சிறு ஊதியம் ஒப்பந்தத் தொகையில் விழுக்காடாகப் பெறுவது. இது கழிவே.

**brown goods** – செஞ்சரக்குகள்: தொலைக் காட்சி முதலியவை. இவை மரப்பெட்டிகளில் வைக்கப்படுபவை. ஒ. white goods.

**brought down** – கீழ்க்கொண்டு வரப்பட்ட: கீகொ.

**brought forward** – முன்பக்கப் படி: முப.

**budget** – வரவு செலவுத் திட்டம்: ஒரு நிறுவனத்தின் நிதிவளத் திட்டம். வரவினங்களுக்கும் செலவினங்களுக்கும் இலக்குகள் அமைப்பது. இது உபரி வரவு செலவுத் திட்டம், பற்றாக் குறைச் செலவுத்திட்டம் என இருவகை.

**buffer stock** – தாங்குமிருப்பு: கூடுதல் இருப்பு: ஒரு பண்டத்தின் விலையை நிலைப்படுத்த அரசு அல்லது ஒரு வகை நிறுவனம் சேமித்து வைத்திருக்கும் இருப்பு. உபரி இருப்பு, காப்பிருப்பு என்றுங் கூறலாம்.

**bulk carrier** – பருமனேற்றி: தொகுதியாகச் சரக்கை ஏற்றிச் செல்லும் கப்பல்.

**bull** – காளை: விலை ஏற்றுத் தரகர். பங்குச் சந்தையில் விலை ஏற்றத்தை விரும்புபவர். ஒ. bear.

**bull market** – காளைச் சந்தை: விலை ஏற்றமுள்ள சந்தை. இதில் வாங்குதலே விரும்பப் படுவது.

**bullet** – ஈற்றீடு: 1) நிலையான வட்டியளித்துக் குறிப்பிட்ட தேதியில் முதிர்ச்சியடையும் ஈடு 2) கடனின் இறுதிச் செலுத்தீடு. இது கடன் வாங்கிய முழுத் தொகையுமாகும்.

**bullet loan** – ஈற்றீட்டுக் கடன்: இதில் இடைமீள் செலுத்தீடுகள் வட்டி மட்டுமே. அசல் தொகை இறுதியில் கொடுக்கப்படுவது.

**bullion** – உலோகப்பாளம்: பொன், வெள்ளி முதலிய விலை உயர்ந்த உலோகங்கள் பாளங்களாக இருத்தல்.

அனைத்துலகக் கடன்களைத் தீர்க்க இவை பயன்படுபவை.

**business– வாணிபம்:** தொழில். உலோக வாணிபம், தோல் வாணிபம்.

**business cycle – வாணிபச் சுழல்:** பொருளியலில் தீர்க்கப் படாத பெரும் புதிர்களில் இது வும் ஒன்று. முதலீடு, ஆதாயம், விலை முதலியவை இதில் முறையாக ஏறி இறங்கும். இதனால் மலர்ச்சியும் தாழ்ச் சியும் உண்டாகும். பின்னடை வும் மீட்பும் இடைப்பட்ட நிலைகள். பா. accounting cycle.

**business name – வாணிபப் பெயர்:** ஒருவர் நடத்தும் தொழி லுக்கு இடப்பட்டுள்ள பெயர். எ–டு. திருவள்ளுவர் அச்சகம், மணிவாசகர் நூலகம்.

**business plan – வணிகத் திட்டம்:** வரையறை செய்யப் பட்ட குறிக்கோள்களை அடைய வகுக்கப்படும் திட்டம். இது நீண்ட காலத்திட்டம், குறுகிய காலத்திட்டம் என இரு வகை. தொகுதியாகவுள்ள நிறு மங்களுக்கு இது கூட்டுத் திட்ட மாக அமையும்.

**business purchase-account – வணிகக் கொள்முதல் கணக்கு.**

**business transaction, kinds of – வணிக நடவடிக்கை வகைகள்:** 1) தனியாள் கூட்டு நிறுவனம் முதலியவை தொடர் பானவை. 2) சொத்துகள், சரக் குகள் முதலியவை தொடர் பானவை 3) செலவுகள், ஆதாயங்கள் தொடர்பானவை.

**buyer – வாங்குபவர்:** ஒரு பொரு ளுக்கு விலை கொடுப்பவர்.

**buyer's market – வாங்குபவர் சந்தை:** தேவையை, வழங்கல் விஞ்சும் சந்தை. இதில் விலை குறையும்.

**buying department – கொள் முதல் துறை:** வாங்கும் பகுதி. ஒரு நிறுவனத்திலுள்ளது.

**by-product – துணை விளை பொருள்:** நெல் முதல் விளை பொருள். உளுந்து துணை விளை பொருள். விளை வினால் உண்டாவது.

# C

**cable – கடல் தந்தி:** அனைத் துல கத் தொலைவுரையம். இதற்குத் தற்பொழுது மாற்று உரு நகலி யும் தொலை அதிர்வச்சுமாகும்.

**calculator – கணக்குப்பொறி:** அலுவலகத்தில் அதிகம் பயன் படும் கணக்கிடுங் கருவி. பா. computer.

**call – அழைப்பு:** தாங்கள் பகுதி யாகச் செலுத்திய பங்குகள் தொடர்பாகக் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட தொகை யைச் செலுத்த வேண்டுமென

ஒரு நிறுமம் தன் பங்குதாரர் களுக்கு விடுக்கும் கோரிக்கை. பா. share capital.

**call bird** – **அழைப்புப் பறவை:** பொதுமக்கள் தம் கடைக்கு வருமாறு ஊக்குவிக்கச் சில்லரை வணிகர்கள் கொடுக்கும் குறைந்த விலை பொருள். இதனால் உயர்ந்த விலைபொருள் களை அவர்கள் வாங்குவர் என்பது வணிகர்களின் நம்பிக்கை.

**call in advance** – **பங்கழைப்பு முன்பணம்:** கைம்முதல் அழியா முன் பணம்.

**calls in arrears** – **அழைப்பு நிலுவை.**

**call letter** – **அழைப்புச் சீட்டு.**

**call loan** – **அழைப்புக் கடன்:** நாள் நிலுவைக் கடன்.

**call money** – **அழைப்புப் பணம்:** பணச் சந்தையில் போடும் பணம். குறுகிய கால அறிவிப்பின் பேரில் அதை எடுத்துக் கொள்ளலாம்.

**call option** – **அழைப்புரிமை:** அழைப்புத் தேர்வு. பா. option.

**call rates** – **அழைப்பு வீதங்கள்.**

**calls on shares** – **பங்கழைப்பு.** அழைப்புமூலம் பங்கு ஒரு நிறுமத்திற்குப் பெறப்படுவது.

**called up capital** – **அழைப்பு முதல்:** வருவித்த மூலதனம். பா. share capital.

**callers** – **அழைப்பவர்கள்.**

**campaigin** – **இயக்கம்:** முறையாக அமைந்த செயல். கவனமாகத் திட்டமிட்டு உரிய குறிக் கோள்களை அடைதல். பொதுவாக, இது விளம்பரம், விற்பனை, பொதுத் தொடர்புகள், சந்தை வாணிபம் முதலியவற்றில் அமையும்.

**capacity cost** – **கொள்திறன் ஆக்கச்செலவு.**

**capital** – **முதல்:** 1) பொறுப்பை நீக்க, ஒருவரின் சொத்துகளின் மொத்த மதிப்பு. 2) ஒரு நிறுவன இருப்புகளில் உரிமையாளர்களின் நலங்கள் அளவு. இவற்றிலிருந்து பொறுப்பு களை நீக்க வேண்டும் 3) ஒரு நிறுவனம் இயங்க உரிமையாளர்கள் வழங்கும் பணம். 4) பொருளாதாரக்கொள்கையில் உற்பத்திக் காரணி. வழக்கமாக இது எந்திரமும் நிலையமும் ஆகும். அல்லது பணமாகவும் இருக்கலாம்.

**capital account** – **முதலினக் கணக்கு:** 1) மூலதனக் கணக்கு. நிலம், கட்டிடம், எந்திரம் முதலியவற்றிற்காகும் முதல் செலவினத்தைப் பதியும் கணக்கு. 2) பெரும் இனங்களுக்குச் செலவிடப் படுந் தொகை. 3) ஒரு தொழிலிலுள்ள நிகர இருப்புகளில் முழு வணிகரின் நலத்தைக் காட்டும் கணக்கு 4) பங்கு நிறு

வனத்தின் நிகர இருப்புகளில் பங்காளர்களின் நலங்களைப் பதிவு செய்யும் தொடர்கணக்கு கள். பொதுவாக, முதலினக் கணக்குகள் முதலில் செலுத் தப்படும் தொகைகளையும் நடப்புக் கணக்குகளையும் உள்ளடக்குபவை.

**capital allowances** – **முதலினப்படிகள்:** இவை வரு மான வரி விலக்குகளும் சில ஆதாயங்களுமாகும். தொழிலுக் குரிய சில இருப்பு வகைகளின் தேய்மானத்தைப் பிரதிபலிப் பவை.

**capital assets** – **முதலின இருப்பு:** நிலையிருப்பு. எ–டு. நிலம், கட்டடம், எந்திரம்.

**capital authorised** – **அனுமதிக் கப்பட்ட முதல்:** நிறுமம் ஒன்று திரட்டக் கூடிய உயர்ந்த அளவு முதல் தொகை. வேறுபெயர் கள். பெயரளவு முதல், பதிவு செய்யப்பட்ட முதல்.

**capital duty** – **மூலதன வரி:** நிறுமம் தோற்றுவிக்கப்படும் பொழுது செலுத்தப்படுவது.

**capital efficiency** – **முதலினத் திறன்:** முதலீட்டுத் திறன்.

**capital employed** – **பயன் படுமுதல்:** இயல்பு இலாபம் காணப்பயன்படுவது. இம் முதலைக் காணச் சொத்துகளி லிருந்து பிறருக்குத் தர வேண்டிய பொறுப்புகளைக் கழிக்க வேண்டும்.

**capital expenditure** – **முதலினச் செலவு:** நிலம், கட்டிடம், எந்திரம், முதலீடுகள், அறை கலன் முதலிய சொத்து களைப் பெற்றுத் தரும் செலவினம்.

**capital formation** – **முதலாக்கம்:** முதல் தோற்றுவிக்கப்படுதல்.

**capital gain** – **முதல் ஆதாயம்:** இருப்பில் பெறப்படும் ஆதாயம். இதற்கு வரிவிதிப் புண்டு.

**capital goods** – **முதலினப் பொருள்கள்:** உற்பத்திப் பொருள்கள். எ–டு. எந்திரம், நிலம், கச்சாப் பொருள்கள்.

**capital investment** – **மூலதன முதலீடு:** பா. investment.

**capital issued** – **வெளியீட்டு முதல்:** வழங்கப்பட்ட முதல். அமைக்கபட்பட்ட முதலின் ஒரு பகுதி. பொது மக்கள் வாங்குவதற்காக வெளியிடப் படுவது.

**capital, paid-up** – **செலுத்து முதல்:** அழைப்பு முதல் தொகை யில் பங்குதாரர்கள் உண்மை யாகச் செலுத்தும் தொகை.

**capital profit** – **முதல் ஆதாயம்:** முதல் இருப்பை விற்பதால் வரும் இலாபம். வரிக்குட் பட்டது.

**capital receipts** – **முதலின வரவுகள்:** கடன் பணம், நிலச்

சொத்து விற்பனைத் தொகை, பங்குகள் விற்பனைப் பணம் முதலியவை.

**capital redemption reserve** – **முதல் மீட்புக் காப்பு நிதி:** இது காப்பு நிதியாகும்.

**capital reduction** – **முதலினக் குறைப்பு:** செலுத்தப்பட்ட பங்கு முதலைக் குறைத்துக் காட்டுதல்.

**capital reserves** – **முதல் காப் பிருப்புகள்:** பல காரணங்களி னால் ஒரு நிறுமத்தின் பகிர்ந்து அளிக்கப்படாத ஆதாயங்கள்.

**capital resource** – **முதலின வளம்:** மூலதனச் செழுமை. ஒரு நிறுவனத்தின் அச்சாணி.

**capital share** – **பங்கு முதல்:** பங்குகளால் அளிக்கப்படுவது.

**capital subscribed** – **ஒப்பிய முதல்:** வெளியீட்டு முதல் தொகையில் பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொள்ளும் தொகை.

**capital turn over** – **முதல் விற்று முதல்:** மூலதன விற்று முதல்.

**capital tax** – மூலதனவரி.

**capital, uncalled** – **அழையா முதல்:** ஒப்பிய முதலுக்கும் அழைப்பு முதலுக்குமுள்ள வேறுபாடு.

**capital, unpaid** – **செலுத்தா முதல்:** அழைப்பு முதல் தொகை யில் செலுத்தப்பெறாத இருப்பு.

வ-3.

வேறுபெயர் அழைப்பு நிலுவை.

**capitilization** – **முதலாக்கம்:** 1) ஒரு நிறுமத்திற்கு முதல் வழங்கும் செயல். 2) ஒரு நிறு மத்தின் முதல் கட்டமைப்பு 3) ஒரு நிறுமத்தின் காப்பிருப் புகளைப் பங்குச் சான்று வழங்கல் மூலம் மூலதன மாக்கல்.

**captive market** – **ஆட்கொள் அங்காடி:** மாற்று விளை பொருள் இல்லாததால், ஒரு குறிப்பிட்ட விளைபொரு ளையே வாங்கும் சூழ்நிலை யுள்ள சந்தை.

**cargo** – **சரக்கு:** கப்பல் வழியும் வான வழியும் கொண்டு செல்லப்படும் பொருள்.

**cargo insurance** – **கப்பல் சரக்குக் காப்புறுதி:** ஒரு கப்பல் ஏற்றிச் செல்லும் சரக்குகளுக் குரிய காப்பீடு.

**carriage** – **வண்டிச் செலவு:** சரக்குகளை உரியவரிடத்துச் சேர்க்கும் ஊர்திச் செலவு.

**cargo down** – **கீழ்க்கொண்டு செல்லல்:** மேலிருந்து கீழ்க் கொண்டு வருதல்.

**cargo forward** – **செலுத்து வண்டிச் செலவு:** சரக்குகளைச் சேர்ப்பிக்கும் செலவை வாங்கு பவர் கொடுத்தல். To pay என்று குறிக்கப்பெறுவது.

**cargo free** – செலுத்தப்பட்ட வண்டிச் செலவு: சரக்குகளைச் சேர்ப்பிக்கும் செலவை விற்பவரே கொடுத்தல். paid என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

**cargo inwards** – உள்வண்டிச் செலவு.

**cargo outwards** – வெளி வண்டிச் செலவு.

**carrier** – ஊர்தி, ஊர்தியாளர்: சரக்குகளை ஏற்றிச் செல்லும் வண்டி. அல்லது வண்டி உரிமையாளர்.

**cartage** – வண்டிச் சத்தம்: சரக்குகளை வண்டி மூலம் ஏற்றி வருவதற்குக் கொடுக்கும் கட்டணம்.

**cartel** – கூட்டியம்: கூட்டமைப்பு. தனிப்பட்ட நிறுமங்கள் சேர்ந்த அமைப்பு.

**cash** – பணம்: நாணயங்களாகவும் தாள் பணமாகவும் உள்ள செலாவணி. கடன்கள் தீர்க்க எளிதாகப் பயன்படுவது.

**cash against document** – ஆவணத்திற்கெதிராகப் பணம், ஆஎப: ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளுக்குரிய செலுத்து நிபந்தனைகள். இறக்குமதி செய்பவர் பணம் செலுத்தி இவ்வுண்டியலைப் பெற்றுக் கப்பல் சரக்குகளை எடுத்துக் கொள்வர்.

**cash book** – பண ஏடு: பணம் உள்வருவதும் வெளிச் செல்வதும் பதியப்படும் புத்தகம்.

**cash book, features of** – பண ஏட்டின் இயல்புகள்: 1) துணை ஏடுகளுள் ஒன்று 2) ஒரு முதன்மைப் பதிவேடு 3) ஓர் இறுதிப் பதிவேடு 4) கணக்கு போன்றே கோடிடப்படுவது 5) பேரேட்டுக் கணக்குமாகும்.

**cash book, kinds of** – பண ஏட்டின் வகைகள்: 1) தனிபத்திப் பண ஏடு 2) இரட்டைப் பத்திப் பண ஏடு 3) முப்பத்திப் பண ஏடு.

**cash cow** – பணக் காமதேன்: நன்கு புகழ்பெற்ற வாணிபப் பொருள். எ–டு. ஆர்லிக்ஸ்.

**cash credit** – பணக் கடன்: பணமாகப் பெறும் கடன்.

**cash crop** – பணப் பயிர்: உழவர் தன் பயன்பாட்டுக்கும் விற்பனைக்கும் உண்டாக்குவது. எ–டு. கடலை.

**cash deal** – பண வரவுசெலவு: வாங்குவதிலும் விற்பதிலும் பணம் பெறப்படுவது.

**cash discount** – பண வட்டம்: 1) தவறாமல் தன்னிடம் பணம் செலுத்தி வாங்குபவருக்கு, விற்பனையாளர் விலையைத் குறைத்துக் கொடுத்தல் 2) மொத்த விற்பனையாளரிடமிருந்து சில்லரை விற்பனையாளர் வாங்கும் பொழுது, சரக்குகளின் விலைகள் குறைத்துக் கொடுக்கப் படுதல்.

**cash management account** – **பணமேலாண்மைக் கணக்கு:** வழக்கமாகப் பண அங்காடியில் ஒரு வங்கி தன் வைப்பு நிதி களை முதலீடு செய்யுங் கணக்கு. இது ஒரு காசோலைக் கணக்கு.

**cash in transit** – **வழியிடைப் பணம்:** சரிக்கட்டுப் பதிவிற் குரியது.

**cash on delivery, COD** – **பணக் கொடுபாடு ப.கொ:** பணம் கட்டிஎடுப்பதற்குரிய சரக்கு அனுப்பீடு.

**cash on hand** – **பணக்கை யிருப்பு:** ஒவ்வொரு நாளும் எழுதும் கணக்கிலும் ஐந் தொகையிலும் காட்டப்படுவது.

**cash price** – **பணவிலை:** பொருள் விலைக்கு உடன் பணம் கொடுத்து வாங்குதல்.

**cash sales** – **பணவிற்பனை:** சரக்குகளைப் பணத்திற்கு மட்டும் விற்றுப் பெறுந் தொகை.

**cashier** – **காசாளர்:** காசைக் கொடுத்து வாங்குபவர். பொது வாக, இது வங்கிக் காசாளரையே குறிக்கும்.

**central bank** – **மைய வங்கி:** இது கூட்டுறவு அடிப்படையிலும் நாட்டு அடிப்படையிலும் இந்தியாவில் உள்ளது.

**certificate of damage** – **சேதாரச் சான்று:** ஒரு சரக்கு கொடுபடும் நிலையில் இருக்கும் பொழுது, சிதைந்திருப்பின் அதற்குக் கப்பல் துறையினர் வழங்கும் சான்று.

**certificate of deposit** – **வைப்பு நிதிச் சான்று:** வாடிக்கை யாளரிடமிருந்து பெறும் கால வைப்பு நிதிக்குச் செலாவணி யுள்ள சான்றிதழை வங்கி வழங்கும். கால அளவு குறைந்து 5 ஆண்டுகள்.

**certificate of incorporation** – **கூட்டுப்பதிவுச் சான்று:** ஒரு நிறுவனம் உருவாகும் பொழுது, அதன் பங்குதாரர் களுக்கு நிறுமப் பதிவாளர் வழங்கும் சான்றிதழ்.

**certificate of insurance** – **காப்புறுதிச் சான்று:** காப்புறுதி முறிக்கு அளிக்கும் சுருக்கமான தகவல்கள் கொண்ட சான்றிதழ்.

**certificate of posting** – **அஞ்சல் சான்று:** ஒரு கடிதத்தை அஞ் சலில் சேர்த்ததற்கு அஞ்சல் அலுவலகம் வழங்கும் சான்றிதழ்.

**certified accountant** – **சான்று பெற்ற கணக்கர்:** சான்று பெற்ற கணக்கர் கழக உறுப்பினர்.

**certified stock** – **சான்றிட்ட இருப்பு:** இருப்புகளை ஆராய்ந்து, கொடுப்பதற்கு ஏற்றவை என்று சான்றிடல்.

**chain stores** – **வாணிப வளாகம்:** பல அங்காடிகள் அமைந்தது.

**chairman** – **தலைவர்:** ஒரு நிறுமத்தின் மிக மூத்த அலுவலர். நிறுமக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குபவர்.

**chairman's report** – **தலைவர் அறிக்கை:** நிறுமத்தின் ஆண்டு அறிக்கையோடு சேர்க்கப்படுவது. நிறுமத்தில் ஓராண்டு நடந்த செயல்களையும் எதிர்காலத்திட்டத்தையும் இது குறிக்கும். தலைவரால் ஆண்டுக் கூட்டத்தில் படிக்கப்படுவது.

**chamber of commerce** – **வாணிபக் கழகம்:** தொண்டு நிறுவனம். தொழில் நகரங்களில் அமைந்து பணியாற்றுவது. தொழில் வளர்ச்சியில் நாட்டமுள்ளது.

**charge** – **பொறுப்பு:** 1) கடன் பொறுப்பு. 2) கூலிப் பொறுப்பு 3) வரி அல்லது கட்டணம்.

**charges** – **செலவுகள்:** செலவினங்கள்.

**charges, establishment** – **நிறுவனச்செலவுகள்:** பணி நிலையச் செலவுகள்.

**charges, incidental** – **தற்செயல் செலவுகள்:** இடைநிகழ் செலவுகள்.

**charge account** – **கடன் கணக்கு:** பற்று வரவுக் கணக்கு. வணிக அங்காடிகளில் வைத்துக்கொள்ளப் படுவது.

**charges forward** – **செலுத்து செலவுகள்:** சரக்கு அனுப்பீட்டிற்குரிய வண்டிச் செலவுகள் எல்லாம் பெறுபவரால் கொடுக்கப்பட வேண்டும் என்னும் அறிவிப்பு.

**charges register** – 1) **செலவுப் பதிவேடு** 2) **கடன் பொறுப்புப் பதிவேடு.**

**chartered accountant** – **பட்டையக் கணக்கர்:** நிறுமங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யத் தகுதி பெற்றவர்.

**charter** – **கல வாடகை எடுப்பு:** கப்பல் அல்லது வானூர்தியை வாடகைக்குப் பேசி எடுத்துப் பயன்படுத்துதல்.

**charterer** – **கல வாடகையாளர்:** கப்பலை வாடகைக்கு எடுப்பவர்.

**cheque** – **காசோலை:** ஒரு வங்கி தன்னிடம் கணக்கு வைத்திருப்பவருக்கு அளிக்கும் அச்சிட்ட தாள். இது நடப்புக் கணக்குக் காசோலை, சேமிப்புக் கணக்குக் காசோலை என இரு வகை. பண நடவடிக்கைகளுக்குப் பயன்படுவது.

**cheque, bearer** – **கொணர்நர் காசோலை:** இதில் பெறுபவர் பெயர் எழுதப் பெறும். இதை வங்கியில் செலுத்தி அவர் பணம் பெறலாம்.

**cheque, blank** – **வெறும் காசோலை:** பெறுபவருக்குத் தொகை குறிக்காமல் தரப் படுவது. தொகை தெரியாததே

காரணம். இவர் அதைத்தம் கணக்கில் போட்டு எடுத்துக் கொள்ளலாம்.

**cheque, open** – திறந்த காசோலை: இது கீறாக் காசோலை. நேரிடையாகப் பணம் பெறலாம்.

**cheque, order** – ஆணைக் காசோலை: இதைப் பெறுபவர் அதைத் தம் கணக்கில் போட்டுப் பணம் எடுத்துக் கொள்ளலாம் அல்லது அடுத்தவருக்கு மேலொப்பம் செய்து, அவர் பணம் பெறுமாறு செய்யலாம்.

**cheque, returned** – திரும்பு காசோலை: இதைக் கொடுப்பவர் கணக்கில் பணம் இல்லாததால், பெறுபவருக்கு அவர் வங்கி மூலம் திருப்பி அனுப்படும்.

**cheque, stale** – நாட்பட்ட காசோலை: பொதுவாக, 6 மாதத்திற்கு மேற்பட்ட காசோலை. ஒரு காசோலையின் வாழ்நாள் 6 மாதம். அதற்கு மேல் அது செல்லத்தக்கதன்று.

**chief executive** – முதன்மை நிறைவேற்றுநர்: ஒரு நிறுவன முன்னேற்றத்திற்கு முழுமூச்சாகப் பாடுபடுபவர்.

**circular letter of credit** – கடன் சுற்றுக் கடிதம்: ஒரு வங்கி மற்றொரு வங்கிக்கு ஒருவருக்குச் சில நிபந்தனைகளின்படி கடன்கொடுக்குமாறு பரிந்துரைக் கடிதம் எழுதுதல்.

**claim** – 1) உரிமை 2) கோரிக்கை எ–டு. ஊக்கத் தொகைக் கோரிக்கை.

**clause** – உட்பிரிவு: விதியின் கிளைப் பிரிவு.

**clean price** – தெளிவிலை: மீ உயர் ஈட்டின் விலை.

**clearance certificate** – தீர்வுச் சான்று: பற்று ஒன்றுமில்லை எனக்கூறும் சான்றிதழ்.

**clearing bank** – தீர்வக வங்கி: பற்று வரவு நடவடிக்கைகளைச் செய்யும் வங்கி. இது பாரத வங்கியே.

**clearing charges** – தீர்வுக் கட்டணங்கள்.

**clearing house** – தீர்வகம்: பொருளாதாரத்தீர்வு வேலை நடைபெறுமிடம்.

**closing cash balance** – முடிவுப் பண இருப்பு.

**closing entries** – முடிவுப் பதிவுகள்: ஆண்டு இறுதியில் ஒரு நிறுவனத்தின் இலாப நட்டக் கணக்கைக் கண்டறியப் பயன்படும் உரிய பதிவுகள்.

**collecting agent** – வதூல் முகவர்.

**collecting bank** – வதூல் வங்கி.

**columnar petty cash book** – பத்தியுள்ள சில்லரைப்பண ஏடு.

**commerce** – **வணிகவியல்:** தனியார் அல்லது நாடுகளுக் கிடையே வாணிபம் பற்றி ஆராயுந்துறை.

**commercial** – **விளம்பரம்** தொலைக்காட்சி அல்லது வானொலி வழி நடை பெறுவது.

**commerical course** – **வணிகப் படிப்பு:** மேல் நிலைப்பள்ளி யிலும் கல்லூரிகளிலும் அளிக்கப்படுவது.

**commercial crops** – **வணிகப் பயிர்கள்:** பொருளாதாரச் சிறப்புடைய பயிர்கள் எ–டு. காப்பி, தேயிலை.

**commercial geography** – **வணிகப் புவி இயல்:** காப்பி, தேயிலை முதலிய வணிகப் பயிர்கள் பற்றி ஆராயும் பொருளாதாரச் சிறப்புள்ள துறை.

**commercial invoice** – **வணிக இடாப்பு:** வணிகப் பட்டியல். வணிகச் சரக்குளை விளக்கும் பட்டியல்.

**commission** 1) **கழிவு:** விற் பனையில் முகவர், விற்பனை யாளர், தரகர் முதலிய இடைப் பட்டவருக்கிடையே அளிக்கப் படும் குறிப்பிட்ட தொகை. 2) **ஆணையம்:** ஆணைக்குழு, பா. discount.

**commission agent** – **கழிவு முகவர்:** சரக்குகளை வாங்கு வதிலும் விற்பதிலும் தேர்ச்சி யுள்ளவர். இது ஒரு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் அமைவது.

**commodity** – **பண்டம்:** கச்சாப் பொருள். தானியம், காப்பி, தேயிலை. மென் பண்டங்கள் என்றும் பெயர்.

**commodity** – **பண்டச் சந்தை:** பண்ட அங்காடி.

**common market** – **பொதுச் சந்தை.**

**communication** – **செய்தித் தொடர்பு:** தொலைபேசி, தொலையச்சு, உருநகலி முதலியவை.

**company** – **நிறுமம்:** கூட்ட மைப்பு. சட்டவரம்பு பெற்று ஒரே தொகுதியாக இயங்குவது. இது பல வகை.

**company, incorporated** – **ஒருங்கிணை நிறுமம்:** இது தன் சொந்த உரிமையில் ஒரு சட்ட ஆளாக உள்ளது. சொத்தை உரிமை கொள்வது. வழக்கு தொடுப்பது, தொடுக்கப் படுவது.

**company joint stock** – **கூட்டுப் பங்கு நிறுமம்:** இதில் இதன் உறுப்பினர்கள் தங்கள் இருப் பைத் தாங்களே தேடுவர். அவர்கள் இருப்பு அடிப்படை யில் வாணிபம் நடைபெறும்.

**company law** – **நிறுமச்சட்டம்:** நிறுமக்கட்டுப்பாடு, நடப்பு,

தோற்றம் ஆகியவற்றை நெறிப் படுத்தும் விதிகள் கொண்டது இவை சட்ட அடிப்படையில் அமைந்தவை. முதன்மையான சட்டங்களாவன: 1) நிறுமச் சட்டம் 2) நொடிப்புச் சட்டம் 3) நிதியப் பணிச் சட்டம்.

**company, limited** – வரையறை **நிறுமம்:** பொறுப்புகள் வரை யறை உடையவை. இதனால் நிறுமக்கடனுக்குரிய இதன் உறுப்பினர்களின் பொறுப்பு வரம்புடையது.

**company, private** – **தனியார் நிறுமம்:** பொது நிறுமம் அன்று. ஆனால் பதிவு செய்யப் பட்டது. இதன் பங்குகளைப் பொது மக்களுக்கு விற்க முடி யாது. சட்டத் தேவைகள் அவ் வளவு கடுமையானவை அல்ல. குறைந்த அளவு செலுத்து முதல் தேவையும் இதற்கில்லை. முழுக் கணக்குகளையும் இது அளிக்கத் தேவை இல்லை.

**company, public limited** – **வரையறையுள்ள பொது நிறுமம்:** குறிப்பிட்ட அனுமதிக் கப்பட்ட பங்கு முதலை இது கொண்டது. பொது மக்களுக் குப் பங்குகளையம் ஈடுகளை யும் வழங்குவது. நிறுமச் சட்டப் படி தோற்றுவிக்கப்படுவது.

**company, registered** – **பதிவு செய்யப்பட்ட நிறுமம்:** நிறுமச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது பொது வகை நிறுமம் இதுவே. ஒரு நிறுமம் பொது நிறும மாகவோ தனியார் நிறும மாகவோ பதிவு செய்யப் படலாம்.

**company seal** – **நிறும முத்திரை:** நிறுமப் பெயர் பொறித்த முத்திரை, நிறுமம் வழங்கும் ஆவணங்களில் தவறாது இது போடப்படும்.

**company secretary** – **நிறுமச் செயலர்:** நிறும அலுவலர். இயக்குநர்களால் அமர்த்தப் படுபவர். நிறும ஆட்சிச் சார் பான அலுவல்கள் அனைத் தையும் செய்பவர். சில தகுதிகள் உள்ளவர்.

**company, statutory** – **சட்டவழி நிறுமம்:** நாடாளுமன்றத் தனிச்சட்டத்தின் மூலம் நிறுவப் படுவது. இதன் உரிமைகளும் அதிகாரங்களும் தனிச்சட்டத் திற்குட்பட்டது. எ–டு. வாழ்நாள் காப்பீட்டுக்கழகம், தொழில் முதலீட்டுக் கழகம்.

**company, unlimited** – **வரை யறையற்ற நிறுமம்:** இதில் இதன் உறுப்பினர்களின் பொறுப்பு எவ்வழியிலும் வரையறுக்கப்பட்டதன்று. இது பல வகை.

**compensating error** – **ஈடுசெய் பிழை:** சில சமயம் ஒருகணக் கில் பிழை ஏற்பட, அதே தொகை அளவிற்கு வேறொரு கணக்கிலும் பிழை ஏற்படுதல்.

எ—டு. விற்பனைக் கணக்கு ரூ 500 குறைத்துக் கூட்டப்படுதல்.

**compensation fund** – ஈடுசெய் நிதியம்: ஒரு நிறுவனத்தில் இழப்பு ஏற்படும் பொழுது அதைச் சரிக்கட்டுவதற்காக உள்ள நிதியம்.

**composite costing** – தொகுப்பு ஆக்கச் செலவு.

**composite depreciation** – தொகுப்புத் தேய்மானம்.

**compulsory deposit scheme** – கட்டாயச் சேமிப்புத் திட்டம்: அரசின் சேமிப்புத் திட்டம்.

**compulsory liquidation** – கட்டாயக் கலைப்பு: நீதிமன்றம் மூலம் ஒரு நிறுமம் கலைக்கப்படுதல். இதற்கு நீதிமன்றத்திற்கும் பதிவாளருக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

**computer** – கணிப்பொறி: தகவல்களை விரைவாக வேண்டியவாறு முறையாக்கித் தரும் மின்னணுக் கருவியமைப்பு. தொழில் நுணுக்க முன்னேற்றம் காரணமாக, இன்று கணிப்பொறி இல்லாத அலுவலங்கள் தொழிலகங்கள் இல்லை எனலாம். கணிப்பொறி வயமாக்கல் ஓர் இன்றியமையாத் தேவை.

**condition** – நிபந்தனை: ஓர் ஒப்பந்தத்தின் பெரும உறுப்பு. நிறைவேறாவிட்டால் ஒப்பந்த மீறலாக அமைவது. மதிப்பற்றது.

**conditional endorsement** – நிபந்தனை மேலொப்பம்; கட்டுப் பாட்டிற்குட்பட்ட புறக் குறிப்பு.

**consent** – இசைவு: ஒப்புதல்.

**consideration** – 1) நம்புறுதி: ஓர் ஒப்பந்தத்தில் வாங்குவதற்குரிய விலை குறித்து இருவரிடமும் உறுதி மொழிபெறுதல் 2) விலை ஈடு: பிணையங்கள் விற்க அல்லது வாங்குவதற்குரிய ஒப்பந்தத்தின் பண மதிப்பு.

**consignee** – பெறுநர்: அனுப்பீட்டைப் பெறுபவர். அனுப்பீடு என்பது சரக்குகளைக் குறிப்பது.

**consignment** – அனுப்பீடு: சரக்குகள் ஒருவருக்கு அனுப்பப்படுதல், விற்பனையைப் பெருக்கும் வழிகளில் ஒன்று.

**consignment account** – அனுப்பீட்டுக் கணக்கு: சரக்கு ஆக்கச் செலவு. ஆன செலவு, முகவர் கழிவு, விற்பனை ஆதாயம் ஆகிய விவரங்கள் கொண்டது.

**consignment, inward** – உள் அனுப்பீடு.

**consignment note** – அனுப்பீட்டுக் குறிப்பு: சரக்குகள் அனுப்புவதைத் தொடரும்

ஆவணம். ஒருவழி உண்டியல் இது.

**consignment, outward** – வெளி அனுப்பீடு.

**consignor** – அனுப்புநர்: சரக்கு களை அனுப்புபவர்.

**consolidated accounts** – தொகுப்புக் கணக்குகள்: நிறு மத்தொகுதிகளின் சேர்ந்த கணக்குகள்.

**consolidated annuities** – தொகுப்பு ஆண்டுத் தொகை கள்.

**consols** – கடன் பத்திரங்கள்: அரசு ஈடுகள், வட்டியளிப் பவை.

**consortium** – இணையம்: தற் காலிகமாக இரண்டிற்கு மேற் பட்ட பெரிய நிறுமங்கள் சேர்ந்து, ஒரு பெரிய திட்டத் திற்கு ஒப்பந்தப் புள்ளி வழங் கல். ஒரு புதிய மின் நிலையம் அல்லது அணைக் கட்டிற்காக இது இருக்கலாம்.

**consular invoice** – பேராள் இடாப்பு: ஏற்றுமதிப் பட்டியல், ஏற்றுமதி செய்யப்படும் நாட்டில் இறக்குமதி செய்யப் படும் நாட்டின் பேராளினால் சான்றிடப்படல்.

**consumer cooperation** – நுகர் வோர் கூட்டுறவு.

**consumer cooperative stores** – நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் கள்.

**consumer credit** – நுகர்வோர் கடன்: சரக்குகள் வாங்கப் பொது மக்களுக்கு அளிக்கும் குறுகிய காலக் கடன்கள்.

**consumer goods** – நுகர்வோர் சரக்குகள்: பொது மக்கள் வாங்கும் பொருள்கள்.

**consumer market** – நுகர்வோர் அங்காடி: நுகர்வோர் சரக்கு களுக்குரிய சந்தை. தொழில் சந்தையிலிருந்து இது வேறு பட்டது.

**consumption** – நுகர்வு: பயன் பாடு. தனியாட்கள், நிறுவனங் கள், அரசுகள் ஆகியவற்றின் தற்காலிகத் தேவைகளை நிறைவு செய்ய, நுகர்பொருள் களையும் பணிகளையும் பயன் படுத்துதல். 2) நுகர்வோர் சரக்குகளிலும் பணிகளிலும் முழுப் பொருளாதாரத்தின் பணம் செலவழிக்கப்படுதல். இது நுகர்வோர் செலவு எனப் படும்.

**container account** – கொள் கலன் கணக்கு சரக்குகள் அனுப்பப்படும் கொள்கலன் பற்றிய விவரம்.

**contingent annuity** – எதிர்பாரா ஆண்டுத்தொகை: நிகழும் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு மட்டு மே கொடுக்கப்படும் ஆண்டுத் தொகை. கணவன் மனைவி ஆகிய இருவரில் ஒருவர் இறந்த பின் தொடங்கும் செலுத்த

லைக் கொண்ட ஆண்டுத் தொகை. பின் வரு ஆண்டுத் தொகை.

**contingent assets** – எதிர் பாராச் சொத்துகள் நிகழ்வுறாச் சொத்துகள், காப்பில் அடங்கு பவை.

**contingent expenses** – எதிர் பாராச் செலவுகள்.

**contingent liabilities** – எதிர் பாராப் பொறுப்புகள்: குறிப் பிட்ட நிகழ்ச்சிநிகழும் என்று ஐந் தொகையில் எதிர்பார்ப்ப தனால் உண்டாகும் பொறுப்பு. எ–டு. ஒரு நிறுமத்துக்கு எதிராக நீதிமன்றத்திலுள்ள வழக்கு. அதன் முடிவை அறுயிட்டுச் சொல்ல இயலாது.

**contra account** – எதிர்க் கணக்கு.

**contra entries** – எதிர்ப் பதிவு கள்: கணக்கு வைப்புப் பதிவு கள், முன் பதிவை நீக்கக் கணக்கு எதிர் பக்கத்தில் செய்யப்படுவை பா. percontra.

**contraband goods** – கள்ளச் சரக்குகள்: கடத்தல் சரக்குகள்.

**contract** – ஒப்பந்தம்: விலைக் குறிப்பீடு, ஏற்பு ஆகிய இரண் டின் விளைவால் ஏற்படும் சட்டப்படியான உடன்பாடு. பல தேவைகளையும் அது நிறைவு செய்வதாய் இருக்க வேண்டும்.

**contract note** – ஒப்பந்தக் குறிப்பு: பங்குத்தரகர் அல்லது பண்டத்தரகர் தம் வாடிக்கை யாளருக்குச் சான்றாக அனுப் பும் ஆவணம். தம் வாடிக்கை யாளர் அறிவுறுத்தல்களின்படி ஈடுகளை வாங்கியதற்கும் விற்றதற்கும் இது சான்று.

**contribution** – அளிப்பு: 1) குறிப்பிட்ட அளவு வாணிபப் பொருள் விற்கும் விலை. இதில் மாறும் உற்பத்தி ஆக்கச் செலவுகள் நீக்கப்படும் 2) உரிமை கோரும் செலுத்தல் களை இரு காப்புறுதியாளர் கள் பகிர்ந்து கொள்ளுதல்.

**contributory** – வழங்குநர்: ஒரு நிறுமம் நொடிக்கும் பொழுது அதன் இருப்புகளுக்குப் பணம் அளிப்பவர்.

**control accounts** – கட்டுப் பாட்டுக் கணக்குகள்: வேறு பெயர் மொத்தக்கடனாளிக் கணக்கு. இதில் எல்லாத் தனி யாள் கடன் கணக்குகளின் தொகுப்புக்குச் சமமாக, இருப்பு இருக்கும்.

**control of cost** – ஆக்கச் செலவுக்கட்டுப்பாடு: ஒரு பொருளை உற்பத்தி செய்வதற் குரிய செலவு.

**controllable cost** – கட்டுப் படுத்தக் கூடிய ஆக்கச் செலவு: ஆதாயங் காணக் கட்டுப்பாட்டுக் குள் வைக்கப்படும் செலவு.

**conversion** – மாற்றம்.

**conversion cost** – மாற்றும் ஆக்கச் செலவு.

**conversion method** – **மாற்று முறை:** ஒற்றைப் பதிவினை இரட்டைப்பதிவுக்கு - மாற்றல். இது கணக்குவைப்பு முறையில் செய்யப்படுவது.

**cooperation** – **கூட்டுறவு:** கூட்டு றவே நாட்டுயர்வு 2) ஒத்து ழைப்பு.

**cooperative** – **கூட்டுறவுச் சங்கம்:** ஒரு வணிக நிறுவனம். கூட்டுறவு அடிப்படையில் அமைந்தது. தொழில்கள் மிகுந் துள்ள இடங்களில் அதிக மிருப்பது. வகை பல.

**cooperative bank** – **கூட்டுறவு வங்கி:** கூட்டுறவு அடிப்படை யில் நடைபெறுவது. இவ் வங்கிகள் நம் நாட்டில் நிறைய உள்ளன. இதற்குத் தலைமை யானது மையக் கூட்டுறவு வங்கி.

**cooperative stores** – **கூட்டுறவுப் பண்டகசாலை:** பொது மக்களுக்காகவும் தொழி லாளர்களுக்காகவும் மாணவர் களுக்காகவும் அமைந்து பயன் விளைவிப்பவை.

**cooperative societies, types of** – **கூட்டுறவுச் சங்க வகைகள்:** இவற்றின் முக்கிய வகைகள் 1) கூட்டுறவு நாணயச்சங்கங் கள் 2) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 3) கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் 4) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 5) கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்.

**copartnership shares** – **இணை கூட்டாளிப் பங்குகள்.**

**coproducts** – **இணை விளை பொருள்கள்:** இணை உற் பத்திப் பொருள்கள்.

**corporate image** – **கூட்டு மாண்பு:** ஒரு நிறும மதிப்பின் உயர்வு. இது அது தன் பணி யாளர்களை நடத்தும் பாங்கும் நல்ல சூழலை உருவாக்கும் நிலையுமாகும். அதன் விற்ப னைக்கு இதுமிக இன்றியமை யாதது.

**corporate plan** – **கூட்டுத்திட்டம்:** தொழில் வளர்ச்சித் திட்டம்.

**corporation** - **கழகம்:** பலர் சேர்ந்த கூட்டமைப்பு. பொது வாக, அரசு சார்ந்ததாக இருக் கும். எ–டு. சேரன் போக்குவரத் துக் கழகம், வாழ்நாள் காப் பீட்டுக்கழகம்.

**corporation tax** – **கூட்டுவரி:** நிறுமங்கள், நிறுவனங்கள் ஈட்டும் ஆதாயங்களுக்கு விதிக் கப்படும் வரி.

**cost** – **ஆக்கச் செலவு:** அடக்கச் செலவு. 1. ஒரு பொருளை வாங்கக் கொடுக்கும் பணம். 2. ஒரு குறிக்கோளை அடையச் செலவிடும் பணம். எ–டு. சில பொருள்களை உற்பத்தி செய்தல், தொழிற் சாலை அமைத்தல்.

**cost account** – **ஆக்கச் செலவுக் கணக்கு:** ஒரு பொருளை உற்பத்தி செய்ய ஆகும் செலவு.

**cost accountant** – **ஆக்கச் செலவுக் கணக்கர்:** ஒரு நிறுவனக் கணக்கர். தொழிற்சாலை முறைகளின் திறன், அடக்கம் ஆகியவற்றிற்குரிய தகவல்களைத் திரட்டிக் கையாள்வதே இவர் முதன்மையான பணி. இதன் அடிப்படையில் தொழில்களின் இலாபத்தைப்பற்றி மேலாண்மைக்கு அறிவுரை கூறுவார். ஒரு நிறுவனத்தின் பல துறைகளின் வரவு செலவுக் கட்டுப்பாடு, மதிப்பீடுகள், அலகு அடக்கங்கள் ஆகியவற்றை இயக்குபவர். இவரே ஒப்பந்தப் புள்ளிகள் வழங்குவதற்குரிய தகவல்களை அளிப்பவர். ஆக்குநர் எனலாம்.

**cost accounting** – **ஆக்கச் செலவு கணக்கிடுதல்:** உற்பத்தி செலவு பார்த்தல்.

**cost allocation** – **ஆக்கச் செலவு ஒதுக்கீடு.**

**cost apportionment** – **ஆக்கச் செலவுப் பங்கீடு:** உற்பத்திச் செலவு பகிர்வு செய்தல்.

**cost ascertainment** – **ஆக்கச் செலவு அறுதியிடல்:** அடக்கத்தை உறுதி செய்தல்.

**cost audit** – **ஆக்கச் செலவுத் தணிக்கை:** அடக்கத் தணிக்கை.

**cost benefit analysis** – **ஆக்கச் செலவு நன்மைப் பகுப்பு:** தொடர்பான பொருளாதாரச் செலவுகள், அடிப்படை நன்மைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒரு திட்டத்தைச் செயற்படுத்த முடிவு செய்ய உதவும் பகுப்பு.

**cost classification** – **ஆக்கச் செலவு வகைப்பாடு:** உற்பத்திச் செலவுப் பாகுபாடு.

**cost control department** – **ஆக்கச் செலவுக் கட்டுப்பாட்டுத் துறை:** உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்தும் பகுதி.

**cost effectiveness** – **ஆக்கச் செலவு விளைவு:** 1. குறைந்த செலவைக் கொண்டு இலக்கை அடைதல் 2. ஓர் இலக்கை அடைய உதவும் செலவு, வாணிப வெற்றியாக அமைதல்.

**cost elements** – **ஆக்கச் செலவு மூலங்கள்:** அடக்கச் செலவுக் கூறுகள்.

**cost estimate** – **ஆக்கச் செலவு மதிப்பீடு:** அடக்க மதிப்பீடு.

**cost, fixed** – **ஒரே ஆக்கச் செலவு.** மாறா அடக்கச் செலவு.

**cost function** – **ஆக்கச் செலவுச் சார் பலன்:** உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆகும் வேறுபட்ட செலவுகளை வரையறை செய்யும் சார்பலன். உற்பத்திக் கொள்கையில் சில

உய்மானங்களைக் கொண்டு ஒவ்வொரு வெளிப்பாட்டுக்குரிய உட்பாடுகளின் தனியாக்கச் செலவுச் சேர்க்கைகளை ஆக்கச்செலவு சார்பலனிலிருந்து பெறலாம்.

**cost ledger control accounts** – ஆக்கச் செலவுப் பேரேட்டுக் கட்டுபாட்டுக் கணக்குகள்: அடக்க ஏடு கட்டுமானக் கணக்கு.

**cost minimization** – ஆக்கச் செலவுச்சிறுமம்: ஒரு தனியாள் அல்லது நிறுவனம் குறைந்த விலையில் சரக்குகளை வாங்குதல், இலாப மீட்ட சிறந்த வழி. பா. profit maximization.

**cost of sales** – விற்பனைச் செலவு.

**cost plus** – ஆக்கச் செலவு கூட்டல்: 1. ஒப்பந்த நிபந்தனைகள். இவற்றில் உற்பத்தியாளர் சரக்குகளை, அடக்கச் செலவுக் கூடுதலாகத்தர ஒப்புக் கொள்ளுதல். இதற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டணத்தைப் பெறுதல் 2. ஒரு வேலை ஆகும் செலவைக் கணக்கிடுவதால் குறிப்பிட்ட விழுக்காட்டைச் சேர்த்தல்.

**cost premium bonus** – ஆக்கச் செலவு முனைம ஊக்க ஊதியம்: அடக்க மிகை மதிப்பு ஊக்கத்தொகை.

**cost reduction** – ஆக்கச் செலவுக் குறைப்பு: அடக்கச் செலவைக் குறைத்தல்.

**cost reports** – ஆக்கச் செலவு அறிக்கைகள்: அடக்க அறிக்கைகள்.

**cost standards** – ஆக்கச் செலவுத் தரம்: உற்பத்திச் செலவு மதிப்பீடு.

**cost unit** – ஆக்கச் செலவு அலகு: ஓர் இனத்தை உண்டாக்க ஆகும் செலவு.

**cost variance** – ஆக்கச் செலவு மாறுபாடு: அடக்க முரண்பாடு.

**cost of capital** – முதலீட்டு ஆக்கச் செலவு: முதலின அடக்கச் செலவு.

**cost of production** – உற்பத்திச் செலவு: ஒரு பொருளை ஆக்குவதற்குரிய செலவினம்.

**counterbid** – எதிர்க்கேள்வி: ஏலத்தில் ஒரு கேள்விக்கு மாற்றுக்கேள்வி.

**counter foil** – அடிக்கட்டை: வரவுச் சீட்டுகளின் அடிப்பகுதி. வைத்திருப்பவரிடம் நிலையாக இருப்பது.

**counteroffer** – எதிர்விலைக் குறிப்பீடு: ஏலத்தில் விற்பனையாளர் தம் பொருளுக்குக் கேட்கப்படும் குறைவான விலைக்கு மேல் ஒரு விலை கூறல்.

**countermanding of cheque** – **காசோலை மறுப்பாணை இடுதல்:** காசோலைத்தடை ஆணை வழங்குதல்.

**counter sign** – **எதிர் ஒப்பம்:** கூடுதல் ஒப்பம். ஆவணங்களில் இடப்பெறுவது.

**countervailing duty** – **ஈடு செய் வரி:** கூடுதல் இறக்குமதி வரி.

**coupon** – **சீட்டு:** 1. ஒரு பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நாளிடப்பட்ட துண்டுகளில் ஒன்று. வட்டி அல்லது பங்கா தாயம் பெறப் பயன்படுவது. 2. குறிப்பிட்ட வட்டிவீதம் அளிக்கும் பத்திரம். எ–டு. 5% சீட்டு என்பது 5% வட்டி யளிப்பது.

**covenant** – **உடன்படிக்கை:** ஒப்பந்தப் பத்திரம் இறுதிநாள் உறுதிமொழி. எ–டு. நில உடன் படிக்கை.

**cover** - **ஈடு:** குறிப்பிட்ட இடருக்கு எதிராக வாழ்நாள் காப்புறுதி வழங்கப்படுதல். எ–டு. பங் காதய ஈடு.

**cover note** – **சான்றுறுதி:** முதன்மைக் காப்புறுதி முறி ஆவணங்கள் வழங்கப்படும் முன், கொடுக்கப்படும் தற்கால மெய்ப்பு.

**crash** – **வீழ்ச்சி:** சந்தையில் விலை சட்டென்று குறைதல்.

**credit** – 1. **மதிப்பு:** ஒருவர் அல்லது ஒரு நிறுவனத்தின் நிதிநிலைச் சிறப்பு: 2. **வரவு:** வாங்கும் பொருளுக்குக் கொடுக்கும் பணம். 3. **கடன்:** வங்கியிலிருந்து வாங்கும் பற்றுத் தொகை.

**credit account** – **கடன் கணக்கு:** பற்றுக் கணக்கு.

**credit balance** – **வரவு இருப்பு.**

**credit control** – **கடன் கட்டுப் பாடு.**

**credit facility** – **கடன் வசதி:** வங்கியில் கடன் வாங்குதல்.

**credit note** – **வரவுக் குறிப்பு:** அனுப்பிய சரக்குகளில் விற்காதவை அனுப்பியவருக்குத் திருப்பப்படும்பொழுது, அதற்காக அனுப்பியவர் விற்பவருக்குக் கொடுக்கும் குறிப்பு. வணிக நடவடிக்கைகளில் ஒன்று.

**creditor** – **கடன் ஈந்தோர்:** ஒரு தனியாள் அல்லது நிறுவனத்திற்கு ஒருவர் கடன் உறுதியின் பேரில் கடன் தொகை அளித்தல்.

**creditor ledger adjustment account** – **கடன் ஈந்தோர் பேரேட்டுச் சரிகட்டுக் கணக்கு:** பொதுப் பேரேட்டில் உள்ளது.

**credit sale- agreement** – **கடன் விற்பனை உடன்பாடு:** ஒரு பொருளைக் கடனுக்காக வாங்கும்பொழுது செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

**credit squeeze** – **பணமுடக்கம்:** பணம் வழங்குதலை வரயறை செய்து பொருளாதாரச் செயலைக் குறைக்க அரசு எடுக்கும் நடவடிக்கை.

**credit worthiness** – **கடன் தகைமை:** கடன் அடைக்குந்திறன்.

**cross holding** – **நிறுமங்களுக்கிடைப் பிடிப்பு:** நிறுமங்களுக்கிடையே பங்கைப் பிடித்து வைத்தல்.

**crossed cheque** – **கீறிய காசோலை:** பாதுகாப்புக்காக இரு கோடிடப்படும் காசோலை. இதைக் கணக்கில் போட்டே பணம் எடுக்கமுடியும்.

**crossing** – **கீறல்:** காசோலை கீறும் முறை. இது பலவகை.

**cross reference** – **குறுக்குக் குறிப்பு:** எதிர்க்குறிப்பு.

**cum dividend** – **இலாப ஈவுகள்.**

**cum interest** – **வட்டி ஈவுள்ள.**

**cumulative preference shares** – **குவி முன்னுரிமைப் பங்குகள்:** ஒருவகை முன்னுரிமைப் பங்குகள். இவற்றில் முந்திய ஆண்டுகளில் கொடுக்கப்படாத பங்காதாயங்களையும் பெற உரிமை உண்டு.

**currency** – **செலாவணி, நாணயம்:** 1. பொருளியலில் பழக்கத்திலுள்ள பணம். இது எவ்வகையிலும் இருக்கலாம்.

2. பண்டம் மாற்றுவதற்குரிய கருவி: தாள்பணம், காசோலை, வரைவோலை.

3. ஒரு நாட்டிலுள்ள குறிப்பிட்ட வகைச் செலவணிப் பணம், டாலர் – அமெரிக்கா. பவுன் – இங்கிலாந்து. ரூபாய் – இந்தியா.

4. மாற்றுண்டியல் முதிர்ச்சி அடையுமுன் கழியுங்காலம்.

**current account** – **நடப்புக் கணக்கு:** வங்கியில் ஒருவர் நாள்தோறும் பயன்படுத்தும் வினைமிகு கணக்கு. காசோலை மூலம் பணம் போடலாம்; பணம் எடுக்கலாம்; பணம் பிறருக்குக் கொடுக்கலாம். செலுத்து சீட்டுகள் மூலம் போடலாம். இக்கணக்கில் குறைந்த அளவு இருக்க வேண்டிய தொகை ரூ.500. ஒ. savings account.

**current assets** – **நடப்பு இருப்புகள்:** ஒரு தொழிலில் சுழல் முதலின் பகுதியாக உள்ள சொத்துகள். வாணிபத்தில் மாற்றப்படக்கூடியவை. எ–டு. கடனாளிகள், பணம், பங்குச் சந்தை. ஒ. capital asset.

**current liabilities** – **நடப்புப் பொறுப்புகள்:** ஒரு நிறுவனத்தின் கடன் ஈந்தவர்களுக்குரிய தொகைகள். குறிப்பிட்ட காலத்தில் செலுத்தப்படவேண்டியவை.

**custom of the trade** – வாணிப மரபு: வாணிபத்தில் தொன்று தொட்டுப் பின் பற்றப்படும் வழக்கம் அல்லது நடைமுறை.

**customs and excise** – சுங்க – ஆயத்துறை.

**customs duty** – சுங்கவரி: ஆயத் துறை வரி.

**customs tariff** – சுங்கவரி வீ தங் கள்: இவை ஏற்றுமதி இறக்கு மதி செய்யப்படும் சரக்குக ளுக்கு இன வரியாக விதிக்கபட் படும் வரியளவுகள்.

# D

**damages** – நட்ட ஈடு: இழப்பு, காயம், ஒப்பந்த மீறல், உரிமை மீறல் முதலியவைகளுக்குப் பணமாக ஈடு பெறுதல். இது பலவகை.

**dated security** – காலப் பிணை யம்: குறிப்பிட்ட மீட்புக்காலம் கொண்ட பங்கு.

**day books** – நாளேடுள்: முதல் பதிவேடுகள். ஒரே தொடர் ஆவணங்களைப் பதிபவை. எ–டு. விற்பனை நாளேடு. இடாப்பு விவரங்களைக் குறிப் பது.

**days of grace** – கண்ணோட்ட நாட்கள்: சலுகை நாட்கள். குறிப்பிட்ட நாள் முடிந்தவுடன் காப்புறுதித் தவணைக் கட்ட ணம், மாற்றுச் சீட்டுச் செலுத்துகை ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் கூடுதல் காலம்.

**dealer** – ஈடு(படு)நர்: 1) ஒரு பொருளில் வணிகம் செய்பவர் 2) பங்குச் சந்தையில் முதன் மையாக ஈடுபடுபவர். பா. trader, merchant.

**dear money** – அரும் பணம்: அதிக வட்டிக்குக் கடன் அளிக் கப்படுங் கொள்கை. ஒ. cheap money.

**dearness allowance** – அக விலைப்படி: விலைவாசி கூடும்பொழுது அதற்கேற்ற வாறு அளிக்கப்படுந் தொகை.

**debenture** – கடன் ஆவணம்: கடன் பத்திரம். ஒரு நிறுவனம் பணந்திரட்ட வெளியிடுவது. இது பல வகை.

**debenture redemption fund** – கடன் ஆவண மீட்பு நிதி: இதை உரிய காலத்தில் மீட்க, ஒரு நிறுமம் தன் ஆதாயத்திலிருந்து ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகை ஒதுக்குதல்.

**debit** – பற்று: 1) இரட்டை முறைப் பதிவுக் கணக்கில் இடக் கை பக்கமுள்ள பதிவு. ஒரு நிறு வனம் அல்லது ஒருவர் பிற ருக்கு அளிக்க வேண்டிய தொகை. 2) வங்கிக் கணக்கில் வாடிக்கையாளர் பெறுவது அல்லது வங்கி அளிப்பது.

**debit balance** – பற்றிருப்பு.

**debit note** – பற்றுக் குறிப்பு: வரவேண்டிய பணத்திற்கு ஒரு நிறுவனம் ஒருவருவருக்கு அனுப்பும் ஆவணம். இதற்கு மாற்று, இடாப்பு ஆகும். ஒ. credit note.

**debtor** – கடனாளி: கடனைப் பெற்றவர். அல்லது தான் கடனாகப் பெற்ற தொகையை ஒருவருக்குக் கொடுக்க வேண்டியவர்.

**debtor ledger adjustment account** – கடனாளிப் பேரேட்டுச் சரிக்கட்டுக் கணக்கு.

**decision-making** – முடிவு எடுத்தல்: ஒரு நிறுவனத்தில் வகுக்கப்பட்டுள்ள கொள்கையைச் செயற்படுத்த மேற்கொள்ளும் முடிவு. ஒரு நிறுவன மேம்பாட்டிற்கு இது மிக இன்றியமையாதது. இது அரசுக்கும் பொருந்தும்.

**deed** – ஆவணம்: பத்திரம்.

**deed of partnership** – கூட்டாண்மை ஒப்பந்த ஆவணம்: ஒரு வாணிபம் நடத்தப் பங்காளர்கள் செய்து கொள்ளும் உடன்படிக்கை.

**default interest** – தவறுதல் வட்டி: தவணை தவறுவதற்காகச் செலுத்தப்படும் வட்டி.

**deferred annuity** – பின்னுரிமை ஆண்டுத் தொகை: காப்புறுதி முறியாளர் குறிப்பிட்ட வயதுக்கு வரும்பொழுது செலுத்தப்படுந் தொகை.

**deferred asset** – பின்னுரிமை இருப்பு: பின்னால் பெறப்படும் சொத்து.

**deferred liability** – பின்னுரிமைப் பொறுப்பு: பின்னால் வாய்ப்பு தரும் பொறுப்பு.

**deferred ordinary share** – பின்னுரிமைப் பொதுப்பங்கு: பங்காதாயம் குறைவாகவுள்ள பங்கு.

**deferred payment-agreement** – செலுத்து பின்னுரிமை உடன்பாடு: செலுத்துதல் பின்னால் அமைந்திருப்பது.

**deferred rebate** – பின்னுரிமைத் தள்ளுபடி: பொருள் வழங்கிய பின், வாடிக்கையாளருக்கு அவ்வப்பொழுது வழங்கும் தள்ளுபடி. வாடிக்கையாளரின் தொடர்ந்த ஆதரவு இருக்கும் நிலையில், இது அளிக்கப்படுவது.

**deferred revenue expenditure** – பின்னுரிமை வருவாயினச் செலவு: செலவு செய்த ஆண்டுக்கு மட்டுமின்றி, அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் தொடர்ந்து பயனளிக்கும் செலவுகள்.

**deferred shares** – பின்னுரிமைப் பங்குகள்: நலங்கள் பின்னால் கிடைக்கும் பங்குகள்.

**deficit financing** – பற்றாக் குறை வரவு செலவுத்திட்டம்: பொருளாதாரச் செயலை ஊக்கு விக்க, அரசு இத்திட்டத்தை ஆண்டு இறுதியில் அளிக்கும்.

**deflation** – பணச் சுருக்கம்: விலை மட்டத்தில் பொது வீழ்ச்சி ஏற்படுதல். பா. disinflation. ஒ.inflation.

**del credere agent** – பிணைய முகவர்: விற்பனை முகவர். தான் விற்கும் பொருள்களுக் குத் தன் முதல்வர் சார்பாகப் பணம் கொடுப்பதாக உறுதி யளிப்பவர். இவ்விடருக்காக அவர் கூடுதல் கழிவு பெறுவார்.

**delegation of authority** – அதி காரம் வழங்கல்: குறிப்பிட்ட பணிகளைச் செய்ய, ஒரு நிறு வனத்தில் ஒருவருக்கு அதி காரம் அளிக்கப்படுதல்.

**delivered price** – ஒப்படைப்பு விலை: புள்ளி குறித்த விலை. இதில் கட்டி அனுப்புதல், காப் புறுதி, வாங்குபவர் இடத்துக்குச் சேர்ப்பித்தல் ஆகியவை சேரும்.

**delivery note** – ஒப்படைப்புக் குறிப்பு: வழக்கமாக, இரு படிகளில் அனுப்புபவர், பெறு பவருக்கு அளிக்கும் ஆவணம். பா.advice note.

**delivery order** – ஒப்படைப்பு ஆணை: சரக்கு உரிமையாளர் தான் சரக்கு அனுப்பியவருக்கு அனுப்பும் எழுத்து வடிவ ஆவணம். இவ்வாணையில் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அச் சரக்குகளை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

**demand bills** – தேவை உண்டி யல்கள்: கேட்பு மாற்றுச் சீட்டுகள்.

**demurrage** – கிடப்புக் கட்டணம்: சுணக்கக் கட்டணம். சரக்குகளை எடுக்கத் தாமத மாகும் பொழுது, அக்காலத்திற் குரிய கட்டணத்தைத் தண்டக் கட்டணமாக வழிப்பட்டியல் கட்டணத்தோடு சேர்த்துக் கொடுத்தல். இது ஊர்திப் பணி யில் நடைபெறுவது.

**department** – துறை: புலம்.

**departmental account** – துறை வாரிக் கணக்கு: துறை ஒவ் வொன்றாக எழுதப்படுங் கணக்கு.

**departmental stores** – பல் பொருள் அங்காடி: பல் பொருள் பண்டகச்சாலை. ஒரே சமயத்தில் பல பொருள்களை யும் வாங்குமிடமான விற்பனை நிலையம். தேவைக்கேற்ப, இவை தற்காலத்தில் அதிகமாகி வருகின்றன.

**depletion method** – வெறு மையாக்கு முறை: கனிச் சுரங்கச் சொத்துகள் மீது தேய் மானம் நீக்க இம்முறை பெரி தும் பயன்படுவது.

**deposit** – வைப்பு நிதி: வைப் புத் தொகை. 1) ஒரு பொருளை

வாங்குவதற்காக ஒரு நிறுவனத் திடம் அளிக்கும் தொகை. விற்பனைத் தொகையின் ஒரு பகுதி இது. 2) வட்டிக்காக வங்கியில் செலுத்தப்படுந் தொகை 3) தவணை முறை வாங்குகையில் முதல் தவணை யாகச் செலுத்தப்படுவது. இடு நிதி, இடுதொகை என்றுங் கூறலாம்.

**deposit account** – **வைப்பு நிதிக் கணக்கு:** காசோலை மூலம் எடுக்க இயலாத வங்கிக் கணக்கு. வட்டி மட்டும் வாங்கிக் கொள்ளலாம்.

**deposit bonds** – **வைப்பு நிதி ஆவணங்கள்:** தேசியச் சேமிப் புப் பத்திரங்கள். பல ஊக்குவிப் புகள் கொண்டவை.

**depreciation** – **தேய்மானம்:** அழிவு தேய்வினால் ஏற்படும் ஓர் இருப்பின் மதிப்புக் குறை வைக் காட்ட ஒரு நிறுவனத்தின் இலாப–நட்டக் கணக்கில் ஒதுக் கப்படும் தொகை. இருப்பு என்பது கட்டடம் முதலிய அசையாச் சொத்துகளாகவோ எந்திரம் முதலிய அசையுஞ் சொத்துகளாகவோ இருக்க லாம். முன்னதற்குத் தேய்மான விழுக்காடு குறைவு. 2% பின்னதற்கு 40%. ஒ. appreciation.

**depreciation reserve** – **தேய் மானக் காப்புநிதி:** தேய்மானத் தை ஈடுகட்ட உருவாக்கப்படு வது.

**depression** – **தாழ்ச்சி: இறக்கம்.** பொருளியலில் ஏற்படும் கடுமையான பின்னடைவுக் காலம்

**devaluation** – **மதிப்பிறக்கம்:** மதிப்புக் குறைப்பு. பொன் முதலிய செலாவணிகள் தொடர்பாக, ஒரு செலாவணி மதிப்பு வீழ்தல். இது ஏற்றுமதி விலையைக் குறைத்து, இறக்கு மதி விலையை அதிக மாக்குவது.

**diminishing balance method** – **குறைந்துசெல் இருப்பு முறை:** தேய்மானத்தில் பயன்படுவது.

**diminishing returns** – **குறைந்துசெல் திருப்பம்.**

**direct costs** – **நேரடி ஆக்கச் செலவுகள்:** நேர் அடக்கச் செல வுகள். ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படுவதில் கணக்கிடப் படும் கச்சாப் பொருள்கள், உழைப்பு ஆகியவை. ஒ. overhead costs.

**direct debit** – **நேரடிப்பற்று:** கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு அளிக்கும் நிலை யான ஆணை. இவர் காசோலைக் கணக்கிலிருந்து மூன்றாவது ஆளுக்கு இதில் ஒழுங்கான செலுத்தீடுகள் செல்லும். இதில் தோராயத் தொகை அனுப்பப்படும்.

**direct marketing** – நேரடி அங்காடி முறை: நுகர்வோரிடம் நேரடியாக விற்பனைத் தொடர்பு கொள்ளுதல்.

**director** – இயக்குநர்: ஒரு நிறுவனத்தின் அன்றாட மேலாண்மையைக் கவனிக்க அமர்த்தப் படுபவர். பொது நிறுவனத்திற்குக் குறைந்தது இரு இயக்குநர்களும் தனியார் நிறுமத்திற்குக் குறைந்தது ஓர் இயக்குநரும் இருக்க வேண்டும். இயக்குநர்கள் தொகுதி இயக்குநர் அவை எனப்படும். பொதுவாக, ஒரு நிறுவனப் பொறுப்பாளர் இயக்குநர் ஆவார்.

**director's report** – இயக்குநர் அறிக்கை: ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் அதன் பங்குதாரர்களுக்கு அளிக்கும் ஆண்டு அறிக்கை. சட்டப்படி அளிக்கப் பட வேண்டிய ஒன்று.

**disbursement** – கொடுப்பு: ஒரு வங்கியர் தன் வாடிக்கையாளருக்கு வழங்குந் தொகை. இவ் வாடிக்கையாளர் தன் தொழில் பணிக்காகப் பணம் பெறும் பொழுது, இதைத் திருப்பிக் கொடுப்பார்.

**discharge** – தீர்: தீர்த்தல். சட்டப்படி செய்து கொண்ட ஓர் உடன்பாட்டிலிருந்து ஒருவரை விடுவித்தல். எ—டு. கடன் தொகையைச் செலுத்திக் கடன் தீர்த்தல்.

**discharge of bill** – உண்டியல் தீர்வு: பணம் செலுத்தி இது தீர்க்கப்படும்.

**disclosure** – தெரிவிப்பு: 1) ஒப்பந்த விதிப்படி அதில் ஈடு பட்ட இருவரும், அது தொடர்பான எல்லா உண்மைகளையுங் கூறல். 2) நிறும விதிப்படி, தன் பங்குதாரர்களுக்கு, ஒரு நிறுமம் அதன் வணிகத் தொடர்பான எல்லாச் செய்திகளையும் கூறுதல்.

**discount** – வட்டம்: கழிவு. 1) முதிர்ச்சியாகு முன் மாற்றுண்டியலை வாங்கினால் பிடித்துக் கொள்ளப்படும் தொகை. 2) பட்டியலில் விலைக்குக் கீழாகப் பொருள்களின் விலைக் குறைப்பு. பணம் கொடுப்பவருக்குப் பண வட்டம். வணிகருக்கு வணிக வட்டம். மொத்தமாக வாங்குபவருக்கு மொத்த வட்டம்.

**discount broker** – வட்டத்தரகர்: கழிவு பெறுந் தரகர்.

**discount of bill** – உண்டியல் வட்டம்: பட்டியல் கழிவு.

**discount market** – வட்டந் தரும் சந்தை: கழிவு தரும் அங்காடி.

**discount rate** – வட்ட வீதம்: கழிவுத் தகவு. விழுக்காட்டில் தெரிவிக்கப்படுவது.

**discretionary order** – தன் விருப்ப ஆணை: தன் விருப்

பப்படி ஒரு சந்தைத் தரகர் குறிப்பிட்ட பிணையங்களையும் பொருள்களையும் வாங்கப் பெறுங்கட்டளை.

**dishonour** – **மறுத்தல்:** 1) ஏற்க விரும்பாமை. மாற்றுண்டியல் மறுக்கப்படலாம். இது ஏற்கா மறுப்பு. மாற்றுண்டியலுக்குப் பணம் கொடுக்காமலிருக்கலாம். இது செலுத்தாமறுப்பு. 2) வரும் காசோலைக்குப் பணங்கொடுக்க மறுத்தல். காசோலை கொடுப்பவர் கணக்கில் போதிய பணம் இல்லாமலிருக்கலாம். இதனால் ஏற்படுவது மறுப்பு.

**disinflation** – **பணச் சீராக்கம்:** பணச் செப்பம். வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்காமல், பணவீக்கத்தைத் தடுக்கும் ஒருவகைப் பணச் சுருக்கம். வட்டி வீத உயர்வு, விலைக் கட்டுப்பாடு முதலியவை இதற்குரிய நடவடிக்கைகள்.

**disinvestment** – **முதலீட்டுக் குறைப்பு:** பொருளியலின் முதலின இருப்பைக் குறைத்தல். இது பொருளாதாரத் தாழ்ச்சியைத் தொடர்வது. இப்பொழுது அழிவுதேய்வினால் உண்டாகும் முதலீட்டுச் சரக்குகளின் மதிப்பை ஈடு செய்யும் அளவுக்குப் போதிய முதலீடு இராது.

**distributable profits** – **பகிர்மான ஆதாயங்கள்:** ஒரு நிறுமத்தின் பகிர்ந்தளிக்கக் கூடிய ஆதாயங்கள். இவை பங்காதாயங்கள். இவை **பகிர்மான ஒதுக்கு நிதிகள்** எனவும் பெயர் பெறும்.

**distribution** – **பகிர்மானம்:** 1) பங்காதாயத் தொகை 2) முகவர்களுக்கிடையே நிதி வளங்களை ஒதுக்குதல் 3) நிகழ்தகவு மதிப்புகளைக் குறித்தல் 4) மொத்த வணிகர், சில்லரை வணிகர் மூலம் நுகர்வோருக்குச் சரக்குகளை அளித்தல் 5) சட்டப்படி ஒருவர் சொத்துகளைப் பிரித்தல்.

**distributor** – **பகிர்மானர்:** பகிர்ந்தளிப்பவர். உற்பத்தியாளர் சரக்குகளை நுகர்வோருக்கு அளிக்கும் ஓர் இடைப்பட்ட ஆள்.

**diversification** – **பன் முகமாக்கல்:** 1) பல நிறுமங்களைக் கொண்டு பல வகைப்பொருள்களை உருவாக்கல் 2) ஒரு முதலீட்டைப் பல நிறுமங்களில் பரவலாக அமையுமாறு செய்தல். பொருளாதாரப் பின்னடைவு ஏற்படும் பொழுது, கடும் இழப்புகள் இதனால் தவிர்க்கப்படும்.

**dividend** – **பங்கு ஈவு:** பங்காதாயம் 1) ஒரு நிறுமத்தின் சம்பாதிப்புகளின் ஒரு

பகுதியை, அதன் பங்குதாரர் களுக்கு அளித்தல். இது விழுக்காட்டில் குறிக்கப் படுவது. 10% பங்கு ஈவு 2) தன் ஆதாயங்களின் ஒரு பகுதியைக் கூட்டுறவுச் சங்கங்கள் தன் உறுப்பினர்க்கு அளித்தல். இது இடைக்காலப்பங்கு ஈவு, இறுதிப்பங்கு ஈவு என இரு வகை.

**dividend equilization reserve – பங்கு ஈவுச் சமன்காப்பு:** இலாபம் அனைத்தையும் வழங் காது, அதன் ஒரு பகுதியை எதிர்காலத்தில் இலாபம் வழங்குவதற்காக ஒதுக்கல்.

**dividend warrant – பங்குஈவு ஓலை:** ஒரு நிறுமம் பங்கு ஈவுகள் கொடுக்கும் பொழுது, அதன் பங்குதாரர்களுக்கு வழங்கும் காசோலை.

**divisible profit – பிரிஇலாபம்:** பிரித்தளிக்கக் கூடிய ஆதாயம்.

**dockets – குறிப்புச் சீட்டுகள்.**

**dock receipt – கப்பல்துறை வரவுச்சீட்டு:** கப்பல் துறைக் கிடங்கு சரக்குகளுக்கு வழங்கு வது. கப்பலில் ஏற்ற இருப் பவை.

**dock warrant – கப்பல் துறை ஆணைச்சீட்டு:** சரக்கு அனுப்பு பவர்களுக்கு உரிமை கருதி அளிக்கப்படுவது.

**documentary bill – ஆவண உண்டியல்:** கப்பல் சரக்கு ஆவணங்களுடன் இணைக்கப் பட்டிருப்பது. இந்த ஆவணங் களில் கப்பல் வரவுச்சீட்டு, காப் புறுதி முறி, கப்பல் ஏற்றுமதிச் சீட்டு, இடாப்பு ஆகியவை இருக் கும்.

**documentary credit – ஆவணப் பற்று:** இது ஒரு பற்று ஏற்பாடு. இதில் குறிப்பிட்ட தொகைக்கு அயல்நாட்டு வாங்குநர் பேரில் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கு களுக்காக வரையப்பட்ட மாற் றுண்டியலை ஒரு வங்கி வழங் கும்.

**documents – ஆவணங்கள்:** எ–டு. மாற்றுண்டியல், இடாப்பு.

**double entry system – இரட் டைப் பதிவு முறை:** கணக் கெழுதும் முறையில் முக்கிய மானது. இதில் பற்று, வரவு என்னும் இருதலைப்புகளில் பதிவுகள் எழுதப்பெறும் ஒ.single entry system.

**double entry system, benefits of – இரட்டைப் பதிவுமுறை யின் நன்மைகள்:** 1) வணிக ருக்குச் சரியான பதிவைத் தருவது

2) இருப்பாய்வு அறிக்கை தயார் செய்ய உதவுவது.

3) வாடிக்கையாளர் தர வேண்டிய தொகைகளைத் தெரிவிப்பது.

4) பொறுப்பு எவ்வளவு என் பதையுந் தெரிந்து கொள்ள லாம்.

5) வணிகக்கணக்கு, இலாப நட்டக் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு ஆகியவை தயார் செய்யப் பயன்படுவது.

**double entry system, principles of** – இரட்டைப் பதிவு முறையின் நெறிமுறைகள்:

I. பற்று

1) பெறுபவரைப் பற்றுவைக்க.

2) உள்வருவனவற்றைப் பற்று வைக்க.

3) செலவுகளையம் இழப்புகளையும் பற்று வைக்க.

II வரவு

1) தருபவரை வரவு வைக்க.

2) வெளிச்செல்பவற்றை வரவு வைக்க.

3) வருமானங்களையம் ஆதாயங்களையம் வரவு வைக்க.

**draft** – 1) வரைவோலை: 2) வரைவு: i) குறிப்பிட்ட தொகையைச் செலுத்துமாறு எழுதப்படும் ஆணை எ–டு. மாற்றுண்டியல் ii) இறுதி நிலை அடைவதற்கு முன் ஓர் ஆவணத்தின் தொடக்கமொழிவு.

**drawee** – வரையப்படுவர்: 1) மாற்றுண்டியல் எழுதப்படுபவர் 2) காசோலை அல்லது வரைவோலை எழுதப்படுபவர் சுருக்கமாக, இவற்றைப் பெறுபவர்.

**drawer** – வரைபவர்: 1) மாற்றுண்டியலை எழுதிக் கையெழுத்திட்டு வசூலுக்கு அனுப்புவர் 2) காசோலையில் கையெழுத்திட்டுப் பெறுநருக்கு அனுப்புபவர். இதனால் எழுதிய தொகைக்குப் பெறுநர் பணம் பெறலாம்.

**drawings** – எடுப்புகள்: பணம் அல்லது சரக்கு தொழில் நிறுவனத்திலிருந்து எடுக்கப் படுதல்.

**durables** – நீள்பயன் பொருகள்: பா. consumer goods..

**duty** – வரி: சில சரக்குகள் அல்லது பணிகளின் மீது அரசு விதிக்கும் வரி இனம் எ–டு இறப்பு வரி, சுங்கவரி.

# E

**earning capacity method** – ஈட்டுதிறன் முறை: பங்கு மதிப்பு முறைகளுள் ஒன்று. இலாபம் ஈட்டும் திறன் அடிப்படையில் அமைவது. ஏனைய இரண்டு முறைகளாவன நிகரச்சொத்து முறை, வருவாய் முறை.

**earnings per share** – ஒரு பங்குச் சம்பாதிப்பு: ஓராண்டில் ஒரு நிறுமத்தின் சம்பாதிப்புகளை அதன் பொதுப்பங்குகளால் வகுத்து வரும் தொகை அல்லது ஈவு.

**easy money** – எளிய பணம்: பா. cheap money.

**economic cost** – பொருளாதார ஆக்கச் செலவு: ஒன்றைச் செய்யத் தேவைப்படும் முழு ஒப்படைப்பு. இது வாய்ப்பு ஆக்கச் செலவு; கணக்கு ஆக்கச் செலவைவிடப் பெரியது.

**economics** – பொருளியல்: ஒரு சமூக அறிவியல். பண்ட மாற்று, பகிர்மானம், நுகர்வு, உற்பத்தி முதலிய துறைகளின் நடத்தையை ஆராய்வது. இதன் முதன்மையான கருத்துப்புலங்கள் இரண்டு

1) **தொன்மைக்கருத்துப்புலம்:** இதனை நிறுவியவர் **ஆதம் சிமித்.** பொருளாதார மதிப்புக் கருத்தையும் செல்வம் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே (வகுப்புகள்) பகிர்ந்துள்ளதையும் இவர் வற்புறுத்தினார். மார்க்ஸ் கருத்துப் புலம் இதன் கிளைப்புகளில் ஒன்றே.

2) **புதுத் தொன்மைக் கருத்துப் புலம்:** இதை நிறுவியவர்கள் **ஜெவான்ஸ்** (1835–82) **வார்லாஸ்** (1834–1910) ஆகிய இருவருமாவர். இவர்கள் இறுதி நிலையாளர்கள் எனப்படுவர். மேற்கத்திய பொருளியல் கருத்தின் ஆணிவேர் இப்பு லமாகும். போட்டியிடும் இரு முனைகளுக்கிடையே அரிதான வளங்கள் ஒதுக்கப்படும் பொழுது, அவற்றின் பங்கை இது வற்புறுத்துவது.

புதுத்தொன்மைப் பொருளியல் மெலும் இருவகைப்படும்;

1) **சிறு பொருளியல்:** தனிப் பொருளாதார அலகுகளுக்கிடையே (நுகர்வோர், நிறுவனம் முதலியன) தொடர்பை இது ஆராய்வது.

2) **பெரும் பொருளியல்:** பணம், பொருளாதாரத் திரட்சிகள், முழு வேலை வாய்ப்பு, அரசு ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பை அது பகுத்துப் பார்ப்பது. இவ்விரு துறைகளும் வற்புறுத்துபவை; **தனியாள் அல்லது குடும்பமே பகுப்பின் அடிப்படை அலகு; வகுப்புகள் அல்ல.**

**edition** – பதிப்பு: 1) ஒருநூலின் பதிப்பு. 2) பதிப்பின் எண்ணிக்கை.

**editorial**– தலையங்கம்: ஒரு சிக்கல் குறித்த உண்மைகளைப் பொது மக்களுக்கும் அரசுக்கும் தெரிவிக்க நடு நிலையில் ஒரு செய்தித்தாளில் எழுதப் படுவது.

**editor** – பதிப்பாசிரியர் 1) ஒரு நூலைப் பதிப்பப்பவர் 2) ஒரு பருவ இதழின் ஆசிரியர்.

**efficiency** – பயனுறுதிறன்: இது இரு வகைப்படும்: 1) தொழில் நுட்பத்திறன்: சிறும உட்பாடுகளுடன் ஏற்கத்தக்க தன்மையுள்ள பெரும வெளிப்பாட்டை

உண்டாக்கும் உற்பத்தியாள ரின் திறமையின் அளவு. இது நிறுமங்களுத்தகுந்தவாறு வேறு படும்.

2) பொருளியல் திறன்: மிகக் குறைந்த அடக்கத்தில் ஒரு விளைபொருளை உற்பத்தி செய்து, நுகர்வோருக்கு வழங் கும் ஒரு நிறுவனத்திறமையின் அளவு.

**employee** – **வேலையாள்:** ஒரு நிறுமத்தில் வேலைசெய்பவர், பணியாள்.

**employer** – **வேலையளிப்பவர்:** முதலாளி.

**employment** – **வேலை வாய்ப்பு:** வேலை உடைமை.

**employment exchange** – **வேலை வாய்ப்பு நிலையம்:** வேலை வாய்ப்புகளை அறிவிக் கும் அரசு நிறுவனம்.

**encumbrance** – **வில்லங்கம்:** பொறுப்பு அல்லது கடன் எ–டு. வீடு அடமானம்.

**endorsement** – **மேலொப்பம்:** 1) மாற்றுண்டியல் அல்லது காசோலையின் பின்புறம் இடப் படும் ஒப்பம். அது யாருக்கு ஒப்பம் செய்யப்படுகிறதோ அவர் அதில் கையெழுத்திட்டுப் பெறலாம். இது தனிமேலொப் பம், வரம்புடை மேலொப்பம் என இருவகை.

2) ஓர் ஆவணத்தைச் சட்டப்படி மதிப்புள்ள தாக்கத் தேவைப் படும் கையெழுத்து. மேலெ ழுத்து, புறக்குறிப்பு என்றுங் கூறலாம்.

**endowment** – **அறக்கட்டளை;** அறநிறுவனம்.

**endorsor** – **மேலெழுதுநர்.**

**enodorsee** – **மேலெழுத்துப் பெறுநர்.**

**enterprise** – **தொழில் முயற்சி;** தொழில்வினை.

**entrepreneur** – **தொழில் முனைவோர்:** தன் ஆதாயத் திற்காக ஒரு தனியாள் ஒரு பொருள் அல்லது பணியைச் சந்தைக்கு வழங்கு முயற்சியை மேற்கொள்பவர். இம் முயற்சி சமூகச் செல்வத்தை உயர்த்து வது. ஆகவே, இவர்களை ஆதரிப்பது அரசின் கடமை.

**entries** – **பதிவுகள்:** கணக்கேட் டில் பதிவு செய்யப்படுபவை. இவற்றின் வகைகள்;

1) தொடக்கப்பதிவுகள்
2) மாற்றுகைப்பதிவுகள்
3) பிழை நீக்கப் பதிவுகள்
4) இறுதிப் பதிவுகள் 5) சரிக் கட்டுப் பதிவுகள்.

**equal pay** – **சம ஊதியம்:** ஒரே வேலையில் இருக்கும் ஆண் பெண் ஆகிய இருவருக்கும் ஒரே ஊதியம் கொடுக்க வேண் டும் என்னும் நெறி முறை. தற் காலத்தில் இது மேலோங்கி யுள்ளது.

**equity, equity share** – **நேர் மைப்பங்கு:** பொதுப்பங்கு. ஒரு நிறுவனம் வழங்குவது. குறைந்த பங்கு ஈவு உள்ளது. பணவீக்கக் காலங்களில் பெரிதும் விரும்பப்படுவது. முதல் வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பது. பங்குகளில் ஒரு வகை. பா. shares.

**equity capital** – **நேர்மைப்பங்கு முதல்;** ஒரு நிறுமத்தின் பங்கு முதலின் பகுதி, பொதுப்பங்குதாரர்களில் கொள்ளப்பட்டிருப்பது.

**error in casting** – **தவறான கூட்டுப்புள்ளி:** துணை ஏடுகளைக் கூட்டும் பொழுது ஏற்படுவது.

**error of commission** – **செய் பிழை:** சரியான கணக்கில் சரியான தொகையைத் தவறான பகுதியில் எழுதுதல்.

**errors of complete omission** – **முழு விடு பிழைகள்:** முதல் குறிப்பேட்டில் ஒரு நடவடிக்கை எழுதப்படுதல்.

**error of partial omission** – **பகுதி விடுவிழை:** துணை ஏட்டிலிருந்து பெரேட்டில் எடுத்தெழுதும் பொழுது, நடவடிக்கையின் ஒரு தன்மையை உரிய கணக்கில் எடுத்தெழுதாமல் விட்டுவிடுதல்.

**error of principle** – **விதிப் பிழை:** ஒரு தலைப்பில் எழுத வேண்டியதை வெறொரு தலைப்பில் பதிதல், கட்டிடப் பழுதுச் செலவு ரூ 100ஐ பழுத பார்ப்புக்கணக்கில் பற்றுவைப்பதற்கு மாறாகக்கட்டிடக் கணக்கில் பற்று வைத்தல்.

**estate** – 1) **சொத்து:** உடைமை பொறுப்பு (கடன்) நீங்கிய ஒருவரின் சொத்து மதிப்பு 2) **பண்ணை:** ஒரு பெரிய இல்லத்தோடு சேர்ந்த திட்டமான நிலம்.

**estate duty** – **சொத்துவரி:** ஒருவர் இறக்கும் பொழுது அவர்சொத்தின் மீது விதிக்கப் படும் வரி.

**exceptional contracts** – **விதி விலக்கான ஒப்பந்தங்கள்:** வாணிப நற்பெயரின் மதிப்பை ஏற்படுத்துபவை.

**exceptional items** – **விதிவிலக்கான இனங்கள்:** அடக்கங்கள் அல்லது வருமானம். இவை நிறுமத்தின் இலாப நட்டக் கணக்கைப் பாதிப்பவை. வாணிப இலாபம் அல்லது நட்டத்தை வருவிக்கும் பொழுது, இவை வெளிப்படுத்தப்பட வேண்டும். ஒ. extra-ordinary items.

**exchange** – **பரிமாற்று:** பரிவர்த்தனை. இரு ஆட்கள் அல்லது குழுக்களுக்கிடையே மதிப்புகள் வாணிபம் செய்யப் படுவதற்குரிய பொருளாதார முறை. இயற்பொருள்கள்,

பணிகள், செய்தி, உறுதி மொழிகள் முதலியவை இவற்றில் அடங்கும். மாற்று நடைபெறும் இடம் அங்காடி அல்லது சந்தை. இது பொருளாதாரப் பகுப்பின் குவியமாகும்.

**exchange control** – செலாவணிக் கட்டுப்பாடு; அயல் நாட்டுச் செலாவணி, விற்பனை, கொள்முதல் ஆகியவற்றில் விதிக்கப்படும் தடைகள்.

**exchange rate** – செலாவணி வீதம் பா. rate of exchange.

**excise duty** – சுங்கவரி: ஆல்ககால், புகையிலை முதலிய பொருள்களுக்கு விதிக்கப்படும் வரி.

**executive director** – நிறைவேற்று இயக்குநர்: ஒரு நிறுமத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்.

**exdividend** – பங்கு ஈவு இன்றி.

**exgratia** – அருட்கொடை: கருணைத்தொகை. அன்பு, கட்டுப்பாடு முதலியவற்றின் அடிப்படையில் வழங்கப்படும் தொகை. இதில் சட்டக் கடமையை எதிர்பார்க்க வேண்டிய தேவை இல்லை.

**exinterest** – வட்டி இன்றி.

**expected profit** – எதிர் பார்க்கும் இலாபம்.

**expenditure** – செலவு: பொருள்களுக்காகவும் பணிகளுக்காகவும் செலவழிக்கப்படும் தொகை.

**expenses** – செலவுகள்: பற்றுப் பகுதியில் வருபவை. செலவிடப்படுபவை.

**expenses, financial** – நிதியச் செலவுகள். கடன் மீது வட்டி, மேல்வரைப்பற்று மீது வட்டி முதலியவை.

**expenses, incidental** – தற்செயல் செலவுகள்: இடைநிகழ் செலவுகள்.

**expenses, maintenance** – பேணும் செலவுகள்: பழுது பார்க்கும் புதுப்பிக்கும் செலவுகள், தேய்மானம் முதலியவை.

**expenses, management** – மேலாண்மைச் செலவுகள்: அலுவலகச் சம்பளம், அலுவலக வாடகை, எழுதுபொருள் வாங்கல், அச்சுக்கூலி முதலியவை.

**expenses, outstanding** – கொடுபடவேண்டிய செலவுகள்.

**expenses, prepaid** – முன்கூட்டியே செலுத்தும் செலவுகள்.

**expenses, selling** – விற்பனைச் செலவுகள்: விளம்பரம், பயணச்செலவுகள் முதலியவை.

**expiry duty** – முடியும் நாள்: கடைசிநாள். ஓர் ஒப்பந்தம் முடியும் காலம்.

**export incentive** – ஏற்றுமதி ஊக்குவிப்பு: உதவித்தொகை, மானியம், வரிச்சலுகை முதலியவை.

**export licence** – ஏற்றுமதி உரிமம்: ஏற்றுமதி செய்யும் உரிமம்.

**exports** – ஏற்றுமதிகள்: அந்நியச் செலாவணி ஈட்ட ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகள். அயல்நாடுகளுக்கு அனுப்பப்படுபவை.

**external reconstruction** – புறச் சீரமைப்பு: ஒருநிறுமத்தில் புறத்தே செய்யப்படும் மாற்றம். பா.internal reconstruction.

**extra – ordinary meeting** – சிறப்புக்கூட்டம்: ஒருநிறுமத்தின் ஆண்டுக்கூட்டம் அல்லாத ஏனைய கூட்டம்.

**extra-ordinary items** – சிறப்பினங்கள்: அடக்கங்கள் அல்லது வருமானம். இவை ஒரு நிறுமத்தின் இலாப நட்டக் கணக்கைப் பாதிப்பவை. இவை நிறுமத்தின் இயல்பான செயல்களிலிருந்து வருபவை அல்ல.

**extra-ordinary resolution** – சிறப்புத்தீர்மானம்: ஒரு நிறுமப் பொதுக்கூட்டத்தில் உரிய முறையில் நிறைவேற்றப்படுவது.

# F

**face value** – முகமதிப்பு: 1) ஒரு பிணையத்தின் முகத்தில் அச்சிடப்பட்டுள்ள பெயரளவு மதிப்பு. இது சமமதிப்பாகும். அதாவது, அங்காடி மதிப்புக்குச் சமமானது. 2) வங்கித்தாள் பணம் அல்லது நாணயத்தில் அச்சிடப்பட்டுள்ள மதிப்பு.

**facsimile transmission** – உருநகல் செலுத்துகை: பா. Fax.

**fact book** – மெய்யேடு: ஒரு விளைபொருள் பற்றிய வரலாற்றுச் செய்தி கொண்ட கோப்பு. இதில் விற்பனைத் தகவல்கள், பகிர்வு, போட்டி, வாடிக்கையாளர்கள் மேற்கொண்ட அங்காடி ஆராய்ச்சி முதலிய தகவல்கள் இருக்கும்.

**fair value** – நேர்மையான மதிப்பு: பங்கின் நேர்மையான மதிப்பு, நிகரச் சொத்தின் மதிப்பு, வருவாய் உள் மதிப்பு ஆகிய இரண்டின் சராசரி பங்கு நேர்மை மதிப்பு = பங்கின் உள் மதிப்பு + வருவாய் மதிப்பு/2.

**fast-moving consumer goods** – விரைந்து விற்கும் நுகர் பொருள்கள்; சில்லறைக்கடைகளில் விரைவாக விற்பனைக்கு அளிக்கப்படும்

பொருள்கள். எ—டு. மளிகை, இசைப் பேழைகள்.

**fate** – விதி: நிலை, ஒரு காசோலை அல்லது உண்டியல் பணம் கொடுகப்பட்டுவிட்டதா அல்லது மறுக்கப்பட்டு விட்டதா என்பது. இது பற்றி ஒரு வங்கி மற்றொரு வங்கியை வினவும்.

**favourable balance of trade** – சாந்த வாணிப இருப்பு நிலை.

**Fax** – உருநகலி: இதன்மூலம் ஆவணங்கள், படங்கள், திட்டங்கள் ஆகியவற்றின் படிகளை வேண்டுமிடங்களுக்கு உடன் அனுப்ப இயலும். ஒரு தொலைபேசி அழைப்புக் காலத்திற்கு இணையான கட்டணத்தைக் கொண்டது. எ—டு. 30—60 வினாடிகள் 1X4 பக்க அளவு. ஒ. telex, teleprinter.

**fictitious asset** – பெயரளவுச் சொத்து: இருப்புத்தாளில் காட்டப்படும் சொத்து. எ—டு. நற்பெயர்.

**final accounts** – இறுதிக் கணக்குள்: நிதியாண்டின் முடிவில் தயாரிக்கப்படும் கணக்குகள். 6 மாதங்களுக்குப்பின் தயாரிக்கப்படுபவை இடைக் காலக்கணக்குகள். இருப்பாய்வைக் கொண்டு தயாரிக்கப் படுபவை. இவற்றின் இருபகுதிகள்: 1) வணிக இலாபநட்டக் கணக்கு 2) இருப்பு நிலைக் குறிப்பு.

**final invoice** – இறுதி இடாப்பு: முன் இடாப்புக்கு மாற்று. சரக்குகளின் விவரங்கள் தெரிவதற்கு முன் அனுப்பப்படுவது முன் இடாப்பு. முழு விவரங்களையும் கொண்டது இறுதி இடாப்பு. இடாப்பு—பட்டியல்.

**finance** – நிதி: 1) பணத்தைக் கையாளுதலும் மேலாண்மை செய்தலும் 2) ஒரு புதிய தொழிலுக்குத் தேவைப்படும் முதல் 3) கடன் பணம். ஒரு நிதியத்தால் வழங்கப்படுவது.

**financial accountant** : நிதிக் கணக்கர்: ஒரு நிறுவனத்தின் நிதிகளைக் கையாண்டு மேலாண்மை செய்பவர். அதன் ஆண்டுக் கணக்குகளையும் தயாரிப்பவர். ஒ. cost accountant, management accountant.

**financial adviser** – நிதி அறிவுரையாளர்: முதலீடு செய்பவருக்கு நிதி அறிவுரை வழங்குபவர்.

**financial investment** – நிதி முதலீடு பா.investment.

**financial year** – நிதியாண்டு. ஒரு நிறுவனத்தின் கணக்குகள் எழுதப்படும் காலம். இவ்வாண்டுக்கு வரவு செலவுகள் செய்யப்படும். பொதுவாக, இது ஏப்ரல் முதல் மார்ச் வரை.

**financier** – நிதியர்: நிதியுள்ளவர். ஒரு தொழில் முயற்சிக்குப் பணம் அளிப்பவர்.

**fire insurance** – **தீக்காப்புறுதி:** தீயினால் சொத்துகளுக்கு ஏற்படும் இழப்புகளுக்காகச் செய்யப்படுவது.

**firm** – **கூட்டுமம்:** கூட்டு வாணிக நிலையம்: 1) தொழில் நிறுவனம் 2) தொழில் கூட்டாண்மை.

**firm underwriting** – **நிலை ஒப்புறுதி:** ஒப்புறுதியாளர் அளிப்பது.

**fiscal policy** – **வருவாய்க் கொள்கை:** பெரும் பொருளியல் நிலைமைகளை ஊக்குவிக்க அரசு செலவு செய்தல். பொருளாதாரப் பின்னடைவுகளின் பொழுது, வெலை வாய்ப்பு உண்டாக்கப் பொதுத் துறை வேலைகளை ஊக்குவிக்க வேண்டும் என்பது கெயின்ஸ் என்பார் கருத்து. இதனால் பணக்கொள்கையை விட வருவாய்க் கொள்கை அதிகப் பயனுள்ளதாக இருக்கும்.

**fixed asset** – **நிலைச்சொத்து:** கட்டிடம், நிலம் முதலியவை. இது முதலினம் சார்ந்தது.

**fixed capital** – **நிலை முதல்:** ஒரு நிறுவனத்தின் நிலைச் சொத்துகளில் அடங்கி இருக்கும் முதல் அளவு. ஒ. circulating capital.

**fixed charge** – **நிலைக்கடன்:** இதில் கடன் ஈந்தோர் கடனாளியின் குறிப்பிட்ட சொத்தை விற்றுத் தன் கடனைப் பெறுவதற்குரிய உரிமையுண்டு. கடனாளி கடனைச் செலுத்தத் தவறினால், இந்நிலைமை ஏற்படும்.

**fixed costs** – **நிலையாக்கச் செலவுகள்:** மேற்செலவுகளில் ஒருவகை பா. overhead costs.

**fixed debentrue** – **நிலைக்கடன் ஆவணம்** பிணையமாக நிலையான பொறுப்புள்ள பத்திரம், பா. floating debenture.

**fixed exchange rate** – **நிலைச் செலாவணி வீதம்:** ஒரு செலாவணிக்கும் மற்றொரு செலாவணிக்குமுள்ள நிலையான வீதம். இதை அந்த அந்த அரசு உறுதிசெய்வது. ஒ. floating exchange rate

**fixed interest security** – **நிலை வட்டிப் பிணையம்:** ஓராண்டுக்குக் குறிப்பிட்ட தடவைகள் நிலையான வட்டி வழங்கும் ஈடு. எ-டு. பத்திரங்கள், முன்னுரிமைப் பங்குகள்.

**fixtures and fittings** – **தொழில் நிலைப்பிடம்:** ஒரு நிறுவனம் தன் தொழிலை நடத்த நிலையான அமைப்பு கொண்ட இடம். இது எந்திரம், கருவி நிலையம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

**flat money** – **ஆணைப்பணம்:** செலாவணியாகக் கூடியது என்று அரசு உறுதியளித்த

பணம். உலகின் பெரும் பாலான தாள் பணம் எல்லாம் ஆணைப்பணமே.

**floating assets** – **மாறு சொத்துகள்:** உருமாறும் சொத்துகள்.

**floating charge** – **மாறுகடன்:** ஒரு நிறுமத்தின் சொத்துகளின் மேலுள்ள பொறுப்பு. சட்டப்படி யான பொறுப்பன்று.

**floating debenture** – **மாறுகடன் ஆவணம்:** ஈடாக மாறும் பொறுப்பைக் கொண்டது. ஒ. fixed debenture.

**floating debt** – **மாறுகடன்:** குறு கிய காலக் கருவூல உண்டியல் களைக் கொண்ட தேசியக் கட னின் ஒரு பகுதி.

**floating exchange rate** – **மாறு செலாவணிவீதம்:** ஒரு செலா வணிக்கும் மற்றொரு செலா வணிக்குமிடையே மாறும் வீதம். அங்காடி நிலவரங்களுக் கேற்ப இது அமையும். ஒ. fixed exchange rate.

**floating policy** – **மாறுமுறிமம்:** காப்புறுதி செய்யப்பட்ட ஒரே ஒரு தொகை. அது பல இனங் களை உள்ளடக்கியது. அதி லிருந்து முறியாளர் தனக்கு வேண்டிய இனங்களைச் சேர்க் கலாம்; வேண்டாதவற்றை நீக்க லாம்.

**floating rate interest** – **மாறு வீதவட்டி:** சில பத்திரங்கள், வைப்பு நிதிச் சான்றிதழ்கள் முதலியவற்றிற்குச் சந்தைக் கேற்ப வட்டிவீதம் மாறுதல்.

**floating warranty** – **மாறு உறுதி யளிப்பு:** இது ஒரு கையிலு ருந்து மற்றொரு கைக்கு மாறு தல்.

**flotation** – **விற்பனை தொடங் கல்:** ஒரு நிறுவன இருப்பின் தொடக்க விற்பனை பொது மக்களுக்காகத் தொடங்குதல். ஒப்பந்தப்புள்ளி மூலம் நடை பெறுதல். இது நடைபெற்ற வுடன் பங்குச் சந்தையில் பங்குகள் விற்கப்படும். ஒரு தொழிலுக்கு வேண்டிய புதிய முதலை உயர்த்த நடை பெறுவது.

**forced saving** – **கட்டாயச் சேமிப்பு:** நுகர்பொருள் செல வைக் குறைக்கவும் சேமிப்பை உயர்த்தவும் அரசு எடுக்கும் பொருளாதார நடவடிக்கை. வரி உயர்வு, வட்டி வீத உயர்வு, விலை உயர்வு ஆகியவை மூலம் இது நடைபெறும்.

**forefeited share** – **இழப்புப் பங்கு:** ஒரு நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் ஒரு பகுதியாக செலுத்துவது. பிற்பகுதியைச் செலுத்தாததால், செலுத்திய பகுதியை இழப்பார்.

**forefeiture** – **பறிமுதல்:** பங்குப் பறிமுதல். இயக்குநர் அவைத் தீர்மானப்படி இச்செயல் நடை பெறும்.

**foreign bill** – அயல் நாட்டு உண்டியல்: அயல் நாட்டிலிருந்து வர வேண்டியது பா: inland bill.

**foreign exhange** – அயல் நாட்டுச் செலாவணி: அயல் நாட்டுப் பணத்தாள்கள். அயல் நாட்டுச் செலாவணிச் சந்தையில் வாங்கப்படுவது; விற்கப்படுவது. அயல்நாடுகளிலிருந்து சரக்குகள் வாங்க இவை தேவை.

**foreign exchange broker** – அயல் நாட்டுச் செலாவணித் தரகர்: அயல் நாட்டுச் செலாவணிச் சந்தையில் அயல் நாட்டுப் பணத்தாள்களுக்கு வங்கிகள் மூலம் ஒழுங்குசெய்து கொடுப்பவர்.

**foreign exchange dealer** – அயல்நாட்டுச் செலாவணி ஈடுநர்: அயல்நாட்டுச் செலாவணியை வாங்கும் விற்கும் வணிகர்.

**foreign exchange market** – அயல் நாட்டுச் செலவாணிச் சந்தை: அனைத்துலக அங்காடி. இதில் அயல் நாட்டுப் பணத்தாள்கள் வணிகம் செய்யப்படும். இது வணிக வங்கிகள் மூலம் நடைபெறுவது.

**foreign investment** – அயல் நாட்டுமுதலீடு: நம் நாட்டில் அயல் நாட்டவர் தம் முதலீடு கொண்டு வாணிபம் நடத்துதல் இது பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

**foreign sector** – அயல் நாட்டுத் துறை: புற வணிகத் தோடும் முதல் புழக்கத்தோடும் தொடர்புடைய ஒரு நாட்டின் பொருளாதாரப் பகுதி. புற வணிகம் என்பது இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் முதல் புழக்கம் என்பது உள் புழக்கத்தையும் வெளிப்புழக்கத்தையும் கொண்டவை.

**forgery** – கள்ளத்தனம் செய்தல்: மோசடி செய்தல். ஆவணங்களில் நடைபெறுவது. சட்டப்படிகுற்றமானது. கள்ளக்கையெழுத்திடுதலும் இதில் அடங்கும்.

**forward date** – பின்நாளிடல்: ஓர் ஆவணம் எழுதப்பட்ட நாளுக்குப் பின் தேதியிடல். அந் நாளிலிருந்தே அது நடைமுறைக்குவரும்.

**forward delivery** – பின் ஒப்படைப்பு: பிந்திய நாளில் கொடுபட வேண்டும் என ஒப்பந்தம் செய்து பொருள்களை வாங்கல். இது கப்பல் சரக்குகளில் நடைபெறுவது.

**forward exchange rate** – பின் செலாவணி ஒப்பந்தம்: எதிர் காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் அயற்செலாவணியை வாங்கச் செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

**forwarding agent** – அனுப்பும் முகவர்.

**forwarding charges** – அனுப்பும் செலவுகள்: ஏற்றுகூலி, இறக்குகூலி முதலியவை.

**fraud** – மோசடி: பா. forgery.

**free capital** – தடையிலா முதல்: பணமாகவுள்ள முதல் பா. liquid assets.

**free competition** – தடையிலாப் போட்டி: தடையிலாப்பொருளாதாரம். இதில் பொதுத் துறை குறைந்தும் தனியார் துறை மேலோங்கியும் இருக்கும்.

**free market** – தடையிலா அங்காடி: வழங்கலுக்கேற்ற விலைகள் ஏறி இறங்கும் சந்தை. இதில் அரசு தலையீடு இல்லை.

**free trade** – தடையிலா வணிகம்: தேசிய எல்லைகளில் சரக்குகளும் பணிகளும் சட்டம், வரி முதலியவற்றின் குறுக்கிடு இல்லாமல் நடைபெறுதல்.

**freight** – கலக் கட்டணம்: கப்பல் மூலமும் வானூர்திமூலமும் சரக்குகளை அனுப்ப ஆகுஞ் செலவு. இது கப்பல் கட்டணம். வானக்கலக் கட்டணம் என இருவகை. எதிர் காலத்தில் வானவெளிக் கட்டணமும் சேரும்.

**freight, inward** – உள் கலக் கட்டணம்.

**freight, forward** – பின் கலக் கட்டணம்: அனுப்பும் கப்பல் சரக்குகளுக்கு ஆகும் கட்டணத்தை வாங்குபவர் சேருமிடத்தில் செலுத்துதல்.

**freight note** – கலக்கட்டணக் குறிப்பு: சரக்குகளைக் கப்பல் மூலம் அனுப்புவதற்குரிய கட்டணத்தைக் குறிப்பிடும் இடாப்பு.

**full cost pricing** – முழு அடக்கச் செலவு: விலையாக்கல். முழு அடக்கச் செலவையும் சரக்குகளின் மீது ஏற்றுதல். இதில் அடக்கச் செலவு என்பது நிலை அடக்கச் செலவுகளையும் நேரடி அடக்கச் செலவுகளையும் கொண்டிருக்கும். இதுவே ஆதாயம் தருவது.

**full employment** – முழு வேலை வாய்ப்பு: நிறை வேலை உடைமை. ஒரு நாட்டின் எல்லாப் பொருளாதார வளங்களும் முழு அளவுக்குப் பயன்படுதல். பொருளியல் கொள்கையின் இறுதி இலக்கு இதுவே. பா. over-full employment.

**functions of money** – பணத்தின் பணிகள்: பொருளியலில் பணத்தின் வேலைகளாவன: 1) செலாவணி ஊடகம் 2) கணக்கலகு 3) மதிப்புச் சேமிப்பு.

**fund** – நிதி: குறிப்பிட்ட நோக்கத்திற்காக வைக்கப்படும் முதலீடு அல்லது பண ஒதுக்கீடு எ–டு. ஓய்வு ஊதிய மூலமளித்தல், அலகுகளாக விற்றல்.

வ.5.

**funded debit** – நிதிக்கடன்: தேசி யக் கடனின் ஒரு பகுதியைக் குறிப்பிட்ட நாளில் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்னும் கட்டாயம் அரசுக்கில்லை. இக் கடன் தொகுப்பு ஆண்டுத் தொகைகளாகவே இருக்கும்.

**furniture** – அறைகலன்: அறை யில் பயன்படுவது. எ-டு. மேசை, நாற்காலி.

**futures contract** – எதிர்கால ஒப்பந்தம்: குறித்த விலையில் குறித்த நாளில் எதிர்காலத்தில் குறிப்பிட்ட பொருளைக் குறிப் பிட்ட அளவில் வாங்க அல்லது விற்க ஒப்பந்தம் செய்து கொள் ளுதல்.

**future value** – எதிர்கால மதிப்பு: கூட்டு வட்டிக்கு முதலீடு செய் யப்பட்ட ஒரு தொகையின் மதிப்பு வருங்காலத்தில் இருக் கும் அளவு.

# G

**general offer** – பொது விலைக் குறிப்பீடு: பொது மக்களுக்குச் செய்யப்படும் விலைக் குறிப் பீடு. பொதுவாக, நடுக்கடை யில் சாளரத்தில் காட்சிக்கு விலையுடன் வைக்கப்படுள்ள பொருள்.

**general ledger adjustment account**: பொதுப் பேரேட்டுச் சரிக்கட்டுக் கணக்கு: பொது பேரேட்டில் செய்யப்படுவது.

**general partner** – பொதுக் கூட் டாளி: கூட்டாண்மையில் ஒரு வர்.

**general profit and loss account** – பொது இலாப நட் டக்கணக்கு.

**general reserve** – பொதுக் காப்பு: தொழில் பெருக்கத் திற்காக இலாபத்தின் ஒரு பகுதி யை ஒதுக்கிவைத்தல்.

**gift** – கொடை: ஒன்றையுங் கருதாமல் ஒரு சொத்து ஒரு வரிடமிருந்து மற்றொரு வருக்குச் செல்லுதல். இது அதிகமானால் இதற்கு வரி யுண்டு.

**globalization** – உலக அளவாக் கல்: நிதி அங்காடியில் முத லீட்டை அனைத்துலக அளவில் கொண்டு செல்லும் முறை. கட்டுப்பாடுநீங்கல், தொழில் நுட்ப முன்னேற்றங்க காரண மாக இது நடைபெறுவது.

**global product** – உலக அளவுப் பொருள்: ஒரே வாணிபப் பேரில் உலகம் முழுதும் விற் பனை செய்யப்படும் பொருள் எ-டு. கோக்கோகோலா.

**going concern concept** – இயங் கும் வாணிபக் கருத்து: கணக் குப் பதிவுப் பயிற்சியின் நெறி முறை. சூழல்கள் வேறு வகை யில் அமையாத வரை, ஒரு தொழில் இயங்கிக் கொண்டே இருக்கும் என்னும் உய்மானம்.

**good** – சரக்கு: பண்டம் அல்லது பணி. மனிதத் தேவையை நிறைவு செய்வது. இது பொருளாதாரச் சரக்கு, தடையிலாச் சரக்கு என இருவகை.

**good will** – நற்பெயர்: புலனாகாச் சொத்துகளின் மதிப்பையும் விஞ்சுவது. ஒரு தொழில் அதிக இலாபம் ஈட்டுவதே இவ் விஞ்சு மதிப்புக்குக் காரணம். இந் நற்பெயர் விற்கக் கூடிய சொத்து. ஒரு தொழில் விற்கப் படும் பொழுது இதற்குத் தனி விலை உண்டு. பா amortization.

**government bonds** – அரசு ஆவணங்கள்: அரசுப்பத்திரங்கள்.

**grey market** – சாம்பல் நிறச் சந்தை: சரக்குகள் வழங்குகை குறைவாகவுள்ள அங்காடி. ஒ. black market.

**gross income** – மொத்த வருமானம்: ஒரு சம்பாதிப்பில் செலவு நீக்குவதற்கு முன்னுள்ளது. இது ஒரு தனியாள் அல்லது நிறுவனத்திற்குரியது.

**gross interest** – மொத்தவட்டி: வரி கழிப்பதற்கு முன், குறிப்பிட்ட கடன் அல்லது வைப்பு நிதிக்குள்ள வட்டியளவு.

**gross investment** – மொத்த முதலீடு. பா. investment.

**gross margin** – மொத்த மிச்சம்: விற்பனைக்கு அளிக்கப்படும் சரக்குகளின் சில்லறை விலைக்கும் அவற்றின் மொத்த விலைக்குமுள்ள வேறுபாடு. சில்லைர விலையின் விழுக்காடாகத் தெரிவிக்கப்படுவது.

**gross national product, GNP** – மொத்தத் தேசியப் பொருள்: மொத்த மனையகப் பொருள். இத்துடன் வட்டிகள், ஆதாயங்கள், பங்கு ஈவுகள் ஆகியவையும் சேர்க்கப்படும். மொதேபொ.

**gross proft** – மொத்த இலாபம்: மொத்த ஆதாயம். ஒரு நிறுமத்தின் மொத்த விற்பனை வருவாய். விற்கப்பட்ட சரக்குகளின் அடக்க விலையை இதில் கழிக்க வேண்டும்.

**gross weight** – மொத்த எடை: ஒரு பொட்டலத்தின் மொத்த எடை. இதில் அதிலுள்ள பொருள்கள், உறை ஆகியவையும் அடங்கும். பொருள்களின் எடை மட்டும் நிகர எடை. உறையின் எடை உறை எடை. உறையின் எடையைக் கழக்க, நிகர எடை கிடைக்கும்.

**gross yield** – மொத்த விளை பயன்: வரியைக் கழிக்குமுன் ஓர் ஈட்டின் பேரில் கணக்கிடப் படும் விளை பயன். வரி நீக்கிய பயன் நிகர விளை பயன்.

**group discussion** – குழுக் கலந்துரையாடல்: ஒரு நேர் காண்பவர் வழிகாட்டுதலின்

பேரில் அங்காடிக் சிக்கலைப் பற்றிப் பலர் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வருதல். இது ஓர் அங்காடி ஆராயச்சி நுணுக்கம்.

**group-income** – குழு வருமானம்: கூட்டு வரி இல்லாமல், ஒரு நிறுமத்தின் பங்குதாரர் களுக்குக்கிடையே பங்கு ஈவு களையும் ஏனையவற்றையும் பிரித்துக் கொள்ளுதல்.

**group life assurance** – குழு வாழ்நாள் காப்புறுதி: ஒரு நிறுவனத்திலுள்ள பணியாளர்கள் சேர்ந்து செய்வது.

**group relief** – குழுஉதவி: ஒரே தொகுதியாக உள்ள நிறுமங் கள் ஒன்று மற்றொன்றுக்குத் தன் வரிவிலக்கு நன்மை யளித்தல்.

**growth** – வளர்ச்சி: ஒரு சொத் தின் மதிப்பு உயர்வு. முதலீட் டில் வளர்ச்சி இருக்குமானால், தேவைப்படும் அதன் முதல் மதிப்பில் உயர்வு ஏற்படும்.

**growth industry** – வளர் தொழிற்சாலை: ஏனைய தொழிற்சாலைகளைக் காட்டி லும் விரைவாக வளரும் ஒரு தொழிற்சாலை.

**growth stocks** – வளர்ச்சி இருப் புகள்: முதலீடு செய்பவருக்கு நல்ல முதல் வளர்ச்சியை அளிக்கும் ஈடுகள். முதல் ஆதாயம் அளிப்பவை.

**guarantee** – உறுதியளிப்பு: பா. warranty 2) கடன் வாங்கியவர் கடனைக் கொடுக்கத் தவறும் பொழுது, உறுதியளிப்பவர் கடனைக்கொடுக்க வேண்டி வரும்.

**guarantor** – உறுதியாளர். கட னாளிக்குப் பிணையமாக இருந்து, அவர் கடனை அடைப் பதாக உறுதிமொழி கூறுபவர். கடனாளி கடனைக் கொடுக்கத் தவறினால், இவர் அவர் பட்ட கடனைக் கொடுக்க வேண்டி வரும்.

# H

**hallmark** – மன்றுமுத்திரை: தரத் தைக் குறிக்கப் பொருள்களில் இடப்படும் முத்திரை.

**hard currency** – வன் செலா வணி: கடினச் செலாவணி. உலகம் முழுதும் ஒப்புக் கொள்ளப்பட்ட தாள் பணம்.

**head office** – தலைமையகம்: தலைமை அலுவலகம்.

**head office account** – தலைமை அலுவலகக் கணக்கு.

**hedging** – இழப்புக்காப்பு வணிகம்: விலை ஏற்ற இறக்கத் தினால் ஒரு வணிகத்தின் பொருள் நட்டமாகாதவாறு விற்க மேற்கொள்ளும் முயற்சி.

**hedging against inflation** – பணவீக்கத்திற்கு எதிரான பாதுகாப்பு: பொதுப் பங்குகள் ஏனைய முதலீடுகள் மூலம்

பண வீக்கப் பாழாக்கல்களுக்கு எதிராக ஒருவர் தம்முதலைப் பாதுகாத்தல்.

**hidden reserve** – **மறைமுக ஒதுக்குநிதி:** ஒக்கீட்டில் வைக்கப்படுவது. ஐந் தொகையில் தெரிவிக்கப்படுவதன்று.

**higher rates** – **உயர்வீதங்கள்:** அடிப்படை வீதத்திற்கு மேலுள்ளவை.

**hire purchase** – **தவணைமுறை வாங்குகை:** பொருள்களின் மொத்த விலையில் முதலில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திப் பின் எஞ்சியுள்ள தொகையைத் தவணைகளில் செலுத்தல். இதற்கு உரிய ஒப்பந்தம் செய்து கொள்ளுதல். வங்கிமூலமும் தனியார் நிறுவனத்தின் மூலமும் இதைச் செய்யலாம்.

**hire purchase agreement** – **தவணை முறை வாங்குகை உடன்பாடு:** தவணையில் கடனாகக் கொடுக்கும் பொருளைத் தாம் ஏற்றுக்கொள்வதாக வாங்குநர் விற்குநருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

**hire purchase price**– **தவணை முறை வாங்குகை விலை:** பண விலையுடன் வட்டி சேர்ந்த விலை. தவணைக் காலத்திற்கு விதிக்கப்படும் வட்டி.

**hire purchase trading account** – **தவணைமுறை வாங்குகை வணிகக் கணக்கு:** விற்கும் நிறுவனம் தயார் செய்யும் கணக்கு.

**hirer** – **தவணையர்:** தவணை முறையில் வாங்குபவர்.

**holder** – **உடைமையர்;** மாற்றுண்டியல் அல்லது கடன் உறுதிச் சீட்டைக்கொண்டிருப்பவர். இவர் பெறுபவர் அல்லது மேலொப்புநராக இருக்கலாம்.

**holding company** – **உடைமை நிறுமம்;** தொகுதி நிறுமங்களில் பங்குகள் கொண்ட ஒரு நிறுமம்.

**home banking** – **இல்ல வங்கி நடவடிக்கை:** இயல்பான. வங்கி நடவடிக்கைகளை வங்கியுடன் இணைக்கப்பட்ட இல்லக் கணிப்பொறி மூலம் மேற்கொள்ளுதல். மேனாடுகளில் உள்ள வசதி.

**hot money** – **குறுநோக்கு பணம்:** 1) ஒரு நிதிமையத்திலிருந்து மற்றொன்றிற்கு அதிக வட்டி நாடி குறுகிய அறிவிப்பில் செல்லும் பணம் 2) நேர்மையற்ற முறையில் சேர்ந்த பணம். அறிவது அரிது.

**human capital** – **மனித முதல்:** ஒரு தனியாள் தன் பயிற்சியிலும் வேலைநுகர்விலும் பெறும் பொது, சிறப்புத் திறன்கள். 1960களில் இக்கருத்தை அறிமுகப்படுத்தியவர் **கேரி பெக்கர்.** மனிதமுதல் திருப்பத்தைப் பகுதியாகக்

கொண்டிருப்பவை. கூலிகள் என்பது இதன் உட்கருத்து.

**human resources** – **மனித வளங்கள்:** அறிவு, ஆற்றல், பண்பாடு முதலியவை.

**hypothecation** – **அடமானம்:** கொதுவை. தனியாரிடமோ வங்கியிடமோ ஒரு பொருளை ஈடாகவைத்துப் பணம் பெறுதல். இது எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும்.

# I

**image** – **மாண்பு:** ஒருவரைப் பற்றி அல்லது ஒரு நிறுவனத்தைப் பற்றி உருவாகும் மதிப்பு. விளம்பரமும் பொது மக்கள் தொடர்பும் இதற்குப் பெரிதும் உதவும்.

**impact day** – **வெள்ளோட்ட நாள்:** பங்குகளின் புதிய வழங்குகையின் நிபந்தனைகள் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படும் நாள்.

**impersonal account** – **ஆள் சாராக் கணக்கு:** ஆள் பெயர் குறிப்பிடப்படாத கணக்கு. இது பெயரளவு கணக்கே. இதில் ஊர்திகள், வணிக இருப்பு முதலியவற்றின் பெயர் மட்டுமே இருக்கும். ஒ. personal account.

**import deposit** – **இறக்குமதி வைப்புத் தொகை:** இறக்குமதியாளர் செலுத்த வேண்டிய தொகை.

**import duty** – **இறக்குமதி வரி:** இறக்குமதிப் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரி. இது நிலையான தொகையாகவோ சரக்கு மதிப்புகளின் விழுக்காடாகவோ இருக்கும்.

**import licence** **இறக்குமதி உரிமம்:** பொருள்களை உள்நாட்டுக்குக் கொண்டுவர மைய அரசு வழங்கும் அனுமதி.

**import restrictions** – **இறக்குமதிக் கட்டுப்பாடுகள்:** வெளிநாட்டிலிருந்து பொருள்கள் உள்நாட்டுக்குக் கொண்டு வருவதில் விதிக்கப்படும் வரம்புகள்.

**imports** – **இறக்குமதிகள்:** தேவையின் அடிப்படையில் அயல் நட்டிலிருந்து வாங்கும் பொருள்கள்.

**imprest account** – **முன் பணக் கணக்கு :** சில்லறைச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் கணக்கு.

**imprest system** – **முன் பண முறை:** ஒரு வாரம் அல்லது ஒரு திங்களுக்குரிய சில்லறைச் செலவுகளுக்குக் கொடுக்கப்படும் முன் தொகை. இது சில்லறைக் காசாளர் பொறுப்பில் இருக்கும்.

**imputed cost** – **கணக்கிடு ஆக்கச் செலவு:** முன்னரே

உள்ள வளத்தைப் பயன்படுத்து வதிலுள்ள வாய்ப்பு அடக்கச் செலவை மதிப்பிடல். ஒரு செயல் முறையில் உண்மை அடக்கச் செலவைப்பெறக் கணக்கிடு ஆக்கச் செலவினை உண்மைச் செலவோடு சேர்க்க வேண்டும்.

**incentive** – ஊக்குவிப்பு : ஒரு முயற்சியை ஊக்குவிக்கக் கொடுக்கப்படும் பொருள்.

**income** – வருமானம்: 1) ஒருவர் அல்லது ஒரு நிறுமம் தன் முயற்சிக்குக் கைம் மாறாகப் பெறுவது. கைம்மாறு என்பது சம்பளம். வணிக ஆதாயம் ஆகியவற்றைக் குறிக் கும் அல்லது முதலீட்டில் வரும் திருப்பம். திருப்பம் என்பது வட்டி, வாடகை முதலியவை. வரி விதிப்பு நோக்கில் பார்க்க, முதலிலிருந்து வருமானம் வேறுபட்டது. 2) பொருளி யலில் குறிப்பிட்ட காலத்தில் ஒருவர் அல்லது பலருக்கு உரித் தாகக் கூடிய பொருளாதார மதிப்பின் ஓட்டம்.

**imcome and expenditure account** – வரவு செலவுக் கணக்கு: இலாப நட்டக் கணக்கு போன்றது.

**income profit** – வருமான இலாபம்: வருமானமாக வரும் தொகை.

**income stock** – வருமான இருப்பு: உயர் வருமானத்தைக் கொண்டுவர வாங்கப்படும் பங்கு.

**income tax** – வருமான வரி : வருமானத்தின் மீது நேரிடை யாக விதிக்கப்படும் வரி.

**incorporation** – கூட்டுருவாக் கம் : ஒரு நிறுமம் உண்டாக்கப் படல்.

**incremental costs** – உயர்வு ஆக்கச் செலவுகள்: குறிப்பிட்ட நிகழ்ச்சியினால் தோன்றும் அடக்கச் செலவுகள்.

**indemnity** – ஈட்டுறுதி : 1) ஓர் உடன்பாடு. ஒருவர் மற்றொரு வருக்கு ஏற்படும் இழப்பைப் பணத்தாலோ பழுது பார்ப்பதாலோ மாற்றீடு செய்வதாலோ ஈடுசெய்வதாக உடன்படல் 2) பங்குச் சான் றிதழ்கள், வழிப்பட்டியல் முதலிய ஆவணங்கள் இழக்கப் படும் பொழுது கொடுக்கப்படும் உறுதிமொழி. எடுத்துக்காட் டாக, வாங்குநர் சரக்கு ஊர்திப் பட்டியலைத் தவறவிட்ட பொழுது இந்த ஈட்டுறுதியை எழுதிக்கொடுத்த பின்னரே தான் சரக்கை எடுக்கமுடியும்.

**Indent** – தேவைப்பட்டியல் : ஒரு நிறுமத்திற்கு வாங்க வேண்டிய பொருள்களின் நிரல். இப்பட்டி யல் தயாரித்து விலைப்புள்ளி கேட்டு முடிவு செய்தபின், கட்டளையின் பேரில் அவை வாங்கப்படும்.

**Index** – 1) **பொருள் அடைவு:** பொருள் முதல் குறிப்பு. நூலுக் குப்பின் அதன் பொருளைத் தெரிந்து கொள்ள ஆடிபோல் இருப்பது. 2) **குறியீடு:** i) எண் விசைப் பெருக்கக்குறி ii) **எண்:** விலகல் எண். iii) வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் சார்பான மாற்றங்களைக் காட்டும் எண் அளவு: வாழ்க்கைக் குறியீடு.

**Indexation, index linking** – **விலைக் குறியீட்டு இணைப்பு:** கூலி, வரி, சமூகக் காப்புத் தொகை முதலியவற்றைப் பொது விலையளவு உயர் வோடு இணைத்தல். பணவீக்க விளைவுகளைக் குறைக்க, இந்நடவடிக்கை மேற்கொள் ளப்படுவது.

**Index number** – **விலைக் குறி யீட்டெண்:** தற்கால ஆண்டுக் கும் அடிப்படை ஆண்டுக்கும் இடையிலுள்ள மதிப்புத் தொகுதியின் மாற்றங்களைக் குறிக்கப்பயன்படும் எண்.

**Indirect costs** – **மறைமுக ஆக்கச் செலவுகள்:** பா. over-head costs.

**Inflaton** – **பணவீக்கம்:** ஒரு பொருளாதாரத்தில் கூலிகள், விலைகள் ஆகியவற்றின் அளவு நிலையாக உயருதல். இதைப்பல காரணிகள் உண் டாக்குபவை. பண வழங்கு கையில் ஏற்படும் விரைந்த உயர்வு பொதுவான ஒரு காரணி. பணவழங்குகையைக் கட்டுப்படுத்தினால் இவ்வீக்கம் கட்டுக்குள் வரும்.

**Information technology** – **செய்தித் தொழில் நுட்பவியல்:** தகவல் தொழில் நுட்பவியல். செய்தியை முறையாக்கவும் பகிர்ந்தளிக்கவும் கணிப் பொறி, தொலைக்காட்சி முத லிய மின்னணுக் கருவியமைப் புகளைப் பயன்படுத்துதல்.

**Internal reconstruction** – **அகச் சீரமைப்பு:** சரிவர இயங் காத நிறுமத்தில் உரிய மாற்றங் கள் செய்து இருப்பு நிலைக் குறிப்பு தயாரித்து, வெளியிட்டு, மக்கள் நம்பிக்கையைப்பெற்று, நடப்பு முதலை கூட்டுதலும் வணிக வளர்ச்சி உண்டாக் கலும்.

**Infrastructure** – **அகக் கட்ட மைப்பு:** சமூக மேற்செலவு முதல். சரக்குகள், பணிகள் ஆகியவற்றிற்குக் குறிப்பிடத் தக்க முதலீடு தேவை. இம் முதலீடு ஒரு பொருளாதாரம் செயற்பட இன்றியமையாதது. எடுத்துக் காட்டாகச் சாலைகள், இருப்புப் பாதைகள் மின் வழங் குகை ஆகியவை சமுதாயக் கட்டமைப்பின் இன்றியமை யாக் கூறுகள். இக் கட்டமைப்பு ஒரு நிறுவனத்திற்குரியது.

**Inland bill** – **உள்நாட்டு உண்டி யல்.**

**Innovation** – **புத்தாக்கம்:** புதியது புனைதல். ஒரு முயற்சியில் புதிய நுட்பங்களைக் கையாளுதல். இது புதிய அணுகுமுறை. முழுக்க முழுக்கத் தொழில் முயற்சிகள் சார்ந்தது.

**insolvency** – **நொடித்தல்:** வாங்கிய கடனைத் திருப்பித்தர இயலாத நிலை. இது தனியாரானால் ஓட்டாண்டி நிலையைக் குறிக்கும். நிறுமமானால் கலைப்பைக் குறிக்கும்.

**Instalment** – **தவணை :** பா. hire purchase,

**Instalment system** – **தவணை முறை.**

**Instrument** – 1) **கருவி :** தன் பெரும் பொருளியல் இலக்குகளை அடைய அரசுக்குப் பயன்படும் சாதனம். எடுத்துக்காட்டாக, வட்டி வீதங்களும் பண வழங்குகையும் நிலைத்த விலைகளைக் கொள்வதற்குரிய கருவிகளாகும். அரசு வரியும் செலவும் முழு வேலை வாய்ப்பை அளிக்கும் கருவிகள்.

2) **ஆவணம் :** முறையான சட்ட உரிமையுள்ள பத்திரம். பா. negotiable instrument.

**Insurance** – **காப்புறுதி:** காப்பீடு. ஈட்டுறுதி. இது ஒரு சட்டப்படியான ஒப்பந்தம். இதில் காப்புறுதி செய்பவர் காப்புறுதி பெறுபவருக்கு இடர் வரும் பொழுது குறிப்பிட்ட தொகை அளிக்க உறுதி மொழியளிப்பார். காப்புறுதி பெறுபவர் இறப்பின், அதற்குத் தகுந்த தொகை அவர் வாரிசுக்குக் கிடைக்கும். பொதுவாகக் காப்புறுதி, இடர் கருதியே செய்யப்படுவது.

**insurance policy** – **காப்புறுதி முறிமம் :** காப்புறுதிப் பத்திரம். காப்புறுதி ஒப்பந்த நிபந்தனைகள் கொண்டது.

**insurance premium** – **காப்புறுதி முனைமம்:** காப்புறுதி மேல் தொகை. மாதம், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனப் பல காலவகைகளில் செலுத்தும் தொகை.

**Insurer** – **காப்புறுதியர்:** காப்புறுதி செய்பவர். இது பொதுவாக நிறுவனமாகும்.

**Insured** – **காப்புறுதி பெறுநர்:** காப்புறுதி முறி எடுப்பவர். பொதுவாக, இவர் தனி ஆளே.

**intangible asset** – **புலனாகாச் சொத்து:** தொட்டு உணர முடியாதது. எ–டு. நற்பெயர், உரிமை முத்திரைகள், வாணிபக் குறி. ஒ. tangible asset.

**Integration** – **தொகையாக்கல்:** பொது நன்மைக்காக, ஒரே கட்டுப்பாட்டில் பல நிறுவனங்கள் ஒன்று சேர்தல். வாணிப முன்னேற்றமும் ஆதாயமுமே இதன் பெருநன்மைகள். பக்கத் தொகையாக்கல், செங்குத்துத்

தொகையாக்கல், முன்னோக்கு தொகையாக்கல் என இது மூவகை. ஒருங்கிணைப்பு என்றுங் கூறலாம்.

**intellectual property** – **அறிவுச் சொத்து :** புலனாகாச் சொத்து. எ–டு. நூலுரிமை, உரிமை முத்திரை. பா. royalty.

**interest** – **வட்டி:** கடன் வாங்கிய பணத்திற்கு அளிக்கும் கட்டணம். இது விழுக்காடாகத் தெரிவிக்கப்படுவது. 12% ஒரு வட்டி. 24% இரண்டு வட்டி. தனி வட்டி, கூட்டு வட்டி என இது இருவகை.

பொருளியலில் வட்டியின் வேலைகள் இரண்டு: 1) குடும்பச் சேமிப்புத் தொகை முதலீடாகிறது 2) செலவழிக்கும் தொகை பொருள் வழங்கலாக மாறுவது. பணத்தேவையைப் பொறுத்து வட்டி வீதங்கள் அமைகின்றன.

**interim dividend** – **இடைக் காலப் பங்கு ஈவு.**

**international monetary fund, IMF** – **அனைத்துலகப் பண நிதியம், அபநி:** ஐநாவின் தனிப்பட்டநிறுவனம். 1945–இல் நிறுவப்பட்டது. அனைத்துலகப் பண ஒத்துழைப்பை உயர்த்துவது.

**intrinsic value** – **உள்ளார்ந்த மதிப்பு :** 1) ஒரு பொருள் தன் இயல்பினால் கொண்டுள்ள மதிப்பு. இயல் மதிப்பு எனலாம்.

2) ஒரு வணிக விருப்பப் பேரத்தில் அமையும் ஈட்டின் அங்காடி மதிப்புக்கும் நடப்பு விலைக்கும் உள்ள வேறுபாடு. பா. time value.

**introduction** – **அறிமுகப்படுத்துதல்:** பங்குகள் வழங்கும் முறை.

**inventory** – **பொருள் பட்டியல்:** ஒரு வீட்டிலுள்ள இனவாரியான பொருள்களின் பட்டியல்.

**investment** – **முதலீடு:** முதலின சரக்குகள் வாங்குதல். எந்திரம், ஆலை, இவற்றில் நுகர்வதற்குரிய பொருள்கள் உண்டாக்கப்படுதல். இது மூலதன முதலீடு எனப்படும். இது அதிக மாக அதன் வளர்ச்சியும் அதிகமாகும். 2) ஈடுகள், வைப்பு நிதிகள் முதலியவை வாங்குதல். இதன் நோக்கம் நிதித் திருப்பத்தை வருமானமாகவும் முதல் ஆதாயமாகவும் பெறுவது. இதற்கு நிதி முதலீடு என்று பெயர். இது சேமிப்பு வழிவகையாகும். வட்டி வீதம், ஆதாயம், தொழில் சூழல் ஆகிய காரணிகளோடு இம்முதலீட்டு அளவு தொடர்பு கொண்டிருக்கும்.

**investment, capital** – **மூலதன முதலீடு:** பா. investment.

**investment, financial** – **நிதி முதலீடு:** பா. investment.

**investment income** – முதலீட்டு வருமானம்: முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருவாய்.

**invisible assets** – பார்க்க இயலாச் சொத்துகள்: பா. intangible assets.

**invisible balance** – பார்க்க இயலா இருப்பு: நாடுகளுக்கிடையே உள்ள செலுத்தீடுகளின் இருப்பு. எ–டு. காப்பீடு, வங்கி முதலியவை மூலம் வருபவை.

**invoice** – இடாப்பு: விற்பவர் வாங்குபவர் ஆகிய இருவருக்கும் இது ஓர் ஆவணம். ஒவ்வொரு முறை சரக்கு விற்கும் பொழுதும் இது இரண்டு அல்லது மூன்று படிகளில் தயாரிக்கப்படும். ஒன்று வாங்குபவருக்கு அனுப்பப்படும். ஏனையவை விற்பவரிடமே இருக்கும். அனைத்து விவரங்களும் இதில் இருக்கும். பட்டியல் என்றும் கூறலாம்.

**invoice price** – இடாப்பு விலை: பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ள விலை.

**issue** – வெளியீடு: வழங்கீடு. குறிப்பிட்ட காலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பங்கு எண்ணிக்கை.

**issued share capital** – வெளியிட்ட பங்குமுதல்.

**issue price** – வெளியிடும் விலை: பங்குகளின் புதிய வழங்கீடு. பொது மக்களுக்கு விற்கப்படும் விலை.

# J

**job analysis** – வேலைப் பகுப்பு: பணிப் பகுப்பு. ஒரு நிறுவனத்திலுள்ள மற்ற வேலைகளோடு ஒரு குறிப்பிட்ட வேலையின் தொடர்பு, அதைச் செய்வதற்கு வேண்டிய கருவிகள் முதலியவை பற்றி ஆராய்தல். அவ் வேலையை எவ்வாறு சிறப்பாகச் செய்யலாம், அதைச் சிறப்பாகச் செய்வதற்குரியவரின் தகுதி, திறமை, பான்மை என்பனவற்றையும் இப்பகுப்பு வெளிப்படுத்தும்.

**job costing** – பணியாக்கச் செலவு: மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வேலைக்கும் ஏற்படும் தனி அடக்கச் செலவுகள். இம்முறை பொறி இயலில் பயன்படுவது. ஏனெனில், இதில் வேறுபட்ட பல வேலைகள் செய்யப்படும். இங்கு ஒரு படித்தான விளைபொருள் என்பது இல்லை.

**job evaluation** – வேலை மதிப்பீடு: ஒரு குறிப்பிட்ட வேலையில் தேவைப்படும் உழைப்பை மதிப்பிடல். அதைச் செய்பவரின் பொறுப்புகள், திறன்கள், பட்டறிவு, தகுதிகள் எல்லாவற்றையும் அறிதல். இதனால் அவ்வேலைக்கு எவ்

வளவு ஊதியம் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்யலாம்.

**joint account** – **கூட்டுக் கணக்கு:** இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து வங்கியில் வைக்கும் கணக்கு. ஒரு நிறுவனத்தில் செய்யப்படுவது. மூவரும் கையெழுத்திட்டால் தான் பணம் எடுக்க இயலும்.

**joint investment** – **கூட்டு முதலீடு:** இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஓர் ஈட்டை வாங்குதல்.

**joint stock company** – **கூட்டுப் பங்கு நிறுமம்:** தங்கள் கூட்டுப் பங்கின் அடிப்படையில் ஒரு நிறுமத்திலுள்ளவர்கள் வணிகம் செய்தல்.

**joint venture** – **கூட்டு வினை:** இணை வணிக முயற்சி.

**journal** – **குறிப்பேடு:** எத்துணை ஏட்டிலும் எழுத இயலாத நடவடிக்கை மட்டும் இதில் பதிவு செய்யப்படும். எ–டு. சரிக்கட்டும் பதிவுகள், பிழை திருத்தப்பதிவுகள். ஒரு முதன்மைப் பதிவேடு.

**journal entries** – **குறிப்பேட்டுப் பதிவுகள்:** 1) தொடக்கப் பதிவுகள் 2) மாற்றுகைப் பதிவுகள் 3) பிழைநீக்கப் பதிவுகள் 4) முடிவுப் பதிவுகள். 5) சரிக்கட்டுப் பதிவுகள்.

**journalising** – **குறிப்பேட்டில் பதிதல்:** பதிவுகளைக் குறிப்பேட்டில் ஏற்றல்.

# K

**Keynesianism** – **கெயினிசியம்:** கெயினிசின் (1883–1946) பொருளியல் கொள்கை. பெரும் பொருளியலுக்குரிய அணுகுமுறை. இவர் பணியின் அடிப்படையில் அமைந்தது. அங்காடிகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லை எனில் பின்னடைவும் பேரளவு வேலையின்மையும் உண்டாகும்.

# L

**land charges** – **நிலக்கடன்கள்:** வேறு செலவுகளுக்காக நிலத்தை அடமானம் வைத்து வாங்கும் பொறுப்புகள்.

**landing charges** – **இறங்கு கட்டணங்கள்:** துறைமுகத்தில் ஒரு சரக்கை இறக்குவதற்குரிய செலவுகள்.

**lease** – 1) **குத்தகை:** விளை பொருள் உள்ள நிலத்தை (நெல், கனிமம்) ஆதாயம் பெற ஒருவர் மற்றொருவருக்கு விடுதல் 2) **வாடகைக்கு விடல்:** ஒரு வீட்டை ஒருவர் மற்றொருவருக்குக் குடிக்கூலிக்கு விடுதல்.

**lease holder** – 1) **குத்தகைக்காரர் 2) வாடகையர்.**

**leasehold property** – **குத்தகைச் சொத்து:** சாகுபடி நிலம், கனிமச் சுரங்கம்.

**leasing** – 1) **குத்தகைக்கு விடல் 2) வாடகைக்கு விடல்.**

**ledger** – **பேரேடு:** கணக்குகளை இனவாரியாகப் பதியும் ஏடு. இவைகளுக்கு மூலம் குறிப்பேடு. இதில் ஒவ்வொரு பக்கத்திலும் ஓர் இனக் கணக்கு இருக்கும்.

**ledger, kinds of** – **பேரேட்டு வகைகள்:** இது இரு வகைப்படும்.

1) **ஆள்சார் பேரேடு:** இது மேலும் இரு வகைப்படும்: i) **கடன் ஈந்தோர் பேரேடு:** அனைத்துக் கடன் ஈந்தோர் கணக்குகளும் இதில் இருக்கும் ii) **கடனாளிப் பேரேடு:** அனைத்துக் கடனாளிகள் கணக்குகளும் கொண்டது இது.

2) **ஆள் சாராப் பேரேடு:** வேறு பெயர் பொதுப் பேரேடு. இது சொத்துக் கணக்குகள் பெயரளவுக் கணக்குகள் என இரு வகை.

**ledger, uses of** – **பேரேட்டின் பயன்கள்:**

1) குறிப்பிட்ட ஒரு கணக்கின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவது. எடுத்துக் காட்டாகத் தாள் கொள்முதல் எவ்வளவு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

2) குறிப்பிட்ட ஒரு கணக்கிற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி, இறுதி விளைவை வெளிப்படுத்துவது.

3) ஒரு தலைப்பிலான மொத்தச் செலவை எளிதாகக் காட்டும். எடுத்துக் காட்டாகச் ஒரு மாதத்திற்குக் கொடுத்த ஊதியத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

4) இதன் கணக்குகள் காட்டும் இருப்புகளைக்கொண்டு இருப்பாய்வு தயார் செய்யலாம். இதைக் கொண்டே ஆதாயத்தை அறியும் இலாப நட்டக் கணக்குகளும் நிதிநிலையை உணரும் இருப்பு நிலைக்குறிப்புகளும் தயார் செய்யப் படுகின்றன.

**legacy** – **உயில் கொடை:** உயில் மூலம் வாணிப நோக்கற்ற நிறுவனங்கள் நன்கொடை யாகப் பெறும் தொகை. ஒரு முதலின வரவு.

**legal reserve** – **சட்டமுறை ஒதுக்கு நிதி:** ஒரு நிறுவனம் சட்டப்படி ஒதுக்க வேண்டிய குறைந்த தொகை.

**legal tender** – **சட்ட முறைப் பணம்:** ஒரு கடனை அடைக்க ஏற்றுக் கொள்ளப்படும் பணம். இது வரையறை உள்ளது, இல்லாதது என இருவகை.

**lessee - leaser** – **குத்தகைக் காரர்:** ஒரு சொத்தின் விளை– பயனைக் குத்தகையின் பேரில் நுகர்பவர். 2) **வாடகையர்:** ஒரு வீட்டைக் குடிக்கூலி கொடுத்துப் பயன்படுத்துபவர்.

**letter of hypothecation** – **அடமானக் கடிதம்:** அடகு வைக்கப் பட்ட பொருள்களை விற்க வாங்கும் கடிதம்.

**letter of indemnity** – **ஈட்டுறுதிக் கடிதம்:** இதைப் பெறுபவர் இழப்பீட்டிற்கு, இக் கடிதத்தை வழங்கும் நிறுவனம் பொறுப் பேற்கும்.

**liabilities** – **பொறுப்புகள்:** கடன்கள்.

**liabilities, kinds of** – **பொறுப்பு வகைகள்:**

1) **நெடுங்காலப் பொறுப்பு கள்:** நீள்தவணைக் கடன், முதல்.

2) **நடப்புப் பொறுப்புகள்:** செலுத்துவதற்குரிய மாற்றுண் டியல், குறுந்தவணைக் கடன்

3) **நிகழ்வடைவுப் பொறுப்பு கள்** – தீர்ப்பளிக்கப் படாம லுள்ள பொறுப்புகள்.

**licence** – **உரிமம்:** ஒரு தொழில் நடத்த அரசு வழங்கும் அனுமதி. இதன் நோக்கம் அரசு வருவாய் பெறுவதே.

**licensed dealer** – **உரிமம் பெற்ற வணிகர்:** அரசு அளிக் கும் உரிமத்தோடு வணிகம் செய்பவர். எ–டு. மளிகை வணிகர்.

**lien** – **பற்றுரிமை:** உரிமை கோரல் தீரும் வரை ஒருவர் மற் றொருவர் சரக்குகளை வைத் திருக்கும் உரிமை. இது பொதுப் பற்றுரிமை, சிறப்புப் பற்றுரிமை என இருவகை.

**life assurance** – **வாழ்நாள் அறுதி உறுதி:** காப்புறுதிமுறி. ஒருவர் இறந்த பின் குறிப்பிடப் பட்ட தொகை அளிப்பது.

**limit** – **வரையறை:** 1) பெரும விலைக்கு வாங்கவும் சிறும விலைக்கு விற்கவும் ஒரு முதலீட்டாளர் தன் தரகருக்கு அளிக்கும் ஆணை. 2) குறிப் பிட்ட காலத்தில் ஒரு நாள் வணிகத்தில் சில சந்தைகளில் அனுமதிக்கப்படும் பெரும ஏற்ற இறக்கங்கள்.

**limited company** – **வரையறுக் கப்பட்ட நிறுமம்:** நிறுமக் கடன்களைப் பொறுத்தவரை உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை செய்யப்பட்டது. பங்குகளாலும் உறுதியளிப் பாலும் அவ்வாறு வரையறை செய்யப்படுவது அமையும்.

**limited liability** – **வரையறுக் கப்பட்ட பொறுப்பு.**

**limited partner** – **வரையறுக் கப்பட்ட கூட்டாளி:** பா. partner ship.

**liquid assets** – **நீர்மைச் சொத் துகள்:** உருமாறும் சொத்துகள். எளிதாகப் பணமாக்கக் கூடியவை. எ–டு. முதலீடு, வைப்பு நிதி.

**liquidation** – **கலைப்பு:** செயல் படாத நிலையில், ஒரு நிறுமத் தின் சொத்துகளை அதன் கடன் ஈந்தோர்க்கும் உறுப் பினர்களுக்கும் பகிர்ந்து கொடுத்த பின், அதைக் கலைத் தல். இதனோடு அதன் வாழ்வு முடிவுறும்.

**liquidator** – **கலைப்பாளர்:** ஒரு நிறுமத்தின் கலைப்பு அலுவல் களைக் கவனிக்க நீதிமன்றத் தால் அல்லது நிறுமத்தால் அமர்த்தப்படுவர்.

**liquidity** – **நீர்மைத்திறன்:** ஒரு நிறுமத்தின் சொத்துகள் மாற் றப்படும் திறன் அளவு.

**list price** – **பட்டியல விலை:** 1) ஒரு நுகர் பொருளின் சில் லறை விலை. உற்பத்தியாளர் பரிந்துரைப்படி விலைப்பட்டிய லில்குறிப்பிடப்பட்டிருப்பது. 2) வழங்குவோர் விலைப்பட்டிய லில் கழிவு நீக்குவதற்கு முன் குறிப்பிடப்படுவது.

**litigant** – **வழக்காடுபவர்:** சட்ட நடவடிக்கை எடுப்பவர்.

**litigation** – **வழக்காடல்:** சட்ட நடவடிக்கை எடுத்தல்.

**loan** – **கடன்:** திருப்பித்தரப்படும் உறுதி மொழியில் கொடுக்கப் படும் பணம். இதற்கு வட்டி யுண்டு. தனியாரும் வங்கியும் கடன் கொடுப்பவை. குறுங் காலக் கடன், நெடுங்காலக் கடன் என இது இருவகை.

**loan account** – **கடன் கணக்கு:** கடன் வாங்கியவர் பெயரில் இருக்கும் கணக்கு.

**loan capital** – **கடன் முதலீடு:** முதலீட்டிற்காக வாங்கும் கடன். தனியாருக்கோ நிறுவனத் திற்கோ தேவைப்படுவது.

**long term debit** – **நெடுங்காலக் கடன்:**

**long term liability** – **நெடுங்கா லப் பொறுப்பு:** உடன் செலுத் தப்படாத கடன். 10 ஆண்டுகள் வரை உள்ளது.

**lump sum** – **முழுத் தொகை:** பகுதியாக அல்லாமல் ஒரே தடவை முழுதுமாகக் கொடுக் கப்படும் கடன்.

**luxury good** – **ஆடம்பரப் பொருள்:** இன்ப வாழ்க்கைப் பொருள். எ–டு. தொலைக் காட்சிப் பெட்டி.

# M

**machine hour rate method** – **எந்திர மணி வீத முறை:** எந்திரத் தேய்மானத்தைக் கணக்கிடும் முறை.

**management** – **மேலாண்மை:** ஒரு நிறுவனத்தை நடத்துதல். இது ஓர் உற்பத்திக் காரணி. இதில் நிலம், உழைப்பு, முதல் ஆகியவை அடங்கும்.

இதன் முதன்மையான இரு பகுதிகள்

1) **அமைப்புத்திறன்:** இதி லுள்ள மேலாண்மை நுணுக் கங்கள், நெறிமுறைகல் ஆகிய வை கல்லூரிகளிலும் தொழிற் பள்ளிகளிலும் கற்பிக்கப் படுபவை.

2) **தொழில் முனைவு அறிவு:** வாய்ப்புகளைப் பயன்படுத்து தல், சந்தைத் தேவைகளையும் போக்குகளையும் முன் கூட்டி யறிதல், இலக்குகளை அடைதல் முதலியவை பட்டறிவு மூலம் அறியப்படுபவை. பொதுவாக, ஒரு நிறுவனத்தை நடத்தும் அனைவரும் இதில் அடங்குவர்.

**management, kinds of** – **மேலாண்மை வகைகள்:**

1) **உற்பத்தி மேலாண்மை:** உற்பத்தியைக் கவனித்தல். நிறு வனம் வழங்கும் பணிகளை ஒழுங்குபடுத்தல்.

2) **பணிக்குழு மேலாண்மை:** பணிக்குழுவினரைக் கவனித் தல்

3) **போக்குவரத்து மேலாண் மை:** போக்கு வரத்தைக் கவனித்தல்.

4) **பணி மேலாண்மை:** பணி களைக் கவனித்தல்.

5) **மேல் மேலாண்மை:** மேலாண் இயக்குநர், மேலாளர் கள், மற்றும் இயக்குநர்கள் கொண்டது.

6) **நடு மேலாண்மை:** பெரும் பாலும் மேலாளர்களைக் கொண்டது.

**management accountant** – **மேலாண்மைக் கணக்கர்:** ஒரு நிறுவனத்தின் செயல் விளைவுகளைப் பற்றி எடுத் துக் கூறுபவர். நிறுவனத்தின் நிதி நிலைமை, வளர்ச்சி முதலியவற்றையுங் கவனிப் பவர்.

**management consultant** – **மேலாண்மை அறிவுரையாளர்:** ஒரு நிறுவனம் தன் ஆதாயத் திறனை எவ்வாறு உயர்த்துவது என்பது பற்றி அறிவுரை கூறு பவர். இது அவருக்குத்தொழில்.

**managing director** – **மேலாண் இயக்குநர்:** ஒரு நிறுமத்தின் தலைவருக்கு அடுத்த நிலையில் உள்ளவர். நிறும அன்றாட அலுவல்கள் நடை பெற அவரே காரணம்.

**mandate** – **ஆணையுரிமை:** ஒருவர் சார்பாக மற்றொருவர் செயல்பட வழங்கும் உரிமை. கொடுப்பவர் இறக்கும் பொழு தும் நொடிக்கும் பொழுதும் இது நீங்கும் ஒ. power of attorney.

**mandator** – **ஆணை உரிமை யர்:** ஆணை உரிமை அளிப் பவர்.

**mandatory** – **ஆணையுரிமை பெறுநர்:** ஆணை உரிமைக் குரியவர்.

**manhour** – **மனித மணி:** ஒரு வர் ஒரு மணிக்குச் செய்யும்

வேலையின் அளவு, ஒரு வேலையின் அடக்கச் செல வைக் கணக்கிடப் பயன்படு வது.

**manpower** – **மனித ஆற்றல்:** ஒரு நாட்டில் ஆண், பெண் ஆகிய இருவரும் சேர்ந்து செய் யும் மொத்த வேலையாற்றல்.

**manufacture account** – **உற்பத் திக் கணக்கு.**

**margin** – **இறுதியீடு** 1) விற்கும் விலையைக் காண அடக்கச் செலவோடு சரக்குகளின் அடக்கச் செலவின் விழுக் காட்டைக் கூட்டுதல்.

2) விலை வேறுபாட்டு அடிப் படையில் வணிகர் வாங்கல் விற்றல்.

3) சரக்கு அல்லது செலா வணிப் பேரத்தில் முதலீடு செய்பவர் எதிர்காலத்தில் அவற் றை வாங்கக் கொடுக்கும் முன் பணம்.

4) பங்குத் தரகருக்கு வாடிக்கை யாளருக்கு ஏற்படும் இழப்பைச் சரிக்கட்டக் கொடுக்கப்படும் பணம் அல்லது ஈடுகள்.

**marginal cost** – **இறுதியீட்டு ஆக்கச் செலவு:** ஒரு கூடுதல் உற் பத்தியலகை உண்டாக்க ஆகும் கூடுதல் அடக்கச்செலவு. நிறை வான போட்டி நிலைமைகளில் இச்செலவு சந்தை விலைக்குச் சமமாக இருக்கும். நிறுமங்கள் இதை ஒன்றும் செய்வதற் கில்லை.

**marginal revenue** – **இறுதியீட்டு வருவாய்:** ஒரு கூடுதல் அலகு உற்பத்தியில் விற்று, ஓர் உற் பத்தியாளர் பெறும் கூடுதல் வருமானம்.

**market** – **அங்காடி: சந்தை.**

1) மதிப்புள்ள இனங்களை (பொருள்களை) பரிமாற்றிக் கொள்ள வாங்குபவரும் விற்ப வரும் கூடுமிடம்.

2) ஈடுகள், பண்டங்கள், செலா வணிகள் ஆகியவற்றில் ஈடு படும் வாணிபக் கூட்டம்.

3) ஒரு குறிப்பிட்ட விளை பொருள் அல்லது பணிக்குள்ள தேவை. ஒரு குறிப்பிட்ட காலத் தில் நடைபெறும் விற்பனை யால் அளக்கப்படுவது.

**marketable security** – **வாணி பம் செய்யக்கூடிய ஈடு:** இருப்பு, பங்கு, பத்திரம்.

**market assessment** – **அங்காடி மதிப்பீடு:** ஒரு குறிப்பிட்ட சரக்கு அல்லது பணிக்காகச் சந் தையை அடையாளங் காண லும் மதிப்பிடலும்.

**market capitilization** – **அங் காடி முதலாக்கம்:** சந்தை மதிப் பாக்கம். ஒரு நிறுமத்தின் வழங் கப்பட்ட பங்குகளின் எண்ணிக் கையை, அவற்றின் சந்தை விலையால் பெருக்கி வரும் தொகை அல்லது மதிப்பு.

வ.6.

**market forces** – **அங்காடி ஆற்றல்கள்:** வழங்காற்றலும் தேவை ஆற்றலும்.

**marketing** – **அங்காடியாக்கம்:** ஒரு நிறுமத்தின் விளை பொருள்களுக்கான நுகர் தேவையை இனங்காணலும் மிகுதியாக்கலும் அமைதிப்படுத்தலுமாகும். இதில்பின் வருஞ்செயல்கள் உள்ளன: தேவை மாற்ற எதிர்ப்பு, விளை பொருளை உயர்த்தல், சந்தைத் தேவை விலை, விற்பனைப் பின்பணி.

**marketing mix** – **அங்காடியாக்கக் கலப்பு:** தன் விளை பொருள்களை நுகர்வோர் வாங்குவதற்கேற்ற காரணிகளை ஒரு நிறுமம் கட்டுப்படுத்தல். இதன் நான்கு பகுதிகளாவன:

1) **விளைபொருள்:** தன்மை, வாணிபக்குறி, சிப்பமாக்கல்.

2) **விலையிடல்:** சில்லரை விலை, பெருங்கட்டளைகளுக்குக் கழிவு, கடன் வசதி.

3) **உயர்த்தல்:** விற்பனை உயர்வு.

4) **இடம்:** விற்குமிடம்.

**marketing plan** – **அங்காடியாக்கத் திட்டம்:** சந்தைக் குறிக்கோள்களை அடையச் சந்தையாக்கக் கலப்பைப் பயன்படுத்தல்.

**market price** – **அங்காடி விலை:**

1) ஒரு கச்சாப்பொருள், விளைபொருள், பணி, ஈடு ஆகியவற்றின் விலை.

2) பணத்திற்காகவோ பிற ஒன்றுக்காவோ சந்தையில் பண்டங்கள் மாற்றிக் கொள்ளக் கூடிய பொருளாதாரக் கருத்து.

**market value** – **அங்காடி மதிப்பு:** திறந்த சந்தையில் அதன் நடப்பு விலையில் ஒரு பொருளை விற்கும் பொழுது உண்டாகும் மதிப்பு.

**Marxist economics** – **மார்க்ஸ் பொருளியல்:** தொன்மைப் பொருளாதாரத்தின் ஒரு பிரிவு. காரல் மார்க்ஸ் (1818–83) என்பார் உருவாக்கியது. இதன் தனிச் சிறப்பு, பொருளியல் கருத்துக்கு வலுவான அரசியல் மணம் சேர்த்ததாகும். பொருளியல் மதிப்பின் தலைவாய் **உழைப்பு** என்பது ஆதம் சிமித்தின் கருத்து. இதை விரிவு படுத்தி மார்க்ஸ் கூறினார். பிழைப்பூதியக் கூலி மட்டும் கொடுத்து உற்பத்தி முறை மூலம் தொழிலாளர்களிடமிருந்து முதலாளிகள் **மீமதிப்பைப்** பெறுகின்றனர் என்பது இவர் தம் மையக் கருத்து. இவர் தம் சிந்தனை இவர் எழுத்துகளுக்குப்பின் வளர்ந்தது குறைவே; அதன் சிறப்பிலும் பின்னடைவு ஏற்பட்டது

**mass media** – **மக்கள் ஊடகங்கள்:** மக்களை ஊடுருவிச்

செல்லும் காட்சிக் கருவிகள். எ—டு. செய்தித்தாள், தொலைக் காட்சி.

**mass production** – **பேரளவு உற்பத்தி:** ஒத்த தன்மையுள்ள பொருள்களை அதிக அளவு தொழிற் சாலைகளில் உருவாக்கல். இதற்குத் தொடர் தானி யங்கு முறை பயன்படுவது.

**maturing date** – **முதிர்ச்சி நாள்:** பத்திரம், மாற்றுண்டியல் முதலிய ஆவணங்களுக்குப் பணம் கொடுப்பதற்குரிய நாள். வேறுபெயர் மீட்பு நாள்.

**mean price** – **சராசரி விலை:** ஈடு, பண்டம், செலாவணி ஆகியவற்றின் குறிப்பீட்டு விலைக்கும் அதன் கேள்வி விலைக்குமுள்ள சராசரி. நடு விலை என்றும் பெயர்.

**media** – **ஊடகங்கள்:** காட்சிக் கருவிகள். எ—டு தொலைக் காட்சி, செய்தித்தாள்.

**media persons** – **ஊடகத்தார்:** செய்தியாளர்கள், தொலைக் காட்சியகத்தார் முதலியோர்.

**medium of exchange** – **பண்ட மாற்று ஊடகம்:** பண்டம் மாற்றுக் கருவி. சரக்குகளுக் காகவும் பணிகளுக்காகவும் குறைந்ததும் உள்ளார்ந்த மதிப் புள்ளதுமான ஒரு பொருள் வழக்கமாகக் கொடுக்கப்படுதல்.

இப்பொழுதும் சிற்றூர்களில் நெல் கூலியாகக் கொடுக்கும் பழக்கம் உள்ளது. ஆனால், தற் பொழுது இதற்காக உலகெங் கும் பயன்படுவது பணம்.

**memorandum of association** – **சங்க முறையேடு:** இது நிறு மத்தின் பட்டயம். இதில் இருக்க வேண்டியவை:

1) நிறுமப் பெயர் 2) நிறுமப் பதிவகம் அமையும் மாநிலம் 3) நிறும நோக்கங்கள் 4) உறுப் பினர்களின் பொறுப்பு வரை யறை 5) அனுமதித்த முதலும் அதன் பங்குப் பிரிவும் 6) நிறும அமைப்பு பற்றிய விளக்கம்.

**memoradum revaluation method** – **நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு முறை.**

**merchant** – **வணிகர்:** ஒரு பொருளை வாங்கி விற்பவர். ஏற்றுமதி இறக்குமதி செய் பவர்.

**merger**– **இணைப்பு:** பொது நன்மை கருதி இரண்டிற்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒருங் கிணைக்கப்படுதல் எ—டு. தஞ் சாவூர் வங்கி இந்தியன் வங்கி யோடு இணைக்கப்பட்டது.

**middleman** – **இடையாள்:** பா. broker.

**minimum subcription** – **சிறுநிதித் தொகை:** ஒரு புதிய நிறுமத்தின் வாய்ப்பறிக்கை யில் கூறப்பட்டுள்ள குறைந்த அளவுத் தொகை. இத்தொகை நன்கு இயங்கப்போதும் என இயக்குநர்கள் கருதுதல்.

**minority interest**– **சிறுபான்மையர் நலம்:** ஒரு நிறுமத்தில் குறைந்த அளவுள்ள பங்கு தாரர்களின் நன்மை.

**mixed economy** – **கலப்புப் பொருளியல்:** இதில் சில சரக்குகள், பணிகள் அரசாலும், சில தனியாராலும் உற்பத்தி செய்யப்படுதல். பெரும் பான்மைப் பொருளியல்கள் கலப்புப் பொருளியல்களே. இந்தியா பின்பற்றுவது கலப்புப் பொருளியலே.

**monetarism** – **பணவியம்:** பணக்கொள்கை. பெரும் பொருளியல் கொள்கை பணத்தை மையமாகக் கருதுவது. பண அளவுக் கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. முதன் முதலில் ஸ்காட்டிஷ் மெய்யறிவாளர் தாவீது ஹியூம் (1711 – 76) என்பவரால் தெரிவிக்கப்பட்டது. பொருளியலில் பண அளவுக்கு விலையளவைத் தொடர்புப் படுத்துவது. கெயின்சின் கொள்கைக்கு நேர்மாறானது.

**monetary assets and liabilities** – **பண இருப்புகளும் பொறுப்புகளும்:** இருப்புகள் வர வேண்டிய பணங்கள். பொறுப்புகள் கொடுக்க வேண்டிய பணங்கள். கணக்கில் குறிப்பிடப்பட்ட பணத்தொகையாகக் காட்டப்படுபவை. எ–டு. பணம், பண இருப்பு, கடன்கள், கடன் ஈந்தோர், கடனாளி.

**monetary policy** – **பணக் கொள்கை:** பணம் வழங்குகையை உயர்த்தி அல்லது தாழ்த்திப் பெரும் பொருளியல் நிலைமைகளை ஊக்குவிக்குமளவுக்கு அரசு மேற்கொள்ளும் வழிவகைகளில் ஒன்று. இது தொடர்பாக மூன்று விருப்பப் பேரங்கள் உண்டு.

1) அதிகப் பணத்தை அச்சிடல் – இது தற்பொழுது இல்லை.

2) பணத்துறையில் நேரடியாகப் பணம் கட்டுப்படுத்தப் படுதல்.

3) திறந்த அங்காடி நடவடிக்கைகள்.

பாதுகாப்பான ஆவணம் பணக் கொள்கை என்பது கெயின்சின் கருத்து. இதற்கு நேர் மாறான கொள்கையுடையவர்கள் பணவியலார்.

**money** – **பணம்:** பரிமாற்றுக் கருவி. கணக்கு அலகாகவும் மதிப்புச் சேமிப்பாகவும் வேலை செய்வது. பொருள்கள் வாங்கவும் விற்கவும் பயன் படுவது.

**money lender**– **கடன் கொடுப்பவர்:** வட்டி ஈட்டப்பணத்தைப் பொறுப்பின் பேரில் கொடுப்பவர்.

**monopoly** – **ஏகபோக உரிமை:** முற்றுரிமை. ஒரு சந்தையில் விற்பவர் ஒருவர் மட்டுமே இருத்தல்.

**moratoruim** – **வினை நிறுத்தம்:**
1) கடனைத் தீர்க்கக் கொடுப்பவர் வாங்குபவரிடையே ஏற்படும் ஒப்பந்தம்.

2) ஒரு நாடு அல்லது அரசு மற்றொரு நாடு அல்லது அரசுதனக்குக் கொடுக்க வேண்டிய கடன் தவணைத் தொகையை நிறுத்திவைக்குங் காலம்.

3) அங்காடியில் ஏற்படும் எதிர்பாரா நெருக்கடியினால் எல்லா வாணிபக் கடன்களையும் நிறுத்திவைக்குங்காலம்.

**mortgage** – **அடமானம்:** வீடு அல்லது நிலத்தை ஈடாக வைத்துக் கடன்பெறுதல். சொத்து வேறாகவும் இருக்கலாம்.

**mortgagor** – **அடமானர்:** சொத்தின் பேரில் கடன் வாங்குபவர்.

**mortgagee** – **அடமானி:** சொத்தின் பேரில் கடன் கொடுப்பவர்.

**mortgage debenture** – **அடமானக்கடன் ஆவணம்:** ஒரு நிறுமத்தின் சொத்தின் பேரில் ஈடாக அதற்குக் கடன் கொடுத்தல்.

**motion** – **தீர்மம்:** ஒரு நிறுமக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்காக வைக்கப்படும் முன்மொழிவு. அவை ஒப்புக்கொண்ட பின் முடிவாகும். அதாவது, இது தீர்மானத்திற்கு முந்தியது. தீர்மத்தைத் தொடர்வது தீர்மானம்.

# N

**naked debenture** – **திறந்த கடன் ஆவணம்:** ஈடுகாட்டப்படாத பத்திரம்.

**narration**– **விளக்கக் குறிப்பு:** ஒவ்வொரு குறிப்பேட்டுப் பதிவுக்குக்கீழ், அந்தநடவடிக்கை பற்றிய சிறு விளக்கம் அடைப் புக்குறிப்புகள் எழுதப்படும்.

**narrow money** – **குறுபணம்:** பரிமாற்றுக் கருவியின் வேலையை நேரடியாகச் செய்யக்கூடிய பணவழங்குகையின் ஒரு பகுதி.

**national debt** – **தேசியக்கடன்:** உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் மைய அரசின் கடன்கள், ஒவ்வோராண்டும் வாங்கப்படும் நிகரக் கடன் தேசியக்கடனில் சேர்க்கப்படும்.

**national income** – **தேசிய வருமானம்:** மொத்தத் தேசிய விளைபொருள், நுகர்வு, முதலீடு ஆகிய முதன்மையான பெரும்பொருளியல் மாறிகளுக்குரிய புள்ளிகளை வழங்கும் கணக்குகள்.

**nationalization** – **தேசியமயமாக்கல்:** நாட்டுடமைமையாக்கல். ஒரு நிறுமத்தின் சொத்துகளை நாட்டுக்கு உரிமையாக்குஞ் செயல். இந்தியாவில் பிரதமர் இந்திரா காந்தி காலத்தில் 14 தனியார் வங்கிகள் நாட்டுடமை

யாக்கப்பட்டது சிறந்த எடுத்துக் காட்டு.

**national plan** – **தேசியத் திட்டம்:** தன் பொருளாதாரத் வளர்ச்சிக்குக் குறிப்பட்ட காலத்தில் வகுக்கும் பொருளாதாரத் திட்டம் எ–டு. ஐந்தாண்டுத் திட்டம்.

**near money** – **அண்மைப் பணம்:** உடன் மாற்றக்கூடிய சொத்து எ–டு மாற்றுண்டியல்.

**negotiability** – **செலாவணித் திறன்:** ஒப்பந்தத்திறன். ஓர் ஆவணத்தை ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு மாற்றுந் தன்மையும் அதனால் பெறும் ஆதாயமும்.

**negotiable instrument** – **செலாவணி ஆவணம்:** தடையில்லாமல் ஒப்பந்தம் செய்து நன்மை பெறக்கூடிய பத்திரம் எ–டு. மாற்றுண்டியல்.

**net assets** –**நிகரச் சொத்துகள்;** ஒரு நிறுமத்தின் நடப்புப் பொறுப்புகள் நீங்கலாகவுள்ள சொத்துகள். இதனால் உண்டாகும் தொகுபயன் புள்ளி நிறுமத்தின் முதலுக்குச் சமமாக இருக்கும்.

**net asset value** – **நிகரச் சொத்து மதிப்பு:** எல்லா முதலினப் பொறுப்புகளும் மற்றப் பொறுப்புகளும் நீங்கலாகவுள்ள ஒரு நிறுமத்தின் மொத்த இருப்புகள் முதலினப் பொறுப்புகளில் அடங்குபவை. கடன் பத்திரங்கள், கடன் இருப்புகள், முன்னுரிமைப் பங்குகள். ஒரு வங்கிக்குரிய நிகரச் சொத்து மதிப்பு என்பது அம்மதிப்பை மொத்தப் பங்குகளால் வகுத்து வரும் தொகையாகும்.

**net book value** – **நிகர ஏட்டு மதிப்பு:** ஒரு நிறுமத்தின் ஏடுகளில் தோன்றும் சொத்தின் மதிப்பு. அதாவது, இறுதி ஐந் தொகையின் பொழுது, இதிலிருந்து தேய்மானம், வாங்கியதிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

**net cash price** – **நிகரப்பண விலை:** பணவிலை – முன் தொகை = நிகரப்பணவிலை.

**net current assets** – **நிகர நடப்புச் சொத்துகள்:** நடப்புப் பொறுப்புகள் நீங்கிய நடப்புச் சொத்துகள்.

**net domestic product** – **நிகர மனையக விளை பொருள்:** முதலின நுகர்வு நீங்கலான (தேய்மானம்) ஒரு நாட்டின் மொத்த மனையக விளை பொருள்.

**net hire purchase price**– **நிகரத் தவணைமுறை விலை:** தவணைமுறை விலையிலிருந்து கீழ்க் காண்பனவற்றைக் கழித்தால் கிடைப்பது நிகரத் தவணை முறை விலை.

1) பொருளை எடுத்துச் செல்வதற்குச் செலுத்தப்பட்ட பணம்.

II) செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் அல்லது இதரக் கட்டணங்கள். III) காப்பீடு செய்தல்.

**net income** – **நிகர வருமானம்:** 1) சம்பாதிப்பதில் உள்ளடங்கிய செலவுகளை நீக்கிய பின் உள்ள ஒருவர் அல்லது ஒரு நிறுமத்தின் வருமானம் 2) வரி நீங்கிய மொத்த வருமானம்.

**net investment** – **நிகரமுதலீடு:** ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதாரத்திலுள்ள முதலினச் சரக்குகளின் இருப்போடு சேர்க்கப்படுபவை. இவை முதலின நுகர்வு (தேய்மானம்) நீங்கியவை.

**net national product**– **நிகரத் தேசிய விளைபொருள்:** ஒரு சமயத்தில் முதலின நுகர்வு (தேய்மானம்) நீங்கிய மொத்தத் தேசிய விளைபொருள். இது தேசிய வருமானத்துக்குச் சமமானது. அதாவது, சரக்குகளுக்கும் பணிகளுக்கும் செலவு செய்வதற்குரிய பணத்தின் அளவு.

**net price** – **நிகர விலை:** கழிவுகள் எல்லாம் நீங்கிய பின் வாங்குபவர் சரக்குகளுக்கு அளிக்கும் விலை.

**net profit** – **நிகர இலாபம்:** செலவுகள் எல்லாம் நீங்கியபின் இருக்கும் ஆதாயம். இச்செலவுகளில் வரிகளும் அடங்கும்.

**net profit ratio** – **நிகர இலாப வீதம்:** ஒரு நிறுமத்தின் மொத்த விற்பனைக்கும் நிகர இலாபத்திற்குமுள்ள வீதம். நிறுமத்தின் இலாபம் ஈட்டலைப் பகுக்க, இது உதவுவது. விற்பனை எந்த அளவுக்கு இலாபம் உள்ளதாக அமைந்தது என்பதையும் இது காட்டுவது.

**net receipts** – **நிகர வரவுகள்:** செலவுகளைக் கழித்தபின், குறிப்பிட்ட காலத்தில் ஒரு தொழிலில் பெறப்படும் பணத்தின் மொத்த அளவு ஒ. gross receipts.

**net weight** – **நிகர எடை:** பொருள்களின் எடை மட்டும். பா. gross weight.

**net worth**– **நிகர மதிப்பு:** பொறுப்புகள் எல்லாம் நீங்கிய ஒரு நிறுவனத்தின் மதிப்பு.

**net yield**– **நிகர விளைபயன்:** வரிநீங்கிய பின் ஓர் ஈட்டின் பயன் பா. gross yield.

**new issue**– **புது வெளியீடு:** முதல் தடவையாகப் பங்குச் சந்தையில் பங்கு வெளியிடப்படுதல்.

**nominal accounts** – **பெயரளவுக் கணக்குள்:** வேறுபெயர் கற்பனைக் கணக்குகள். ஊதியம், வாடகை, விளம்பரம், மின்

கட்டணம், கழிவு, வட்டி முதலிய வை தொடர்பான கணக்குகள்.

**nominal ledger** – **பெயரளவுப் பேரேடு:** பெயரளவுக் கணக்கு கள் உள்ளது.

**nominal price** – **பெயரளவு விலை:** வாணிப நடவடிக்கைக் காகக் குறிப்பிடப்படும் விலை.

**nomination** – **பெயர் குறிப்பீடு:** ஆதாயம் அடையப் பெயரிடப் படுபவர்.

**nominee** – **பெயராளர்:** மற் றொருவரால் பெயர் குறிப் பிடப்படுபவர்.

**nominator** – **பெயராளி:** பெயர் குறிப்பவர்.

**non-cumulative preference share** – குவியா முன் னுரிமைப் பங்கு.

**normal economic profit** – **இயல்பான பொருளியல் ஆதாயம்:** ஒரு குறிப்பிட்ட தொழிலில் முனைவோரை வைத்திருக்கக் கூடிய கொள்கை அளவு ஆதாயம்.

**normal price** – **இயல்பான விலை:** வழங்கல், தேவை ஆகிய இரண்டிற்குமிடையே சம நிலை இருக்கும் பொழுது, ஒரு சரக்கு அல்லது பணியின் கொள்கை விலை.

**normative economics** – **நெறிசார் பொருளியல்:** என்ன செய்யப்பட வேண்டும் என் பதைப் பற்றிய தீர்ப்புகளைப் பகுத்துப் பார்க்கும் பொருளி யல்; கொள்கை மட்டும் கூறுவ தன்று எ–டு. கெயின்சின் பொருளியல்.

**notary public** – **சான்றலுவலர்:** வழக்கமாக வழக்கறிஞர் ஆவணங்களைச் சான் றொப்பமிட உரிமையுள்ளவர்.

**noting** – **மறுப்புக்குறிப்பு:** மாற் றுண்டியல் மறுக்கப்படும் பொழுது, மேற்கொள்ளப்படும் முறை.

# O

**object clause** – **நோக்கப் பிரிவு:** அமைப்பு விதிசார்ந்தது.

**objectivity** – **புறத்திண்மை:** கணக்கியல் பயிற்சியில் தனிப் பட்ட முறையில் சரிபார்க்கக் கூடிய திறன்.

**obsolescence** – **வழக்கொழி தல்:** 1) தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகப் பயனில்லாது போகும் எந்திரத்திற்குக் கணக் கிடுந் தேய்மானம்.

2) ஓர் எந்திரத்தை வயது அடிப் படையில் தேய்மானத்திற்கு உட் படுத்தல். பா. depreciation.

**offer** – **விலைக்குறிப்பீடு:** விற் பவர் தன் பொருளுக்கூறும் விலை.

**offer by prospectus**– **வாய்ப் பறிக்கைக் குறிப்பீடு:** இவ்வறிக்

கைமூலம் பொது மக்களுக்குக் கடன் பத்திரங்கள் அல்லது புதிய பங்குத்தொகைகள் வழங்கல்.

**offer document** – **குறிப்பீட்டு ஆவணம்:** ஆவணம் மூலம் செய்யப்படுவது. ஒரு நிறுமப் பங்குதாரர்களுக்கு எடுபேரம் பற்றிய விபரங்கள் அனுப்பப் படுவது.

**offer for sale** – **விற்பனைக் குறிப்பீடு:** இடைத்தரகர்மூலம் ஒரு நிறுமத்தின் பங்கை வாங்கப் பொது மக்களுக்கு அழைப்பு விடுதல்.

**offer price** – **குறிப்பீட்டு விலை:** சந்தையாளர் ஓர் ஈட்டை விற்பனைக்குக் கூறும் விலை.

**offer to purchase** – **வாங்கு குறிப்பீடு:** பா. taken-over bid.

**official list** – **அலுவலகப்பட்டியல்:** வணிகத்திற்குரிய எல்லா ஈடுகளையுங்கொண்ட பட்டி.

**official receiver** – **பொறுப்பு அலுவலர்:** நிறுமக்கலைப்புத் தொடர்பாக உள்ள அதிகாரி.

**official rate** – **அலுவலக வீதம்:** அரசு அளிக்கும் செலாவணிப் பரிமாற்று வீதம்.,

**oligopoly** – **சிறுமுற்றுரிமை;** ஓர் அங்காடியில் சில விற்பனையாளர்களும் பல வாங்குபவர்களும் இருக்கும் நிலை.

**on demand** – **கேட்கும்பொழுது:** அளித்தவுடன் கொடுபடுவது. மாற்றுண்டியலிலும் பணத்தாளிலும் எழுதப்பட்டிருப்பது.

**open cheque** – **திறந்த காசோலை:** கீறாக் காசோலை.

**open credit** – **திறந்த கடன்:** நம்பகமான வாடிக்கையாளருக்கு அளிக்கப்படும் வரம்பற்ற கடன்.

**opening entries** – **தொடக்கப் பதிவுகள்:** அடுத்த ஆண்டு நடவடிக்கைகளைத் தொடங்குகையில் செய்யப்படுபவை. சொத்துகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியாகப் பற்றுவைக்கப்படும். அதேபோல் பொறுப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக வரவு வைக்கப்படும்.

**opening prices** – **தொடக்க விலைகள்:** ஓர் ஈடு அல்லது ஏனையவற்றின் பேரில் வணிகம் தொடங்கும் பொழுது கூறப்படும் குறியீட்டு விலையும் பேரவிலையும்.

**operating costs** – **நடப்புச் செலவுகள்** பா. overhead costs.

**operating profit**– **நடப்பு இலாபம்:** தன் முதன்மையான வணிகச் செயலின் விளைவாக ஒரு நிறுமம் ஈட்டும் இலாபம். இதற்கு வணிக இலாபத்திலிருந்து வணிக நடப்புச் செலவுகள் கழிக்கப்படும் அல்லது வணிக இழப்போடு நடப்புச் செலவுகள் சேர்க்கப் படும்.

**opinion poll** – **கருத்து வாக் கெடுப்பு:** அங்காடி பிடிக்கும் ஆராய்ச்சி நுணுக்கங்களைக் கொண்டது. சிறப்பாக, இது அரசியல் கருத்தோடு தொடர் புடையது. இது இருவகை.

1) **பொதுக் கருத்து வாக் கெடுப்பு:** இது செய்தித்தாள், தொலைக் காட்சி முதலிய மக்கள் ஊடகங்களால் நடத்தப் படுவது. இதில் வாசகர்களும் பார்ப்பவர்களும் செய்திகள் பெறுவர்.

2) **தனிக்கருத்து வாக்கெடுப்பு:** இதை அரசியல் கட்சிகள் கொள்கை பரப்பலுக்காகவும் கட்சி வளர்ச்சிக்காவும் பயன் படுத்தும்.

**option** – **விருப்ப உரிமை:** ஒருவர் ஒரு பண்டம், செலா வணி முதலியவற்றைக் குறிப் பிட்ட அளவு வாங்கவும் விற்கவும் உள்ள உரிமை.

**option, call** – **வாங்கு விருப்ப உரிமை:** வாங்குவதற்குரிய விருப்ப உரிமை. விலை உயரும் என்னும் நோக்கில் வாங்கப்படுவது.

**option dealer**– **விருப்ப உரிமை ஈடுநர்:** பங்குச் சந்தையிலோ பண்டச்சந்தையிலோ வணிக விருப்ப உரிமைகளையோ விருப்ப உரிமைகளையோ வாங்குபவர் அல்லது விற்பவர். ஈடுநர் – ஈடுபடுபவர். வாங்கு விருப்ப உரிமையர் எனச் சுருக்கலாம்.

**option money**– **விருப்ப உரிமைப் பணம்:** ஒரு விருப்ப உரிமைக்குப் பெறப்படும் தொகை. வாங்கு விருப்ப உரிமைச் செலவு **வாங்கு பண** மாகும். விற்கும் விருப்ப உரி மைச் செலவு **விற்கும் பண** மாகும்.

**option, put** – **விற்கும் விருப்ப உரிமை:** விற்பதற்குரிய உரி மை.

**option to -double** – **இரட்டிக்கும் விருப்ப உரிமை;** ஒரு விற் பனையாளர் தம் ஈடுகளை இரட்டித்த அளவில் விற்கும் உரி மை.

**option to purchase** – **வாங்கு விருப்ப உரிமை:** குறைந்த விலையில் சில சூழல்களால் சில நிறுமங்களில் பங்குகளை வாங்கப் பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமை.

**option, traded** – **வணிக விருப்ப உரிமைகள்:** பங்குச் சந்தையில் வாங்கப்படுபவை, விற்கப்படுபவை.

**order cheque** – **ஆணைக் காசோலை** பா. cheque.

**order of business**– **நிகழ்ச்சி நிரல் வரிசை:** ஒரு தொழில் நட வடிக்கைக் கூட்ட நிகழ்ச்சி களின் வரிசை எ–டு. வரா

மைக்கு வருத்தம் தெரிவித்தல் முந்திய கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பைப் படித்தலும் கையெழுத்திடலும், அறிக்கை படித்தல் முதலியவை.

**ordinary resolution** – **பொதுத் தீர்மானம்:** பா. resolution.

**ordinary shares** – **பொதுப் பங்குகள்:** ஒரு நிறுமத்தின் பங்கு முதலின் குறிப்பிட்ட அலகு. நாளாவட்டத்தில் இவை முதலீட்டு வளர்ச்சி காரணமாக அதிக ஆதாயம் தருபவை.

**organizational buying** – **நிறுவன வாங்குகை:** ஒரு நிறுவனம் அடையாளங்கண்டும் மதிப்பிட்டுத் தேர்ந்தெடுத்தும் ஒரு விலைபொருளை வாங்குதல்.

**organized market** – **முறைசார் சந்தை:** ஒழுங்காக அமைந்த அங்காடி. இங்கு வாங்குபவரும் விற்பவரும் கூடி விதிமுறைகளுக்கும் நடைமுறைகளுக்கும் உட்பட்டு வணிகம் செய்தல். எ–டு. பங்குச் சந்தை, பண்டச் சந்தை.

**origin** – **தோற்றுவாய்:** ஒரு சரக்கு உண்டாகி வரும் நாடு.

**original entry book** – **மூலப் பதிவேடு:** பா. book of prime entry.

**original goods** **மூலச்சரக்குகள்:** இயற்கை விளைபொருள்கள், உற்பத்திக் காரணிகள் இல்லாதவரை அவற்றிற்குப் பொருளாதார மதிப்பில்லை எ–டு. ஆறு, காட்டுக் கனி.

**outlay** – **செலவீடு:** ஒரு சரக்கு அல்லது பணி குறித்துச் செய்யப்படும் செலவினம். எ–டு. கச்சாப்பொருள் செலவீடு என்பது கச்சாப் பொருள்களின்மீது குறிப்பிட்ட காலத்தில் செலவிடப்படும் பணம். கணக்குப் பதிவியலில் இது மொத்த ஆக்கச் செலவு ஆகும். ஆனால், பொருளியல் வாய்ப்புச் செலவிற்காக உரிய உயர்வு சேர்க்கப்படும்.

**outlay tax** – **செலவீட்டுவரி:** பா. expenditure tax.

**output** – **வெளிப்பாடு:** 1) உற்பத்தி 2) செய்தி அனுப்பும் முறை.

**outside share holders** – **புறப்பங்குதாரர்கள்:** துணை நிறுமத்தில் உள்ளவர்கள்.

**overbought** – **மேல்வாங்கல்:** தேவைக்கு மேல் சரக்குகளைக் கொள்முதல் செய்தல்.

**overbought market** – **மேல் வாங்கு சந்தை:** மீ வாங்கலினால் விரைவாக உயரும் அங்காடி. இது நிலையில்லாதது.

**overcapitalization** – **மேல் முதலீடு செய்தல்:** தன் தேவைகளுக்காக ஒரு நிறுமம் அதிக

முதலைக் கொண்டிருக்கும் நிலை.

**overdraft** - **மேற்கடன், மேற் பற்று:** வங்கியில் தவணையில் திருப்பிசெலுத்தும் வகையில் மேம்பாட்டுக்காகக் குறிப்பிட்ட எல்லைக்குள் வாங்கும் கடன் எ–டு. ரூ. 50,000, 1,00,000.

**overhead costs** – **மேற் செலவுகள்:** மறைமுகச் செலவு நடப்புச்செலவு. சரக்குகளை உற்பத்தி செய்ய ஆகும் மறை முகச் செலவுகள். அதாவது, சரக்குகளை உற்பத்தி செய்யப் பொருள்கள், உழைப்பு ஆகிய வற்றிற்கு மேலாகச் செய்யப் படும் செலவுகள். இவை இரு வகை.

1) **நிலைச்செலவுகள்:** மாறாத வை எ–டு. தொழிற்சாலை வாட கை, எந்திரத் தேய்மானம்.

2) **மாறும் செலவுகள்:** உற்பத்திக்குத் தகுந்தவாறு மாறுபவை. எ–டு. ஆற்றல், எரிபொருள்.

**overinvestment** – **மேல் முதலீடு:** ஆதாயத்தை எதிர்பார்த்து, அதிக முதலீடு செய்தல்.

**oversold** – **மேல் விற்கப்பட்டது:** உற்பத்திக்குமேல் வாடிக்கை யாளரால் வாங்கப்பட்டது.

**oversold market** – **மேல் விற்கப் பட்ட சந்தை:** மீ விற்பனை செய்த சந்தை.

**over subscription**– **மேல் பண அளிப்பு:** புதிய பங்குகள் வெளியிடுவதற்குரிய விண் ணப்பங்கள் எதிர்பார்த்த அள வுக்கு மேல் வருதல். இந்நிலை யில் சில விதிகளுக்கு உட்பட்டு, அவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு நேர்மாறா னது கீழ்ப்பண அளிப்பு. இது நடைபெறுவது அரிது.

**overtrading** – **மேல் வணிகம்:**; தன் முதல் வழங்கலுக்கு மேலும் ஒரு நிறுமம் வணிகம் செய்தல்.

# P

**package deal** – **கூட்டு ஒப்பந் தம்:** எல்லாப் பகுதிகளையும் ஒப்புக் கொள்ளக்கூடிய உடன் பாடு.

**packages** – **கட்டுமங்கள்:** சிப் பங்கள், கொள்கலன்கள், நிறு மங்கள் தங்கள் சரக்குகளை அனுப்பும் பெட்டி, குவளை முதலியவை.

**packaging** 1) **கட்டுமம்:** வினை பொருள்களுக்குரிய உறைகள்.

2) **கட்டுமம் செய்தல்:** கொள் கலன்களை வடிவமைத்தல்.

3) **கட்டும் வினை:** கட்டுமம் செய்பவரின் பல நடவடிக்கை களின் தொகுதி.

**packing** – **கட்டுதல்.**

**packing expenses** – **கட்டுதல் செலவுகள்.**

**paid-up capital** – **செலுத்து முதல்:** தங்கள் பங்குகளுக்காக ஒரு நிறுமத்திற்குப் பங்குதாரர் கள் செலுத்தும் மொத்தத் தொகை, பா.share capital.

**paid-up share** – **செலுத்துபங் குத் தொகை:** ஒரு பங்குக்குரிய முழுத்தொகையையும் செலுத் துதல், பா. share capital.

**paper money**– **தாள் பணம்:** 1) சட்டப் படியான செலா வணிப் பணம். வாங்கித்தாள் பணம் 2) காசோலை, வரை வோலை, மாற்றுண்டியல்.

**paper profit** – **கணக்கேட்டு இலா பம்:** ஒரு நிறுவனத்தின் கணக் கேடு காட்டும் ஆதாயம். அடை யக்கூடியது அன்று.

**parent company**– **தாய் நிறுமம்:** பா. holding company.

**par of exchange** – **பரிமாற்றுச் சமம்:** இரு செலாவணிகளுக் கிடையே உள்ள கொள்கை நிலைப் பரிமாற்று வீதம்.

**partly paid shares** – **பகுதி செலுத்தப்பட்ட பங்குகள்:** முழுப் பெயரளவு மதிப்பும் செலுத்தப் படாதவை.

**partner** – **கூட்டாளி:** ஒரு கூட் டாண்மையின் உறுப்பினர்.

**partners, general** – **பொதுக் கூட்டாளிகள்:** கடன் முழுமைக் கும் பொறுப்பானவர்கள்.

**partners, limited** – **வரையறை யுள்ள கூட்டாளிகள்:** முதலீட்டு அளவுக்கு ஏற்றவாறு கடனுக் குப் பொறுப்புள்ளவர்கள்.

**partner, nominal** – **பெயரளவுக் கூட்டாளி:** கூட்டாண்மை நன் மைக்காக மட்டும் பயன்படுப வர். ஆதாயத்தில் பங்கில்லாத வர். சட்டப்படியானவருமல்லர்.

**partnership**–**கூட்டாண்மை:** ஒரு தொழிலை இரண்டிற்கு மேற் பட்டவர் சேர்ந்து நடத்துதல்.

**partnership agreement**– **கூட் டாளி உடன்பாடு:** கூட்டாளி ஒப் பந்தம். ஒரு கூட்டாண்மை எவ் வாறு நடைபெற வேண்டும் என்னும் வரையறைகளைக் கொண்டது. ஆதாயத்தைப் பங்குபிரித்தல், முதலை கூட் டாண்மையிலிருந்து எடுத்தல் முதலியவை வரையறைகள்.

**partnership-at-will**– **எண்ணப் படியான கூட்டாண்மை:** குறிப் பிட்ட நிபந்தனை இல்லாதது. முறையாக அறிவித்து விட்டுத் தன் பங்கைக் கூட்டாளி எப் பொழுது வேண்டுமானாலும் பெற்றுக்கொள்வது.

**partnership, fundamentals of** – **கூட்டாண்மையின் அடிப் படைகள்:** 1) கூட்டாளிகள் செய்து கொள்ளும் ஒப்பந்தத் தின் மூலம் கூட்டாண்மை உண்டாவது.

2) இதன் நோக்கம் தொழில் நடத்துவதே.

3) ஆதாயம் கூட்டாளிகளுக் கிடையே பகிர்ந்து கொள்ளப் படும்.

4) ஒவ்வொரு கூட்டாளியும் ஏனைய கூட்டாளிகளின் முக வராவர்.

5) ஒவ்வொரு கூட்டாளியும் ஏனைய கூட்டாளிகளின் முதல் வருமாவர்.

**par value, face value, nominal value** – சமமதிப்பு: ஓர் ஈடு அல்லது பங்கின் பெயரளவுவிலை. ஓர் ஈட்டின் சந்தை மதிப்பு பெயரளவு விலைக்கு விஞ்சுமானால், அது **மேல் சம மதிப்பு** என்றும், குறையுமானால் **கீழ்ச் சமமதிப்பு** என்றும் பெயர் பெறும்.

**partial undertaking** – பகுதி ஒப்புறுதி: ஒவ்வோர் ஒப்புறுதியாளர் மூலம் வந்த விண்ணப் பங்கள் குறிப்பிடப்பட்டு எஞ்சியுள்ள பங்குகள் ஒப்புறுதியாளர்களின் ஒப்புறுதிப் பொறுப்பின்படி ஒப்புக்கொள்ளப்படுதல்.

**participating preference shares** – பங்குகொள் முன்னுரிமைப்பங்குகள்: பங்கு ஈவுக் கூடுதல் உரிமைகள் உள்ளவை. அதாவது, இருதடைவைகள் இலாப ஈவு கொண்டவை.

**patent**– உரிமை முத்திரை: புனவுரிமை. ஒரு புனைவை உருவாக்கி அதைப் பயன்படுத்த அளிக்கப்படும் தனி உரிமை.

**patentee** – உரிமை முத்திரையர்: உரிமை முத்திரை வழங்கப்படுபவர்.

**patent office**– உரிமை முத்திரை அலுவலகம்: உரிமை முத்திரை வழங்கப்படும் இடம்:

**pawn**– அடகு: அடகுப்பொருள்.

**pawn broker**– அடகாளர்: அடகின் பேரில் கடன்கொடுப்பவர். எ–டு. வட்டிக் கடைக்காரர்.

**payable to bearer**– கொணர்பவருக்குக் கொடுக்க: மாற்றுண்டியலில் எழுதப்படுவது. இதில் குறிப்பிட்ட எந்தப் பெயரும் இராது. இதை வைத்திருப்பவர் தன் பெயரை எழுதிப்பணம் பெறலாம்.

**payable to order**– ஆணைப்படி கொடுக்க: மாற்றுண்டியலில் எழுதப்படுவது. இதில் பெறுபவர் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். இதில் வரையறைகளோ மேலொப்பங்களோ இரா. மேலொப்பம் செய்யப்படுவர் பணம் பெறலாம்.

**payee** – பெறுநர்: தொகை பெறும் ஆள் அல்லது அமைப்பு.

**paying banker**– கொடுக்கும் வங்கியர்: காசோலை அல்லது

மாற்றுண்டியலுக்குப் பணம் வழங்கும் வங்கி நிறுவனத்தார்.

**payment in advance**– **முன் கூட்டிய கொடுபாடு:** சரக்குகள் வருவதற்கு முன்னரே பணங் கொடுத்தல்.

**payment in due course**– **உரிய காலக்கொடுபாடு:** மாற்றுண்டியல் முதிர்ச்சியடையும் பொழுது பணம் கொடுக்கப்படுதல்.

**payment in kind** – **பொருள் கொடுபாடு.** பணத்திற்குப்பதில் சரக்குகளைக் கொடுத்தல்.

**payment on account**– **கணக்கு வழிக் கொடுபாடு:** சரக்குகள் விலைப் பட்டியல் இடுவதற்கு முன், அவற்றிற்குப் பணம் கொடுத்தல்.

**payment terms**– **கொடுபாட்டு நிபந்தனைகள்:** வாங்குபவர் சரக்குகளை விற்பவருக்குப் பணம் கொடுக்கும் முறை.

**penalty**– **தண்டம்:** ஓர் உடன்பாடு மீறப்படும் பொழுது, அதற்காகக் கொடுக்கப்படும் தொகை.

**pension** – **ஓய்வூதியம்:** பணி ஓய்விற்குப் பின் திங்கள் தோறும் தம் பணி நிலைக்கு ஏற்றவாறு ஒருவர் பெறும் தொகை. பா.provident fund.

**per contra** – **எதிர்ப்பதிவு:** ஒரு கணக்கின் எதிர்ப்பக்கத்தில் குறிப்பிட்ட தொகை பதிவு செய்யப்படுதல். ஒரே பக்கத்தின் இரு எதிர்ப்பக்கங்களில் பற்று வரவுப் பதிவுகள் ஆகிய இரண்டும் இருக்கும் பொழுது பயன்படுவது.

**peril** – **இடர்:** பொருளாதார இழப்பு உண்டாக்கும் நிகழ்ச்சி. இதற்குக் காப்புறுதி பயனளிப்பது.

**period bill**– **தவணைக்கால உண்டியல்;** குறிப்பிட்ட நாளில் கொடுக்கப்படக் கூடிய மாற்றுண்டியல்.

**period of grace** – **கண்ணோட்ட காலம்:** கெடுகாலம் கடந்தபின் வழங்கப்படுங்காலம். மாற்றுண்டியல், காப்புறுதி முதலியவற்றிற்கு அளிக்கப்படுவது.

**perpetual debenture**– **நிலையான கடன் பத்திரங்கள்:** ஒரு பொழுதும் மீட்கப்பட முடியாதவை.

**perpetual inventory**– **நிலையான பொருள்பட்டியல்:** இருப்பிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் தொடர்ச்சியாக விவரம் எடுக்கும் பட்டியல். ஒரு பக்கம் வரவும் மற்றொரு பக்கம் செலவும் காட்டும்.

**perpetual succession**– **நிலை வழியுரிமை:** ஒரு நிறுமம் சட்டப்படி கலைக்கப்படும் வரை நிலைத்திருத்தல்.

**personal accounts**– **ஆள்சார் கணக்கு:** பேரேட்டில் தனியாள்

அல்லது நிறுமத்தின் பேரி லுள்ள கணக்கு. இது வரவேண் டியதும் கொடுபட வேண்டியது மான இனமாகும். விற்பனைப் பேரேட்டிலும் கொள்முதல் பேரேட்டிலும் காணப்படுவது. இதன் வகைகள்:

1) **தனியாள் கணக்கு:** அன் பழகன், மதியழகன்.

2) **நிறுமக்கணக்கு:** பேரி அண்ட் கோ.

3) **வங்கிக் கணக்கு:** இந்தியன் ஓவர்சீஸ் வங்கி.

4) **கூட்டுறவு வங்கிக் கணக்கு:** மையக்கூட்டுறவு வங்கி.

**personal allowances**– **தனிப் படிகள்:** தனிவருமானங்கள். இவை வரிவிலக்கிற்குரியவை.

**personal assistant**– **நேர்முக உதவியாளர்:** மேலாளர், இயக் குநர் முதலியோருக்கு உதவி யாக இருப்பவர்.

**personal loan**– **தனிக்கடன்:** மிதி வண்டி, தொலைக்காட்சி பெட்டி முதலியவை வாங்க வங்கி தனியாருக்குக் கொடுக் கும் கடன். கடன் தொகை திரும் பத் தவணைகளில் செலுத்தப் படுவது.

**personal property**– **தனிச் சொத்து:** சொந்தச் சொத்து. பணம். பங்குகள்.

**personnel management**– **ஊழியர் மேலாண்மை;** ஒரு நிறுமத்தில் வேலை பார்ப்பவர் களை அவர்கள் வேலை தொடர் பாக மேலாண்மை செய்தல்.

**petty cash book**– **சில்லறைப் பண ஏடு.** சில்லறைச் செல வினங்கள் பதியப்படும் ஏடு எ–டு. அஞ்சல் செலவுகள், சிற்றுண்டிச் செலவு.

**petty expenses** – **சில்லறைச் செலவுகள்.** பா. petty cash book.

**physical capital**– **மெய்யீட்டு முதல்:** கண்ணால் பார்க்கக் கூடி யது. எ–டு. நிலம், கட்டிடம், எந் திரம். பொருள்களையும் பணி களையம் உண்டாக்கப்பயன் படுவது. பொருள் முதலோடும் ஒப்பிடப்படுவது. எ–டு. பணம், மனித ஆற்றல்.

**physicals**– **மெய்யீடுகள்:** பா. actuals.

**pilot production** – **முன்னோடி உற்பத்தி:** ஒரு புதிய பொருளை சிறு அளவில் உற்பத்தி செய் தல். இதை முன்னோடி எந்திரம் செய்யும்.

**pilot study** – **முன்னோடி ஆய்வு:** சிறு அளவில் செய்யப் படும் அங்காடி ஆய்வு. சிக்கல் களைத் தவிர்த்து நிறைவை எட்டச் செய்யப்படுவது.

**plant** – **நிலைப்பகம்:** 1) ஒரு நிறுவனத்தின் இடம். இங்கு அதன் உற்பத்தி நடைபெறுவது.

2) தன் செயல்களை நிறை வேற்ற, ஒரு தொழிலகம் பயன்

படுத்தும் சொத்துகள் எ—டு. ஆலை, எந்திரம்.

**pledge** – **அடகு:** கடன் வாங்குபவர் கடன் கொடுப்பவருக்கு ஈடாகக் கடன் தீரும் வரையில் கொடுக்கும் பொருள். எ—டு. தங்க நகை.

**pledgee** – **கடன் கொடுநர்:** அடகின் பேரில் கடன் கொடுப்பவர்.

**pledgor** – **கடன் பெறுநர்:** அடகை வைத்துக் கடன் வாங்குபவர்.

**policy** – 1) **கொள்கை** 2) **முறிமம்:** முறி, பத்திரம்.

**portfolio** – 1) **உடைமைப்பட்டியல்:** ஒரு முதலீட்டாளரின் ஈட்டு உடைமைகளின் பட்டியல் 2) **துறை:** கல்வித் துறை.

**portfolio management** – **உடைமைப் பட்டியல் மேலாண்மை:** முதல், வருமான வளர்ச்சி குறித்த மேலாண்மை. சில முதலீடுகள் நல்ல வருவாய் வாய்ப்புகளையும் ஏனையவை நல்ல முதல் வளர்ச்சி வாய்ப்புகளையும் அளிப்பவை.

**portmark** – **துறைமுகக் குறி:** ஏற்றுமதிக்குரிய பொருள்களின் மீது இடப்படும் சின்னங்கள். அவை அடைய வேண்டிய இடம் குறிக்கப்படும்.

**possession** – **உடைமை:** நிலம், வீடு முதலியவை.

**post acquisition** **கையகப்படுத்தலுக்குபின்:** ஒரு நிறுவனத்தைக் கட்டுப் பாட்டுக்குக் கொண்டு வந்ததிற்குப் பின்.

**postcode** – **அஞ்சல் குறியீட்டெண்:** கடிதங்களில் குறிக்கப்படும் அஞ்சல் பட்டுவாடா எண். எ-டு. தஞ்சாவூர் 613 009.

**post date** – **பின் நாளிடல்:** ஓர் ஆவணத்தை ஒப்பமிட்ட நாளுக்குப்பின்னதாகத் தேதியிடல். அந்நாளிலிருந்து அது நடைமுறைக்கு வரும் எ—டு. பின் நாளிடப்பட்ட காசோலை.

**posting** – **எடுத்தெழுதுதல்:** குறிப்பேட்டிலும் ஏனைய துணை ஏடுகளிலும் பதிவாகியுள்ள நடவடிக்கைகள். உரிய தலைப்புகளில் பேரேட்டில் கணக்குகளாகப் பதியப்படுதல்.

**poverty trap** – **ஏழ்மை வலை:** இது சம்பாதிப்பை ஊக்குவிப்பதன்று.

**power of attorny** – **ஆணை உரிமை வழங்கல்:** ஒருவர் மற்றொருவருக்காகச் செயல்பட உரிமை வழங்கும் சட்டப்படியான பத்திரம்.

**preference share** – **முன்னுரிமைப் பங்கு:** குறிப்பிட்ட வட்டி மட்டும் வழங்கும் ஒரு நிறுவனப்பங்குத் தொகை. கடன் ஆவணத்திற்கும் பொதுப்பங்கிற்கும் இடைப்பட்டது. நிறுமம் கலையும் பொழுது, கடைசியாகக் கொடுக்கப்படுவது.

இது மூன்று வகைப்படும்: 1) குவி முன்னுரிமைப் பங்கு: பங்காதயம் செலுத்தப் பெறாத பங்கு.

2) குவியா முன்னுரிமைப் பங்கு: ஒவ்வோராண்டும் போது மான ஆதாயம் கிடைத்தாலே, இதற்குப் பங்காதாயம் கிடைக் கும்.

3) மீள் முன்னுரிமைப் பங்கு: தன் வாழ்நாளில் ஒரு நிறுமம் திருப்பித் தருவது.

**preliminary expenses** – **தொடக்கச் செலவுகள்:** ஒரு நிறு மத்தைத் தோற்றுவிக்க ஆகும் செலவினங்கள்.

**premium** – **முனைமம்:** 1) காப்பு முறித்தொகை 2) ஒருபங்கின் பெயரளவு மதிப்பிற்குக் கூடுத லாகவுள்ள தொகை. 3) ஒரு பங்கின் வழங்கு விலைக்குக் கூடுதலான தொகை.

**premium bonus** – **முனைம ஊக்கத் தொகை:** விளைவின் அடிப்படையில் தொழிலாளர் களுக்கு வழங்கும் தொகை.

• **premium method good will** – **முனைம முறை நற்பெயர்:** நற் பெயரில் ஒரு வகை.

**price** – **விலை:** ஒரு பொருள் அல்லது பணிக்காக அளிக்கப் படும் தொகை. பணத்தில் குறிப் பிடப்படுவது.

**primary market** – **முதல் நிலைச் சந்தை:** ஈடுகள் முதல் தடவையாக விற்கப்படும் சந்தை.

**primary production** – **முதல் நிலை உற்பத்தி.** பா. production.

**prime costs** – **முதன்மைச் செல வுகள்:** சரக்குகளை உண்டாக்கு வதற்குரிய நேரடிச் செலவுகள்.

**prime entry books** – **முதன் மைப் பதிவு ஏடுகள்:** ப.ர. book of prime entry .

**principal** – 1) **முதல்வர்:** 2) **அசல்:** வட்டி வரக்கூடிய பணத் தொகை.

**private bank** – **தனியார் வங்கி:** ஓர் அட்டவணை வங்கி எ-டு. யூனியன் வங்கி, பெடரல் வங்கி.

**private limited company** – **தனியார் வரையறை நிறுமம்:** பொது மக்கள் வரையறை நிறு மம் சாராதது. இதுதன் பங்கு களைப் பொது மக்களுக்கு விற்க இயலாது.

**private sector** – **தனியார் துறை:** அரசு கட்டுப்பாடு இல் லாதது. தனியார் சேர்ந்து நடத் துவது. பெரும்பாலும் தொழில் நிறுவனமாக இருப்பது. டாடா நிறுமம். ஒ. public sector,

**privatization** – **தனியார் வயமாதல்:** பொதுத் துறை நிறு மத்தைப் பொருளாதார

காரணங்களுக்காகத் தனியார் நிறுமத்திற்கு விற்றல்.

**produce, product** – விளை பொருள்: உற்பத்தியினால் உண்டாவது: நெல், கரும்பு மிதிவண்டி.

**production** – உற்பத்தி: உட் பலன் வெளிப்பலனாக மாறும் முறை. வேளாண்மை முதல் தொழிற்சாலை வரை உற்பத்தி அமைவது. உழைப்பு, முதல், நிலம், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் சேர்க்கையே உட்பலன்கள் (உட்பாடுகள்) இவை உற்பத்திக் காரணிகள்.

முதல் நிலை உற்பத்தி, இரண் டாம் நிலை உற்பத்தி, மூன்றாம் நிலை உற்பத்தி என இது மூவ கை.

**profit** – இலாபம்: ஆதாயம். விற்ற விலையில் வாங்கிய விலையைக் கழிக்க வருவது.

**profit and loss account** – இலாப நட்டக் கணக்கு: ஒரு நிறுமக் காட்டும் இலாபமும் நட் டமும்.

**profit and loss appropriation account** – இலாப நட்டப் பகிர் வுக் கணக்கு.

**profiteer** – கொள்ளை இலாபம் அடிப்பவர்: ஒரு பொருள் பற் றாக் குறையாக இருக்கும் பொழுது, அதை அதிக விலைக்கு விற்று ஆதாயம் தேடு பவர்.

**proforma invoice** – முன் இடாப்பு: இறுதிப்பட்டியலுக்கு முன்னதாக அனுப்பப் படுவது.

**promissory note** – உறுதி மொழி முறி: கடன் வாங்குபவர் கடன் கொடுப்பவருக்கு எழுதிக் கொடுப்பது. இதில் எல்லா வரையறைகளும் இருக்கும்.

**promoter** – உயர்த்துபவர்: ஒரு நிறுமத்தை உருவாக்கி நிலை நிறுத்துபவர்.

**property** – சொத்து: ஈட்டப்படும் பொருள். இருவகை. புலனா வது: மனை, நிலம். புலனா காதது – முதல், பங்கு.

**property accounts** – சொத்துக் கணக்குகள்: உண்மைக் கணக் குகள். சரக்குகளும் உடை மைகளும்.

**proposed dividend** – தீர் மானித்த இலாப ஈவு.

**prospectus** – வாய்ப்பறிக்கை: தகவல் அறிக்கை. ஒரு நிறுமத் தின் பங்குகள் புது வெளியீடு பற்றிய தகவல் அறிக்கை. இதன் மூலம் ஒரு நிறுமம் தன் பங்கு களைப் பொதுமக்களுக்கு விற் றுப்பணம் திரட்டும்.

**provision** – ஒதுக்கீடு: இலாபத் தில் குறிப்பிட்ட நற்செயலுக் காக ஒதுக்கப்படும் தொகை– படிப்புதவித் தொகை.

**provident fund** – நலநிதி: ஊழி யர் குறிப்பிட்ட ஊதிய

அளிப்பிலிருந்து உருவாகும் தொகை. ஓய்வு பெறும் பொழுது கிடைப்பது.

**provision for repairs and renewals account** – பழுது பார்த்தல் புதுப்பித்தல் ஒதுக் கீட்டுக் கணக்கு: ஐந்தொகை யில் செலவினத்தில் ஒதுக்கப் படுவது.

**proxy** – மாற்றாள்: ஒரு நிறுமத் தில் ஒருவர் மற்றொருவருக் காகச் செயல்படுதல்.

**public company** – பொது நிறு மம்: பங்குச் சந்தை மூலம் பொது மக்களுக்குப் பங்குகள் அளிக்கும் நிறுமம்.

**public debts** – பொதுக் கடன் கள்: பொருளாதாரத்தின் பொதுத்துறைக் கடன்கள்.

**public issue** – பொது வெளி யீடு: புதிய பங்குகளைப் பொது மக்களுக்கு வழங்குதல்.

**public limited company** – பொது வரையறை நிறுமம்: நிறுமச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட அமைப்பு.

**public sector** – பொதுத்துறை: அரசு சார்ந்த நிறுவனம். கலப் புப் பொருளாதாரத்தின் ஒரு கூறு.

**purchases** – கொள்முதல்: தன் வாடிக்கையாளரிடம் விற்கும் நோக்குடன் வணிகர் ஒருவர் வாங்கும் சரக்கு.

**purchases book** – கொள்முதல் ஏடு: வேறு பெயர்கள் வாங்கு நாளேடு, கொள்முதல் குறிப் பேடு. இடாப்பு ஏடு. கடன் பேரில் சரக்குகள் வாங்குவது மட்டும் இதில் பதிவு செய்யப் படும்.

**purchase consideration** – கொள்முதல் மறுபயன்.

**purchase day book** – கொள் முதல் நாள் பேரேடு: முதன் மைப் பதிவேடு. இடாப்புப் பட்டியல்கள் பதிவு செய்யப் படுவது.

**purchase ledger** – கொள்முதல் பேரேடு: தனியார் கணக்குகள் எழுதப்படுவது.

**purchases return** – கொள் முதல் திருப்பம்: வாங்கியவர் விற்றவரிடம் தேவையில்லாத சரக்கைத் திரும்ப அனுப்புதல்.

**purchase return book** – கொள் முதல் திருப்பேடு: சரக்கு விற் றவருக்குத் திருப்பியனுப்பப் படும் சரக்கு இதில் பதியப்படும். வேறு பெயர் வெளித்திருப்ப ஏடு.

# Q

**qualified acceptance** – தகுதி யேற்பு: மாற்றுண்டியலின் ஏற்பு. அதன் வரையறுபட்ட விளைவிலிருந்து வேறுபடு வது.

**qualified report** – தகுதியறிக்கை: ஒரு நிறுமத்தின் உண்மையான நிலையைக் காட்டும் தணிக்கையாளர் அறிக்கை.

**quality control** – தரக்கட்டுப்பாடு: பல நிலைகளில் உற்பத்தி யாகும் பொருள்களின் தரத்தை உறுதி செய்தல்.

**quick assets** – விரைவுச் சொத்துகள். பா. liquid assets.

**quorum** – சிற்றெண்: குறைவெண். ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகள் சட்ட இணக்கம் பெற, அக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியவர்களின் மிகக்குறைந்த எண்ணிக்கை. இது நிறுவனத்திற்குத் தகுந்தவாறு மாறுபடும்.

**quota**– பங்களவு: வரையறையளவு. ஒரு குறிப்பிட்ட பொருளின் இறக்குமதி ஏற்றுமதி பற்றிய வரம்பு. பங்காளர்கள், உரிமங்கள் வழங்குவதன் மூலம் கட்டுப்படுத்தப்படுபவை. ஒ.ration.

**quotation**– விலைப்புள்ளி:
1) ஏற்புடைய பங்குச் சந்தையில் ஓர் ஈட்டின்குறிப்பு.
2) விற்பனையாளர் தன் சரக்குகளை விற்க விரும்பும் விலை.
3) கூறும் விலை.

**quoted price**– கூறும் விலை; ஓர் ஈடு அல்லது பண்டத்தின் அலுவலக விலை. செய்தித்தாள்களில் விலை கூறப்பட்டிருக்கும்.

# R

**rate of exchange**– பரிமாற்று வீதம்: ஒரு செலாவணி மற்றொரு செலாவணியில் குறிக்கப்படும்விலை எ–டு. ரூபாய் – டாலர்.

**rate of interest**– வட்டி வீதம்: பா வீதங்கள், வரி வீதங்கள்.

**rates**– வீதங்கள்: தகவுகள். கட்டண வீதங்கள், வரி வீதங்கள்

**rationalization**– சீராக்கம்: ஒரு நிறுமத்தின் திறன், இலாபம் ஈட்டல் ஆகியவற்றை உயர்த்த, அதைத் திருத்தி அமைத்தல். இது அகச் சீராக்கம், புறச் சீராக்கம் என இருவகை.

**ready-made cloth**– ஆயத்த ஆடை: உடன் பயன்படுவதற்கேற்ற பலவகை ஆடைகள். ஆடை தயாரித்தல் ஒரு பெருந்தொழில்.

**real estates** – மெய்ச் சொத்துகள்: வீடு, நிலம் முதலியவை.

**real investment** – மெய் முதலீடு: முதலீட்டுக் கருவித் தொகுதிக்குச் செய்யப்படும் செலவு. எ–டு. தொழிற்சாலை, ஆலை, பள்ளி, அணைக்கட்டு.

**realization account** – கைவரு கணக்கு: சொத்துகள் விற்கும் பொழுது அதைப் பதிவு செய்யப்பயன்படுங் கணக்கு. அதிலிருந்து அவ்விற்பனையால் இலாபமா நட்டமா என்பதை உறுதிசெய்யலாம்.

**realized profit** – கைவரு இலாபம் : முடிவடைந்த ஒரு நட வடிக்கையிலிருந்து உண் டாகும் ஆதாயம் எ–டு. சரக்கு விற்பனை.

**real property** – மெய்ச்சொத்து : பா.real estates.

**real value** – மெய்மதிப்பு : பா. பண மதிப்பு.

**rebate**– தள்ளுபடி : 1) வரித்தள் ளுபடி 2) கழிவு : பருவகால விற்பனையில் அளிக்கப் படுவது. எ–டு. ஆடைகள், மின் கருவிகள்.

**receipt** 1) வரவு 2) வரவுச்சீட்டு: பெற்றுக்கொள்ளும் பணத்திற் குக் கொடுக்கப்படும் ஆவணம்.

**receiver**– 1) பெறுநர் 2) உடை மைக்காப்பாளர்: வழக்கி லிருக்கும் உடைமையைக் காக்க, நீதிமன்றத்தால் அமர்த் தப்படுபவர்.

**recommended retail price** – பரிந்துரைக்கும் சில்லறை விலை: ஓர் உற்பத்தியாளர் தன் விளைபொருளுக்குப் பரிந் துரைக்கும் சில்லறை விலை.

**record** – பதிவணம்: ஆவணம். பதிவேடு.

**recovery stock** – மீள்பங்கு: விலை வீழ்ச்சியடைந்த பங்கு. மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்குரிய வாய்ப்பு.

**rectifying entry** – பிழைநீக்கப் பதிவு: ஒரு தலைப்பில் உள்ள தை மற்றொரு தலைப்பில் பற்றோ வரவோ எழுதுவதால் ஏற்படும் பிழை. இதைச் சரிக் கட்டுப் பதிவின் மூலம் நீக்க வேண்டும்.

**redemption** – மீட்பு: கடன் பத்தி ரம் முதிர்ச்சி அடையும் பொ ழுது, அதற்குரிய தொகையைப் பெறுதல். வாங்கும் நாள் அதில் குறிக்கப்பட்டிருக்கும்.

**redemption date** – மீட்பு நாள் : ஓர் ஈட்டை மீட்கும் நாள்.

**real account** – மெய்க் கணக்கு: நிலம், கட்டடம், முதலீடு முதலியவற்றிற்குரிய பேரேட்டுக் கணக்கு. பெயரளவு கணக்கி லிருந்து வேறுபடுவது.

**reducing balance method**– குறைந்துசெல் இருப்பு முறை.

**reducing instalment method** – குறைந்து செல் தவணை முறை.

**reference** – 1) பார்வை 2) குறிப்புரை.

**registered capital** – பதிவு முதல்: பா, share capital.

**registered company** – பதிவு நிறுமம்.

**registered name** – பதிவுப் பெயர்.

**registered office** – பதிவலுவலகம்.

**registered post** – பதிவஞ்சல்: பாதுகாப்பான ஆவணங்களைப் பதிவு செய்து அஞ்சல் வழி அனுப்புவது. போய்ச் சேர்வது உறுதி.

**registrar of companies** – நிறுமப் பதிவாளர்.

**registration fee** – பதிவுக் கட்டணம்.

**reissue** – மறுவெளியீடு: பங்கை மீண்டும் வெளியிடுதல்.

**remuneration** – ஊதியம்: 1) ஒரு பணி செய்யப்பட்டதற்காகக் கொடுக்கப்படும் தொகை. எ–டு. மேற்பார்வை ஊதியம். 2) சம்பளம்.

**rent**– 1) தீர்வை: நிலத்தீர்வை 2) வாடகை: வீட்டு வாடகை.

**rent control** – 1) தீர்வைக் கட்டுப்பாடு 2) வாடகைக் கட்டுப்பாடு.

**repatriates bank** – தாயகம் திரும்பியோர் வங்கி: ஒரு மைய அரசு நிறுவனம்.

**replacement cost** – மாற்றீட்டுச் செலவு : ஒரு நிறுமத்தின் சொத்துகள் மாற்றியமைக்கப்படும் விலை.

**report** – அறிக்கை: ஆண்டு அறிக்கை, தலைவர் அறிக்கை, இயக்குநர் அறிக்கை. நிறுமக் கூட்டத் தொடர்பானது.

**research and development, R and D** – ஆராய்ச்சியும் வளர்ச்சியும்: புதிய வினை பொருள்களையும் தொழில் முறைகளையும் உருவாக்க அரசும் தொழில் நிறுவனங்களும் மேற்கொள்ளும் சீரிய முயற்சி. ஓர் இன்றியமையாத்துறை.

**reserve** – காப்பு இருப்பு : ஒரு நிறுமத்தின் பங்கு முதல் அல்லாத முதலின் பகுதி. ஆதாயத்திலிருந்து அல்லது பெயரளவு மதிப்புக்கு மேலுள்ள பங்கு முதல் வெளியீடுகளிலிருந்து வருவது.

**reserve capital** – காப்பு முதல்: அழையா முதல். ஒரு நிறுமத்தின் வெளியிடப்பட்ட முதலின் பகுதி. காப்பாக வைக்கப்பட்டு, நிறுமம் கலையும் பொழுது அழைக்கப்படுவது.

**reserve fund** – காப்பு நிதி நிறுமக்காப்புக்காக உள்ளது.

**resolution** – தீர்மானம் : ஒரு நிறுமக் கூட்டத்தில் கொண்டு வரப்படும் தீர்மம் (மோஷன்), நிறைவேற்றப்படும் பொழுது தீர்மானவாவது. இது பொதுத் தீர்மானம். சிறப்புத்தீர்மானம் தனித் தீர்மானம் என மூவகை. பின் இரண்டுக்கும் குறிப்பிட்ட கால அறிவிப்பு தேவை. அதற்குப்பின்னரே பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட வெண்டும்.

**restrictive endorsement** – தடை வரம்பு மேலொப்பம்: மாற்றுண்டியலில் செய்யப்படுவது. மேலொப்பம் செய்யப்படுபவரின் உரிமையை எல்லைப் படுத்துவது.

**retail**– சில்லரை.

**retail sales** – சில்லரை விற்பனை.

**retailer** – சில்லரை வணிகர்: சரக்குகளை மொத்த வணிகரிடமிருந்து வாங்கிச் சில்லரையாக விற்பவர். சில்லரை வணிகம் மூவகை ; 1) பன்மக்கடைகள் 2) கூட்டுறவுச் சில்லரை விற்பனை 3) தனிச் சில்லரை விற்பனை.

**return** – 1) திருப்பம் : முதலீட்டு வருவாய் அதன் செலவின் விழுக்காடாகத் தெரிவிக்கப் படுவது. கொள்முதல் திருப்பம், விற்பனைத் திருப்பம் என இரு வகை 2) புள்ளித்தாக்கல்: ஆண்டுப் புள்ளித்தாக்கல் பா. return on capitals.

**returned cheque** – திரும்பிய காசோலை: காசோலை கொடுப்பவர் கணக்கில் பணம் இல்லாத காரணத்தால் பெறுபவரிடம் அக்காசோலைத் திரும்பச் செல்லும்.

**return on capital** – முதல் மீதான திருப்பம்: பயன்படுத்தப்படும் முதலின் விழுக்காட்டால் ஒரு நிறுவத்தின் ஆதாயங்கள் தெரிவிக்கப்படுபவை. இது ஒரு நிறுமத்தின் திறனை வெளிப்படுத்துவது.

**returns in-wards** – உள்திருப்பங்கள்: பிடிக்காததால் வாடிக்கையாளர் ஒரு நிறுவனத்திற்குத் திருப்பி அனுப்பும் சரக்குகள்.

**return outwards**– வெளித்திருப்பங்கள் : பிடிக்காத காரணத்தால் ஒரு நிறுவனம் தான் வாங்கிய சரக்குகளை வழங்கியவருக்கே திரும்ப அனுப்புதல்.

**revaluation of assets** – இருப்பு மறுமதிப்பீடு: இருப்புகளை மதிப்பு உயர்வு காரணமாகவோ பணவீக்கக் காரணமாகவோ ஒரு நிறுவனம் மறுமதிப்பீடு செய்யும்.

**revenue account** – வருவாய்க் கணக்கு: வணிக நடவடிக்கைகளிலிருந்து வரும் வருமானத்தைப் பதிவு செய்யுங் கணக்கு ஒ. capital account.

**revenue expenditure** – வருவாயினச் செலவு: ஒரு நிலைச் சொத்து செம்மையாக இயங்கப் பயன்படும் பராமரிப்புச் செலவு. தவிர, ஒரு தொழிலின் வருவாய் ஈட்டும் திறம் குன்றாமல் பேணும் செலவு.

**revenue profit** – வருவாய் இலாபம்: நடை முறை இலாபம். இரு வகை இலாபங்களில் ஒன்று. மற்றொன்று முதலின இலாபம்.

**revenue receipts** – வருவாயின வரவுகள்: முதலீட்டு வட்டி, பங்காதாயம் முதலியவை.

**revenue reserve** – வருவாய் இருப்பு பா. reserve.

**rights issue** – உரிமை வெளியீடு: பங்குச் சந்தையில் விலைப் புள்ளி வழங்கிய நிறுமங்கள் புதிய முதல் எழுப்பும் முறை. புதிய பங்குகள் பரிமாற்றுக்காக இது செய்யப்படும்.

**ring** – வணிக வட்டாரம் : 1) உற்பத்தியாளர் கூட்டம் ஒரே விலையில் பொருள்கள் விற்கக் கூடுவது 2) ஏலதாரர் கூட்டம்.

**risk** – இடர் : வருந்துவதற்குரிய நிகழ்வு. எ–டு. கை துண்டிக்கப்படுதல் பா. peril.

**risk capital** – இடர்முதல் : இடர் உள்ள திட்டத்தில் இடப்படும் முதல். அதாவது, ஒரு புதிய முயற்சியில் பயன்படுத்தப்படும் முதல்.

**royalty** – உரிமைக்கொடை : உரிமைத் தொகை. 1) அறிவுச் சொத்துரிமை: நூலுரிமை 2) கனிம உரிமை: கனிமங்கள் விற்கப்படுவதற்காக. அதன் உரிமையாளருக்குக் கொடுக்கப்படுந்தொகை.

# S

**salary** – ஊதியம்: சம்பளம். பணியாளர் மாதந்தோறும் வாங்கும் மொத்தத் தொகை.

**sale or return** – விற்பனை அல்லது திருப்பம் : விற்றவை போக, எஞ்சியவற்றை விற்பவர் வாங்குபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் வாணிக நிபந்தனை அமைதல்.

**sales** – விற்பனை : இது விற்ற சரக்கு. தொழிலில் விற்றுமுதல் எனப்படுவது.

**sales day book** – விற்பனை நாள் ஏடு: முதன்மைப் பதிவேடு. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட இடாப்புகள் இதில் பதிவு செய்யப்படும். இதிலிருந்து வாடிக்கையாளரின் தனிக் கணக்குகளுக்குப் பதிவுகள் மாற்றப்படும். அதே போல, இடாப்புகளின் மொத்தம் பெயரளவுப் பேரேட்டிலுள்ள விற்பனைக் கணக்கில் பதிவு செய்யப்படும்.

**sales ledger** – விற்பனைப் பேரேடு: ஒரு நிறுமம் வாடிக்கையாளர்களின் தனிக் கணக்குகளைப் பதிவு செய்வது. இதிலுள்ள இருப்பு மொத்தம், நிறுமம் வணிகக் கடனாளர்களைக் குறிக்கும்.

**sales management** – விற்பனை மேலாண்மை : திட்டமிட்ட அங்காடி வழிமுறையில் விற்பனை ஆற்றலை ஊக்குவித்தல், ஆள் அமர்த்தல், ஆளுதல் ஆகியவற்றைக் கண்காணித்தல் ஆகும்.

**sales proceeds** – **விற்பனைத் தொகை.**

**sales promotion** – **விற்பனை உயர்வு :** ஒரு விளைபொருளின் விற்பனயை உயர்த்த விளம்பரம் மூலம் வடிவமைக்குஞ் செயல்.

**sales representative** – **விற்பனைப் பேராளர்:** ஒரு நிறுமத்திற்காக அதன் பணியாளராக இருந்து, அதன் சரக்குகளை விற்பவர். விற்பனைத் தொகையில் இவருக்கும் கழிவுண்டு.

**sales return** – **விற்பனைத் திருப்பம்:** உள் திருப்பம். சரக்கு தரங்குறைந்திருப்பின், வாங்கியவர் அதை விற்றவருக்குத் திருப்பியனுப்புதல்.

**sales return book** – **விற்பனைத் திருப்ப ஏடு:** வாங்கியோர் திருப்பியனுப்பும் சரக்கு, இதில் பதியப்படும். உள்திருப்ப ஏடு.

**sales tax** – **விற்பனை வரி :** சரக்குகளின் விற்கும் விலையின் அடிப்படையில் அமையும் வரி.

**sample** – **மாதிரி:** மொத்த சரக்குகளைக் குறிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் சிறு அளவு. எ–டு. சவர்க்காரம்.

**savings** – **சேமிப்புகள்:** வருமானத்தில் செலவுபோக மீதி இருப்பவை. பெரும் பொருளியலில் இச்சேமிப்பு ஓர் இன்றியமையாக் கருத்து.

**savings account** – **சேமிப்புக் கணக்கு:** வங்கியில் வைக்கப்படும் சிறு தொகைக் கணக்கு. இதற்கு வட்டியுண்டு.

**savings ratio** – **சேமிப்பு வீதம்:** செலவழிக்கக் கூடிய வருமானத்திற்கும் தனியாட்களின் சேமிப்புகளுக்கும் இடையே உள்ள வீதம்.

**scrip** – **உரிமை ஆவணங்கள்:** பங்குகளின் உரிமையை விளக்கும் சான்றிதழ்கள்.

**scrip issue** – **உரிமை ஆவண வெளியீடு:** வேறு பெயர்கள் ஊக்கத் தொகை வெளியீடு முதலாக்க வெளியீடு, தடையிலா வெளியீடு.

**secret reserve** – **மறைகாப்பு:** இருப்பு நிலைக் குறிப்பில் காட்டப் படாதது. வங்கி, காப்பீட்டுக் கழகம், மின்னாற்றல் நிறுமம் ஆகியவற்றில் இக்காப்பு ஏற்படுத்தப்படுகிறது.

**secured debenture** – **ஈட்டுக் கடன் ஆவணம்:** சொத்தை ஈடுகாட்டிப் பெறும் கடன் பத்திரம் எ–டு. அடமானக் கடன் பத்திரங்கள்.

**sectional balancing** – **பகுதி இருப்புக் கட்டல்.**

**secured liability** – **ஈட்டுப் பொறுப்பு:** ஈடுள்ள கடன்.

**security** – **ஈடு :** பிணையம். வாங்கும் கடனுக்கு ஈடாக வைக்கப்படும் சொத்து.

**selling costs** – **விற்கும் செலவுகள்:** ஒரு விளை பொருளை விற்க ஆகும் செலவுகள். இவற்றில் விளம்பரம், பின் விற்பனைப் பணி, ஊதியம், கழிவு முதலியவை அடங்கும்.

**service** – **பணி :** ஒரு பொருளாதாரச் சரக்கு உழைப்பு, திறம் முதலிய வடிவத்தில் அமைந்து மனித மதிப்புள்ளதாக இருக்கும்.

**service station** – **பணிவழங்கு நிலையம் :** ஒரு கருவித் தொகுதிக்குப் பழுது பார்ப்பு, பணி பார்ப்பு முதலியவற்றை வழங்குவது.

**services, consumer** – **பல நிலைப் பணிகள்:** உணவு வழங்கல், வெளுத்தல், விசை இயல் முதலிய தொழில்கள், தொழிற் சாலையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: 1) பிரிப்புத் தொழிற்சாலை 2) உற்பத்தித் தொழிற்சாலை 3) பணித் துறைகள்.

**services, professional** – **தொழிற்பணிகள்:** கணக்கர், வழக்கறிஞர், மருத்துவர்கள் முதலியவர்கள் வழங்கும் பணிகள்.

**settlement** – 1) **கடன் அடைப்பு:** பற்றுக்கணக்கு, இடாப்பு முதலியவற்றிற்குரிய தொகையைக் கொடுத்தல்.

2) **உடைமைப்பாடு :** சட்டப்படி ஒருவர் தம் சொத்தைப் பிறருக்கு ஆவணம் எழுதி உரிமை மாற்றுதல் 3) **தீர்வு:** ஓர் உரிமை இயல்வழக்கு அல்லது தொழில் தகராறு இருதரப்பினருக்கிடையே ஏற்படும் உடன்பாட்டின் மூலம் முடிவுக்கு வருதல்.

**settlor** – **உடைமைப்பாட்டாளர்:** உடமைப்பாடு அல்லது அறக்கட்டளையை உருவாக்குபவர்.

**share** – **பங்கு:** ஒரு நிறுமத்தை வரையறைப்படுத்தும் பங்குத் தொகை. **I) பொது வகைகள்:** 1) பொதுப் பங்குகள் 2) முன்னுரிமைப் பங்குகள்.

**II) பிறவகைகள்:** 1) பின்னுரிமைப்பங்கு 2) குவி முன்னுரிமைப் பங்கு 3) நிறுவனப் பங்கு 4) பாதி செலுத்தப்பட்ட பங்கு 5) விரும்புபொதுப் பங்கு 6) மீட்பு முன்னுரிமைப் பங்கு 7) தவணைப் பங்கு 8) ஒப்பிய பங்கு.

**share account** – **பங்குக் கணக்கு:** வைப்பு நிதிக் கணக்கு.

**share capital** – **பங்குமுதல்:** ஒரு நிறும முதலின் பகுதி. பங்குகள் வெளியீட்டினால் உண்டாவது.

**share capital, authorised** – **ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல்:**

வேறு பெயர்கள் பதிவு செய்யப் பட்ட முதல், பெயரளவு முதல். சட்டத்திட்டப்படி ஒரு நிறுமம் எழுப்பிய முதலின் தொகை.

**share capital, fully paid** – முழுதும் செலுத்தப்பட்ட பங்கு முதல் : பங்கின் முழுச் சம மதிப் புக்குப் பங்குதாரர்கள் தொகை செலுத்துதல். பங்கு முதலில் ஒரு பகுதி செலுத்தப்படும் முதல் அழைத்த முதல் ஆகும்.

**share capital, issued** – வெளி யிட்ட பங்கு முதல்: வேறுபெயர் ஒப்பிய பங்கு முதல். ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல்.

**share certificate** – பங்குச் சான்று: பங்குரிமையைத் தெரி விக்கும் ஆவணம். இதில் அதற் குரிய அனைத்து விவரங்களும் இருக்கும்.

**share discount** – பங்கு வட்டம்: பங்குத் தள்ளுபடி.

**share exchange** – பங்கு பரி மாற்று.

**share holder** – பங்குதாரர் : ஒரு நிறும உறுப்பினர்: பங்கு உரிமையாளர்.

**share option** – பங்கு விருப்ப உரிமை: ஒரு நிறுமத்தில் புதி தாகச் சேரும் வேலையைளர் களுக்குப் பங்குகள் வாங்க அளிக்கப்படும் விருப்ப உரிமை பா. option.

**share premium** – பங்கு முனைமம்: பங்கிற்காகச் செலுத்தப்படும் தொகை. பங் குத் தொகைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**share premium account** – பங் குத் தொகைக் கணக்கு பா. share premium.

**share register** – பங்குப் பதி வேடு: வரையறுக்கப்பட்ட நிறு மம் வைப்பது. பங்கு பற்றிய முழு விவரங்களும் இருக்கும்.

**share splitting** – பங்குப் பிரிப்பு: சிறிய அலகுகளாக ஒரு நிறுமத்தின் பங்கு முதல் பிரிக்கப்படுதல்.

**share transfer** – பங்கு மாற் றுகை பா. transfer deed.

**ship broker** – கப்பல் தரகர்: கப் பல்களை வாடகைக்கு ஒழுங்கு செய்து கொடுப்பவர்.

**shipped bill** – கப்பல் உண்டி யல்: குறிப்பிட்ட கப்பலில் குறிப்பிட்ட சரக்குகள் ஏற்றப்பட் டுள்ளன என்பதற்குரிய பட்டியல்.

**shipper** – கப்பல் நிறுவனம்: ஏற்றுமதி இறக்குமதி செய்யும் அமைப்பு.

**shipping and forwarding agent** – கப்பல் மற்றும் அனுப்பும் முக வர் : கடல், காற்று, இருப்பு வழி, சாலை ஆகியவை வழியாகச் சரக்குகள் அனுப்புவதில் தேர்ச்சியுள்ளவர்.

**shipping documents** – கப்பல் ஆவணங்கள்: வங்கிக்கு ஏற்று

மதியாளர்கள் அளிக்கும் ஆவணங்கள். இவற்றில் வணிக இடாப்பு, கப்பல் உண்டியல், காப்புறுதிமுறி, எடைக் குறிப்பு, தரச் சான்றிதழ், ஏற்றுமதி உரிமை முதலியவை இருக்கும்.

**ships report** – **கப்பல் அறிக்கை:** துறைமுகத்திற்குக் கப்பல் வந்து சேர்ந்ததும் கப்பல் தலைவர் துறைமுக அதிகாரிகளுக்கு அளிக்கும் அறிக்கை. கப்பல், குழு, பயணிகள், சரக்குகள் பற்றிய விவரங்கள் இருக்கும்.

**shorts** – **குறுகுகள் :** குறைவாக உள்ள ஈடுகள், பண்டங்கள், செலாவணிகள்.

**short term capital** – **குறுகிய கால முதல்:** குறுகிய காலத்திற்கு ஒருதவிர்க்க முடியாத தேவையை நிறைவு செய்ய எழுப்பப்படும் முதல் எ–டு. வங்கிக் கடன்.

**short term interest rates** – **குறுகிய கால வட்டி வீதங்கள் :** குறுகிய கால கடனுக்குரியவை. இவை அதிகமிருக்கும்.

**short working** – **குறை உற்பத்தி:** ஒரு வகைச் சொத்துக் கணக்கு. எப்போதும் பற்று இருப்பையே காட்டுவது.

**short working suspense account** – **குறை உற்பத்தி அனாமத்துக்கணக்கு.**

**shrinkage** – **சுருக்கம்:** விற்பனை என்று பதிவு செய்யப்படாமல் சில்லறை விற்பனையிலிருந்து மறையும் சரக்குகள், உடைந்தவை, சிதைந்தவை திருட்டுப் போனவை முதலியவை இதில் அடங்கும்.

**sight bill** – **பார்வை உண்டியல்:** பார்த்ததும் கொடுக்கப்படும் மாற்றுச்சீட்டு.

**sight draft** – **பார்வை வரைவோலை:** பார்த்தவுடன் பணம் கொடுபடும் மாற்றுண்டியல்.

**simple interest** – **தனிவட்டி:** தனித்துக் கணக்கிடப்படுவது. நூற்றுக்கு 12% 18% 24% என்று கணக்கிடப்படுவது.

**single entry system** – **ஒற்றைப் பதிவு முறை:** கணக்கு எழுதும் முறைகளில் ஒன்று. தொழில் நடவடிக்கையில் ஒரு நிலைமட்டுமே பதிவு செய்யப்படுவது. பண நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இதில் பணக் கணக்கும், கடன் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை ஆள்சார் கணக்குகளும் பதிவு செய்யப்படும்.

**sinking fund** – **கடன்தீர் நிதி:** அழிவுறும் சொத்தை மாற்றீடு செய்ய ஏற்படுத்தும் நிதி. வேறு பெயர் கழிவு நிதி. சொத்தைப் புதுப்பிக்கவும் பொறுப்பை மீட்கவும் பயன்படுவது.

**sleeping partner** – **செயலறு கூட்டாளி:** தூங்கு கூட்டாளி. கூட்டாண்மையில் முதலீடு செய்

பவர். ஆனால், வணிகக் செயல்களில் பங்கு கொள்ளா தவர்.

**social security** – **சமூகப் பாது காப்பு:** வேலையற்றோர், நோயுற்றோர், ஓய்வு பெறுவோர் முதலியோருக்கு அளிக்கப்படும் அரசுப்படிகள்.

**soft commodities** – **மென் பண் டங்கள்:** உலோகமல்லாதவை: கோகோ, காப்பி, சர்க்கரை.

**soft loan** – **மென்கடன்:** குறைந்த வட்டியுள்ள கடன்.

**sole agency** – **தனிமுகமை :** ஓர் எல்லையில் உட்பட்ட காலத் திற்கு ஒரு பொருளை விற்கத் தனி உரிமை உடையது.

**sources of finance** – **நிதி மூலங்கள்:** ஒரு நிறுமம் தான் வேண்டும் நிதிநிலை பெறும் தலைவாய்கள். இரு வகை.

1) **அகமூலங்கள்:** பங்குமுதல், சேர்ப்பு ஆதாயங்கள்.

2) **புற மூலங்கள்:** கடனீட்டு ஆவண வெளியீடு, பொது மக்கள் வைக்கும் வைப்புத் தொகைகள், வணிக வங்கிக் கடன்கள்.

**special crossing** – **தனிக்கீறல்:** கீறல்வரிகளுக்கிடையே வங்கி யின் பெயர் எழுதப்பட்டிருக் கும். அந்த வங்கியிலேயே பணம் பெற இயலும்.

**speculation** – **உய்மான வணி கம்:** ஊக வணிகம். கொள்ளை இலாபம் ஈட்ட ஒன்றை வாங்கு தல் அல்லது விற்றல்.

**sponsor** – 1) **வழங்குபவர்:** மக் கள் ஊடகத்தில் ஒரு நிகழ்ச் சியை அளிப்பவர்.

2) **வெளியீட்டகம்:** ஒரு நிறு வனத்தின் ஒரு புதிய பங்கு வெளியீட்டைக் கையாளும் இல்லம்.

**spot goods** – **அவ்விடப் பொருள்கள்:** அவ்விடத்தி லேயே உடன் கிடைக்கும் பொருள்கள்.

**spot price** – **அவ்விட விலை:** அவ்விடப்பொருளின் விலை. இது முன்னோக்கு விலைக்கு மிகுதியானது.

**squeeze** – **முடக்கம் :** பணவீக் கத்தைத் தடுக்க அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள். இது பங்கு ஈவு முடக்கம், பற்று முடக்கம், வரு மான முடக்கம் எனப் பல வகை.

**stabilizers** – **நிலை நிறுத்திகள்:** வேலை வாய்ப்பு, உற்பத்தி, விலைகள் ஆகியவற்றில் ஏற் படும் ஊசலாட்டத்தை எல்லைப் படுத்தத் தடையில் பொருளா தாரத்தில் பயன்படும் பொருளி யல் நடவடிக்கைகள்: முன் னேறு வருமான வரி, வட்டி வீதக் கட்டுப்பாடு.

**staff** -- **பணியினர்:** பணிக் குழுவினர் பா. personnel.

**stale cheque** – **நாட்பட்ட காசோலை:** காலாவதியான காசோலை. மாற்றுவதற்குரிய காலம் கடந்தது.

**stamp duty** – **முத்திரை வரி:** ஆவணவரி. ஆவணங்களை முத்திரை இடுவதன் மூலம் கிடைக்கும் வரி.

**standard costing** – **திட்டச் செலவு:** செலவுக்கட்டுப்பாட்டு முறை. கச்சாப் பொருள் விலை, உழைப்பு வீதம், எந்திரச் செலவு, நிலையான மேற் செலவுகள் ஆகியவற்றிற்கு முன் கூட்டியே திட்டச்செலவுகள் உறுதி செய்யப்படுதல்.

**standby agreement** – **சார்பு உடன்பாடு:** அனைத்துலகப் பண நிதியத்திற்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கை.

**standing order** – **நிலையாணை:** ஒரு வாடிக்கையாளர் தான் கணக்கு வைத்திருக்கும் வங்கிக்குப் பெறுநருக்குக் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட தொகையை வழங்குமாறு அறிவுறுத்தல்.

**standstill agreement** – **நீடிப்பு ஒப்பந்தம்:** 1) இரு நாடுகளுக் கிடையே ஏற்படும் உடன்பாடு. இதில் ஒரு நாடு கொடுக்க வேண்டிய கடன் குறிப்பிட்ட தேதிக்குத் தள்ளிப் போடப்படும் 2) பேரக்காரருக்கும் ஒரு நிறுவனத்திற்கு மிடையே ஏற்படும் ஒப்பந்தம்.

**state banks** – **பாரத வங்கிகள்:** இந்திய வணிக வங்கிகள்.

**statement of account** – **கணக் கறிக்கை:** ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தன் வாடிக்கை யாளரிடம் கொண்டுள்ள நடவடிக்கைகளை ஒரு நிறுவனம் பதிவு செய்யும் ஆவணம். இது கொடுக்கல் வாங்கல் பற்றியது.

**statement of affairs** – **நிலை விளக்க அறிக்கை:** நொடித்த ஒருவர் அல்லது கலைப்பு நிலையில் இருக்கும் ஒரு நிறுவனத்தின் இருப்பு பொறுப்பு பற்றிய அறிக்கை.

**statistics** – **புள்ளிஇயல்:** 1) செய்திகளைத் திரட்டி வகைப்படுத்தி எண் வடிவத்தில் அளிக்கும் கணக்குத்துறைப் பிரிவு 2) **புள்ளிகள்:** எண்கள் மூலம் செய்தி தெரிவிக்கப்படும் முறை.

**statutory** – **சட்டமுறை:** இந்தியாவில் இதன்படி பாரத வங்கி, தொழில் நிதிக் கழகம், வாழ்நாள் காப்பீட்டுக் கழகம் ஆகியவை நாடாளுமன்றத்தில் சட்டம் நிறை வேற்றப்பட்டு அமைக்கப்பட்டவை.

**statutory audit** – **சட்டமுறைத் தணிக்கை.**

**statutory books** – சட்டமுறை ஏடுகள்: நிறுமச்சட்டப்படி வைக்கப்படவேண்டிய கணக் கேடுகள்.

**statutory damages** – சட்ட முறை நட்ட ஈடுகள்.

**statutory meeting** – சட்ட முறைக் கூட்டம்: நிறுமச் சட்டப் படி நடக்கும் கூட்டம்.

**statutory report** – சட்டமுறை அறிக்கை: சட்டப்படி தேவைப் படும் அறிக்கை எ-டு. ஆண்டு அறிக்கை.

**sterilization** – ஈடுசெய்தல்: உரு வாகும் பணவீக்க, பணச் சுருக்கம் என்னும் விளைவு களைச் சரிக்கட்டல். அரசு அயல் செலாவணிச் சந்தையில் குறுக்கிடும் பொழுது இவை உண்டாகும்.

**stock** – 1) பங்கு: நிலையான வட்டியுள்ள ஈடு. அரசு அல்லது நிறுமம் வெளியிடுவது 2) இருப்பு: சரக்கு அல்லது முதல் இருப்பு.

**stock appreciation** – இருப்பு உயர்வு: அளவில் கூடுதல் அல் லது குறைதல்.

**stock broker** – பங்குத்தரகர்: பங்குச் சந்தையில் ஈடுகளை வாங்குபவரும் விற்பவருமான முகவர்.

**stock building** – இருப்புக் குவிப்பு: எதிர்கால விற் பனைக்குச் சரக்கு இருப்பை உயர்த்தும் முறை.

**stock control** – இருப்புக் கட்டுப்பாடு.

**stock depreciation** – இருப்புத் தேய்மானம்: இருப்புப் பொருள்கள் தேய்வடைதல் எ-டு. எந்திரம்.

**stock exchange** – பங்குச் சந்தை: ஈடுகள் வாங்கப்படும் விற்கப்படும் அங்காடி.

**stock - in-trade** – வணிக இருப்பு: ஒரு நிறுமம் தன் வணிகத்திற்காக வைத்துள்ள சரக்குகள்: கச்சாப்பொருள் கள், இயைபுறுப்புகள், நடை பெறும் வேலை, முடிந்த பொருள்.

**stock policy** – இருப்பு முறிமம்: ஒரு நிறுவனத்தின் சரக்குகள் பற்றிய காப்புறுதி முறி.

**stock provision** – இருப்பு ஒதுக்கீடு: கணக்கேடுகளில் செய்யப்படும் பதிவு. இது இலாப - நட்டக் கணக்கு பற்றியது. இதற்கு ஒரு தொகை ஒதுக்கப்படும்.

**stock reserve** – இருப்புக் காப்பு.

**stock and debtors system** – இருப்பு – கடனாள் முறை.

**stock-taking** – இருப்பு எடுப்பு: ஆண்டு முடிவில் இருப்பு

மதிப்பை அறிய, அதன் எண்ணிக்கை குறிக்கப்பெறும்.

**stock - turnover** – **இருப்பு விற்றுமுதல்:** ஒரு நிறுவனத்தின் வணிக இருப்பு எத்தனை தடவைகள் ஓராண்டில் விற்கப் பட்டன என்பது.

**strap** – **மூவிருப்பம்:** இது பங்கு அல்லது பண்ட அங்காடி பற்றியது. வைப்பு விருப்பம் ஒன்று: அமைப்பு விருப்பங்கள் இரண்டு. ஒரேகாலத்தில் ஒரே விலை உடையவை.

**strip** – **மூவிருப்பம் :** பா. strap.

**sub-agent** – **துணைமுகவர்:** முகவருக்குத் துணையாக இருப்பவர்.

**sub-lease** – **உட்குத்தகை.**

**subscribed share capital** – **ஒப்பிய பங்கு முதல்** பா. share capital.

**subscriber** – **1) உறுப்பினர் 2) ஒப்பமிடுபவர்.**

**subscription shares** – **ஒப்புதல் பங்குகள் :** அதிக வட்டிதரும் பங்குகள்.

**subsidiary books** – **துணை ஏடுகள் :** பல்வேறு நடவடிக்கை களைப் பதிவு செய்யப் பயன் படுபவை. பலவகை:

1) கொள்முதல் ஏடு 2) விற்பனை ஏடு 3) உள்திருப்ப ஏடு 4) வெளித்திருப்ப ஏடு 5) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு 6) பண ஏடு 7) குறிப்பேடு.

**பயன்கள்:** 1) பணிகளைப் பகிர்ந்தளிப்பது 2) எழுத்தர் திறமையை வளர்ப்பது 3) விரைவில் செயல்முடிதல் 4) வேண்டிய தகவல் உடனுக்குடன் கிடைத்தல் 5) எளிதில் சரி பார்த்தல்.

**subsidy** – **உதவித்தொகை:** சில சரக்குகளை உற்பத்தி செய்பவருக்கு அரசு அளிக்கும் சலுகை. இதனால் பொருள்களை விலை குறைவாக விற்கலாம், அயல் நாட்டோரோடு போட்டி போடலாம். வேலையின்மையைப் போக்கலாம்.

**subsistence crop** – **பிழைப்புப் பயிர்:** தான் நுகர்வதற்கு மட்டும் உழவர் விளைவிக்கும் பயிர் – நெல்.

**sunk capital** – **புதைமுதல் :** செலவிடப்பட்ட ஒரு நிறுமத்தின் நிதியளவு. மதிப்பற்ற சொத்துகளிலோ மீண்டும் பெற முடியாத செத்துகளிலோ செல வழிக்கப்பட்டிருக்கலாம்.

**sunk costs** – **புதைசெலவுகள்:** செய்யப்பட்ட செலவுகள். எதிர் கால பண ஓட்டத்தை அதிகமாக்குவது.

**super profit** – **மீஆதாயம்:** இயல்பான பொருளாதார ஆதாயத்தைவிட அதிக ஆதாயம்.

**super tax** – **மீவரி:** மேல்வரி.

**supplementary costs** – **துணைச்செலவுகள்:** மேற்செல வுகள்.

**supply and demand** – **வழங்கலும் தேவையும்.**

**surety** – 1) **பிணையாள்:** ஒரு வினையில் இன்னொருவருக்கு உறிதியாளராக இருப்பவர் 2) **பிணையம்:** நன்னம்பிக்கை அடையாளமாக வைக்கப்பட்டிருக்கும் பணத் தொகை.

**surplus value** – **மிகைமதிப்பு :** கொடுக்கப்படும் கூலிக்கு மேலாகத் தொழிலாளர், உழைப்பால் உண்டாக்கப்படும் விஞ்சு மதிப்பு. மார்க்ஸ் பொருளாதாரத்தில் ஓர் இன்றியமையாக் கருத்து.

**surrender value** – **ஒப்படைப்பு மதிப்பு:** வாழ்நாள் முறிமத்தில் காப்புறுதி செய்தவருக்குக் காப்புறுதிக் கழகம் கொடுக்கும் பணத் தொகை. முறிமம் முதிர்ச்சியடைவதற்கு முன் உரிய கழிவுடன் கொடுக்கப்படுவது.

**suspense account** – **அனாமத்துக் கணக்கு:** ஒரு நிறுவன ஏடுகளிலுள்ள தற்காலிகக் கணக்கு. இருப்புகளைச் சரிக்கட்டுவதற்காக வைக்கப்படுவது. பேரம் முடியாததால் இருப்புகள் இறுதிநிலையாக்கப்படாமல் இருக்கும்.

**systems analysis** – **அமைப்புப் பகுப்பு:** ஓர் அமைப்பின் சிக்கல்களையும் குறிக்கோள்களையும் மேம்படுத்தக் கணிப்பொறி உதவி கொண்டு ஆராய்வது.

# T

**taken over bid** – **வாங்குபேரம்:** ஒரு தனியாளோ நிறுவனமோ மற்றோரு நிறுவனத்தின் பங்குகளை வாங்க, அதன் பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கும் குறிப்பீடு

**tangible assets** – **புலனாகும் சொத்துகள்:** பார்க்கும் சொத்துகள். தொட்டு உணரக் கூடியவை. எ–டு. எந்திரம், ஆலை. ஒ. intangible assets.

**tanker** – **நீர்மக்கலன்:** நீர்மம், எண்ணெய், ஒயின், நீர்மவளிகள் முதலியவற்றை ஏற்றிச் செல்லும் ஊர்தி. இது கப்பலாகவோ, வானூர்தியாகவோ சரக்குந்தாகவோ இருக்கலாம்.

**targets** – **இலக்குகள் :** ஓர் அரசு பின்பற்றும் பொருளியல் கொள்கையின் குறி எல்லைகள். முழு வேலை வாய்ப்பு, நிலையான விலைகள், மொத்த மனையகப்பொருள்களின் அதிக வளர்ச்சி முதலியவை இவற்றில் அடங்கும்.

**tariff** – 1) **சுங்கவரி:** ஏற்றுமதி, இறக்குமதி வரி 2) **கட்டணம்:** சரக்குகள், விளம்பரம் முதலிய வற்றிற்குரிய கட்டண வீதம்.

**tariff commission** – **சுங்க ஆணையம்:** காப்பு வரி ஆணைக்குழு.

**tariff duty** – **சுங்கத் தீர்வை:** இறக்குமதி வரி.

**taxable income** – **வரி விதிப் பிற்குரிய வருமானம்:** சட்டப் படி ஒருவர் தன் வருவாய்க்குச் செலுத்த வேண்டிய வரி. உரிய சலுகைகள் நீங்க எஞ்சி இருக்கும் வருமானத்திற்குப் போடப்படும் வரி.

**taxation** – **வரிவிதிப்பு:** அரசு அல்லது ஓர் உள்ளாட்சி அமைப்பு தன் செலவினங் களுக்காகத் தனியார் அல்லது கூட்டு அமைப்புகளின் மீது போடும் தீர்வை.

**tax clearance** – **வரித் தீர்வு :** வரி ஏதும் இல்லை என்னும் உறுதி.

**tax relief** – **வரி நீக்கம்:** வரி விதிப்பிற்குரிய தொகை யிலிருந்து கழிக்கப்படும் தொகை.

**technological change** – **தொழில் நுட்ப மாற்றம்:** தானி யங்கல், கணிப்பொறி வழி உற் பத்தி முறை ஆகியவற்றால் உற் பத்தி அளவு உயர்தல்.

**telegraphic address** – **தொலைவரி முகவரி:** ஒரு தனிச்சொல் குறியீடாகப் பயன் படுவது. செலவு குறைவது. தற் பொழுது இதற்கு மாற்று தொலை அதிர்வச்சு, உருநகலி.

**teletext** – **தொலைவழிச் செய்தி:** ஏற்புள்ள தொலைக் காட்சிக் கருவிகள் மூலம் வீடு அல்லது அலுவலகத்திற்குச் செய்தி தெரிவிக்கும் முறை.

**telex** – **தொலை அதிர்வச்சு:** தொலை அதிர்வச்சு எந்திரம் மூலம் எழுத்துச் செய்திகளை உலக அளவில் எந்த இடத்திற் கும் அனுப்புதல் ஒ.teletext.

**teller** – **காசாளர்:** வங்கிப் பணம் கொடுப்பவர். (பாரத வங்கியில் விரைவுக் காசாளர் என்று எழுதப்பட்டிருக்கும்).

**tenancy agreement** – **குடிவார உடன்பாடு:** நிலத்தைச் சாகுபடி செய்ய அதன் உரிமையாளருக் கும் சாகுபடி செய்பவருக்கு மிடையே ஏற்படும் ஒப்பந்தம். பா.lease.

**tenancy right** – **குடிவார உரிமை:** நிலத்தைச் சாகுபடி செய்யும் உரிமை.

**tenant** – **குடிவாரதாரர்:** சாகுபடி உரிமையாளர்.

**tender** – **ஒப்பந்தப்புள்ளி:** ஒரு பொருளை அல்லது வேலை யை அதிகப் பேர விலைக்கு

ஏலம் விடுதல். பொதுவாகக் கட்டுமான வேலைகளில் பயன் படுவது. பழைய பொருள் களை விற்பதிலும் புதிய பொருள்களை வாங்குவதிலும் பயன்படுவது.

**tenor** – கெடு: உறுதிமுறி அல்லது மாற்றுண்டியலுக்குரிய பணம் அதில் குறிப்பிட்டுள்ள படி கொடுபடுவதற்குரிய காலம்.

**term bill** – **தவணை உண்டியல்:** தவணைக்கால மாற்றுச் சீட்டு.

**term loan** – **தவணைக் கடன்:** எந்திரம் முதலியவற்றிற்குத் தவணையின் பேரில் வங்கி கடன் கொடுப்பது.

**term shares** – **தவணைப் பங்குகள்:** குறிப்பிட்ட காலத்திற்குரிய பங்குகள்.

**terms of trade** – **வணிக வீதம்:** ஒரு நாட்டின் இறக்குமதி விலை ஏற்றுமதி விலைத் தொடர்பாகவுள்ள வாணிப வாய்ப்பளவு. இறக்குமதி விலைக்குறியீடு ஏற்றுமதி விலைக் குறியீடு ஆகிய இரண்டிற்குமுள்ள வீதம்.

